
Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර | பக்கம் 24 ரூபா 30.00
ஜூலை 18 - 24, 2013


# வாரமலர் தினமுரசு





THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1023

## மாவை - விக்கினேஸ்வரன்
## வருகிறது வடக்குத் தேர்தல்





## மட்டு-இல் தொடரும் காணித் தகராறு



## ஸ்னோடன் கக்கும் உண்மைகள்

## வாழை இலை

மங்கள, அமங்கல நிகழ்வுகளுக்கு வாழைமரம் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றதோ அதேபோன்று வாழை இலையும் சைவசமயக் கிரியைகளுக்கு வேண்டப்பட்ட ஒரு பொருளாக விளங்குகிறது.

கோவிலில் நடைபெறும் கிரியைகளில் இருந்து சாதாரண ஒரு சுபமங்கள நிகழ்வுவரைக்கும் வாழை இலையானது முக்கியத்துவம் பெறுகிறது. அத்தோடு தமிழரின் கலாசாரப் பின்னணியோடும், பாரம்பரிய பண்பாட்டு முறையோடும் வாழை இலை பின்னிப் பிணைந்து கிடக்கிறது.

மங்களகரமான காரியங்களில் வாழை இலைகளில் உணவு பரிமாறுவது சம்பிரதாய முறை மட்டுமல்ல, வாழை இலைமீது போடப்படுகின்ற உணவுவகைகளை வாழை இலை மேலும் சுவையூட்டுவதகவும் சொல்லப்படுகின்றது.

கோவில்களில் பிரசாதப் படையல்களுக்கு வாழை இலை பிரதான பொருளாகுவதோடு, அது இந்து மக்களின் சமயத்தோடும் வாழ்வோடும் இரண்டறககலந்து விளங்குவதையும் காணமுடிகிறது.

அனந்த நாராயணன், கைவேலி.

ஆன்மீகம்

## இயேசு எதிர்பார்க்கும் கிறிஸ்தவன்

பல சமயங்களில் நாம் இந்த இரண்டாவது மனிதனைப் போல நம் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழுகிறோம். ஓரளவு சரி. ஆனாலும் இன்னும் முன்னேற வேண்டியுள்ளது. அவனது கோரிக்கை ஓரளவு சரி.

ஏனென்றால், தன் தந்தையை அடக்கம் செய்துவிட்டுவர அவன் அனுமதி கேட்டது, தாய், தந்தைக்குரிய கடமையை நிறைவேற்றும் செயலாகும்.

எலியா இறைவாக்கினர், எலிசா இறைவாக்கினரை அழைத்தபோது, "நான் என் தாய், தந்தையிடம் விடைபெற்று வர அனுமதி தாரும். அதன்பின் உம்மைப் பின்செல்வேன்" என்றார். அதற்கு அவர், "சென்று வா, உனக்கு நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டேன்!" என்றார்.

(1 - 19:20)

இந்த இரண்டாவது மனிதரை மறுக்கவில்லை. ஆயினும் கிறிஸ்தவ வாழ்வு என்பது குடும்பம், சுற்றம் என்ற சிறிய வட்டத்தைத் தாண்டி, சமூகத்தைப் பற்றிப் படர்ந்ததாகி, உலகளாவியதாக இருக்க வேண்டும் என்பது இயேசுவின் எதிர்பார்ப்பு. இதுவே கிறிஸ்தவன் என்னும் உண்மைச் சீடனிம் என்றும் இயேசு விரும்புவது.

## நோன்பை நோற்போம்

நோன்பு உணவைச் சுருக்கி தர்மத்தைப் பெருக்கி மமதையை மடக்கி மற்ற மனிதர்களைப் பற்றி சிந்திக்கச் செய்வதோடு செல்வந்தர் வறியோரின் பசிப்பிணியை அறியவும் அது உதவுகிறது.

நோன்பானது வணக்கங்களில் மிகவும் சிறந்த வணக்கமாகும். இதன் உயர்வுக்கு ஓர் எல்லையை வரையறுத்துக் கூறமுடியாது. நோன்பு நோற்போர்களுக்கு இருவகை சந்தோஷமிருக்கிறது. ஒன்று நோன்பு திறக்கும் நேரம், மற்றொன்று அல்லாஹ்வை தரிசிக்கும் நேரம்.

மனிதர்கள் மகத்தான நோன்பை நோற்று தத்தம் பாவங்களை அவை இரகசியமாகவோ அன்றி பரகசியமாகவோ செய்யப்பட்டபோதும் அவற்றுக்காக மனமுருகி மன்னிப்புக்கோரி நின்றால் அல்லாஹ் அப்பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பான்.

நோன்பின் நோக்கம் ஒரு மனிதனின் ஆத்மீக உணர்வு அபிவிருத்தி அடைந்து அவன் ஒழுக்கமும், நற்குணமும் அடைய வேண்டுமென்பதே. ஆகவே அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து அவன் எமக்கு விதியாக்கிய நோன்பை நோற்போம்.

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1020



### யார் பொறுப்பு

பாராட்டுக்குரியது

தாரமிழந்த கணவன்
தாயை இழந்த பிஞ்சுகள்
விலைவாசி ஏற்றத்தால்
கஞ்சிக்கு வகையின்றி
காய்ந்த வயிற்றுடன்
கவனிப்பார் யாருமின்றி
கவிழ்ந்து கிடக்கும்
நிலைக்கு யார் காரணம்
பஞ்சத்தை மஞ்சத்துக்கழைத்த
வஞ்சகர்கள் யார்?
அரசே என்று
ஆணித்தரமாகச் சொன்னால்
அதை யாரே மறுக்கவல்லார்.

க.கமால்தீன்,
ஏறாவூர் -03




## கவிதைப் போட்டி இல 1023



### அருள்வரம்

மாடிமனை, மலர்மஞ்சம்
கோடி கொடுத்தாலும்
வராத தூக்கம்
பாதையோரப் பரதேசிகளின்
பாசப் பிணைப்பில்
கல்யாணி மீட்டுகிறதே; இது
கடவுள் கொடுத்த
அருள் வரம் இல்லையா?

K.M.A.அஸீஸ்
சாய்ந்தமருது.

உள்ளத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30. 07. 2013

கவிதைப் போட்டி இல. 1023 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### சந்தேகம்

நிழல் படமிங்கு
நிரூபிப்பது
படுகொலையா?
பாசவுணர்வா?
படுகொலையென்றால்
பாவம் பிஞ்சுகள்
பாசவுணர்வென்றால்
பாராட்டுக்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

### இதுவா மார்க்கம்?

பசி போக்க உணவில்லை
தலை சாய்க்க கூரையில்லை
அரவணைக்கத் தாயில்லை
இந்த அவலத்திலிருந்து மீள
குழந்தைகளுக்குப் பருக்கிய
விஷத்தைத் தானும் பருகி
மரணத்தைத் தழுவுவதைத் தவிர
வேறு மார்க்க மில்லையா
இந்த விரக்தியுற்ற மனிதனுக்கு!

அ.சத்தியநகோ.
கண்டி.



### நாலு பணம் நாலு சனம்...

கட்டில் சுகமது
உயிர்விட்டுச்
சவக்கட்டி லேறிப்
போயாச்சோ?
அவளிங்கே
விட்டுச் சென்ற இச்
சிட்டுக்கள் மூன்றும்
இக்கதிக்கு
உள்ளாச்சோ?
நாலு பணம்
நாலு சனஞ்
சேராதான் வாழ்க்கை
நடுத் தெருவில்தான்!

பாண்டியூர்
பொன்.நவநீதன்,

### வாழ்க்கை

அநாதைகள் ஆனாலும்
அன்பு மாறாது
அன்னமில்லாவிட்டாலும்
ஆதரவு இருக்கும்.

எஸ்.பி.பாலமுருகன்,
பிபிலை.

## உங்கள் பக்கம்

### பொதுச்சந்தை தேவை

புதுக்குடியிருப்பு -இரணைப்பாலை பகுதியில் பொதுச் சந்தை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாகவே முன்வைக்கப்பட்டு வருகின்றது.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கு உட்பட்ட இரணைப்பாலைக் கிராமத்தை அண்டிய பகுதிகளில் சுமார் 600இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் சந்தை வசதிகள் அற்ற நிலையில் தினமும் நான்கைந்து கிலோமீற்றர் தூரத்திற்கப்பாலுள்ள புதுக்குடியிருப்புச் சந்தைக்குச் சென்றே பொருட்களைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலை காணப்படுகின்றது.

தற்போது இரணைப்பாலை சுதந்திரபுரம் வீதியோரங்களில் மரக்கறி மற்றும் மீன் வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.

இருந்தபோதிலும் இவற்றில் சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது. இதனால் நோய்கள் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக மக்கள் அஞ்சுகின்றனர். அத்துடன் இவ்வீதியோர வியாபாரத்தில் ஈடுபடுவோர் வியாபாரக் கழிவுகளை அப்படியே விட்டுச் செல்வதனால் குறித்த பகுதி மாசடையும் நிலை ஏற்படுகின்றது.

எனவே, இவ்வாறான சூழலைக் கருத்திற்கொண்டு இரணைப்பாலை பகுதியில் பொதுச்சந்தை ஒன்றை அமைத்துத் தருவதற்கு பிரதேச சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென, மீண்டும் இப்பகுதி மக்கள் வேண்டுகோள்விடுக்கின்றோம்.

கு.தமிழ்ச்செல்வன்,
இரணைப்பாலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

## வாசகர் சாலை

### வாழ்க பல்லாண்டு முரசே!

முரசே நீ வாழ்க! உன் அருமையான கவிதைகள் வாழ்க!! சொற்சுவை, செய்தி, கதை, கட்டுரை, பூலானின் புண்ணிய கதை, சிந்தியாவின் சிரிப்பு, உலகை வியக்க வைத்தவர்கள், எனப் பலவிதமான உன்னத படைப்புக்களை சுமந்து நிற்கிறாய்.

நீ ஆயிரம் ஆண்டுகள் பிறந்து வளர்ந்து என்றும் இன்னும் மெருகேறி வளர என் இதழில் இருந்துவரும் பாராட்டுக்கள் முரசே, உன் பணி தொடர்க!

ந.பிருந்தா, புங்குடுதீவு

### தலைப்புத் தகவல் வியப்புத் தகவல்

பாப்பா முரசு பகுதியில் படிக்கும் மாணவர்களுக்குப் பயனுள்ள விடயங்கள் வெளியாகின்றன. வாரம் தோறும் வருகின்ற தினமுரசில் பாப்பா முரசு கற்போருக்கு கலங்கரை விளக்கமாக விளங்குகிறது.

1020 ஆவது முரசை வாசித்தேன். பாப்பா முரசு பக்கத்தில் பதிவான தபால் பெட்டியின் கதை! என்ற தலைப்புத் தகவல் வியப்புத் தகவல்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

### வலிக்கிறது நெஞ்சு

முரசுக்கு வணக்கம்.
தினமுரசில் இடம்பெறும் அரசியல் கட்டுரைகளுக்கு ஒரு சபாஷ் போடுகின்றேன்.

முரசில் 5ஆம் பக்கத்தில் இடம்பெறும் நிஜக்கதைகளை வாசிக்கும் பொழுது நெஞ்சம் கனக்கிறது, வலிக்கிறது.

வன்னி மண்ணில் இடம்பெற்ற யுத்தத்தால் மக்கள்பட்ட அவலங்களை வரைந்திருக்கிறார் முல்லைமணி.

இவ்வாறு அவர்கள்பட்ட துன்பங்களை எழுத்தாளர்கள் எழுதுவதால்தான் அந்த மக்களின் துன்பங்களை உணரக்கூடியதாக இருக்கின்றது.

எம்.மாலினி,
மொதர

### கொடை வள்ளல்

வாசகர்கள் மத்தியில் தனக்கென ஒரு தனியிடத்தை வைத்திருக்கும் முரசுக்கு வாசக நெஞ்சத்தின் வாழ்த்துக்கள். முரசில் இடம்பெறும் அனைத்தையும் விரும்பி வாசிப்பேன். தகவல்கள், பாப்பா முரசு என்பவை பிரமாதம். சிறுவர் பக்கத்தில் வரும் அரியபல தகவல்களை வழங்கிவருகின்றாய். இன்னும் இவ்வாறான தகவல்களை முரசு வாரி வழங்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோள். சினிமா பகுதி சுவாரசியமாயும், அதில் இடம்பெறும் நடிகர்களின் படமும் சிறப்பாக உள்ளது. மேலும் முரசு இன்னும் வளர வேண்டுமென்பதே எனது அபிப்பிராயம்.

சா. ஆருஷா,
ஹட்டன்.

## வடக்கு மாகாணத்துக்கு வருகிறது

# ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத் தூதுக்குழு

ஒருவார கால உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஐரோப்பிய ஒன்றிய பாராளு மன்றத்தூதுக்குழுவொன்று கடந்த 14ஆம் திகதி அன்று இலங்கையை வந்தடைந்துள்ளது.



தெற்காசிய நாடுகளுடனான உறவுகளுக்கான ஐரோப்பிய பாராளு மன்றத் தூதுக்குழுவின் தலைவரான ஜீன் லம்பேர்ட் தலைமையிலான மேற்படி தூதுக்குழுவினர் தங்களின் ஒருவார கால விஜயத்தின்போது வட மாகாணத்திற்கு பயணிக்கவுள்ளதுடன் அரசாங்கம், எதிர்க்கட்சி மற்றும் ஏனைய குழுக்களின் முக்கியஸ்தர்களையும் சந்தித்து உரையாடவுள்ளனர். எதிர்வரும் செப்டெம்பரில் வட மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளதை முன்னிட்டே அவர்களின் இந்த விஜயம் அமைந்துள்ளதாகத் தெரிகின்றது.

வட மாகாண சபைக்கான தேர்தல் சுதந்திரமாக நடைபெறுவதை கண்காணிக்க சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் வரவழைக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் கூறி வருகின்றனர். எனினும் மேற்படி தேர்தலுக்கான ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்களை வரவழைப்பது குறித்து அரசாங்கம் இன்னமும் அறிவிக்கவில்லை. தேர்தல்களை சுதந்திரத்தன்மையுடன் நடத்த தேவையான அத்தனை ஏற்பாடுகளையும் அரசு மேற்கொண்டுள்ளது என்றும் சர்வதேச கண்காணிப்பாளர்களின் தேவை இருக்காது என்றும் அரசு அண்மையில் அறிவித்தது குறிப்பிடத்தக்கது. எனினும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பார்கள் தேவை எனும் கோரிக்கைகளின் அவசியத்தையும், வட மாகாணத் தேர்தலுக்கு எவ்வாறு தயாராகிறது என்பதை அவதானிப்பதும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்றக் குழுவின் நோக்கமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

அதேவேளை இலங்கையில் நடைபெற்றிருந்த இறுதிக்கால கட்ட யுத்தம் குறித்து தேசிய மட்டத்திலான விசாரணைக்கு மேலாக சுயாதீனமான விசாரணையொன்று நடத்தப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் இந்த வருட முற்பகுதியில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்போர் மற்றும் ஊடகவிலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் பற்றிய முறைப்பாடுகளையிட்டு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் விசனமடைந்துள்ளதுடன் அவற்றுக்குப் பொறுப்பானவர்களை பொறுப்புக் கூற வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க அது ஊக்கப்படுத்துவதாகவும் ஜூன் லம்பேர்ட் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுக்குமுன்னர் இலங்கையில் பொறுப்புக் கூறும் கடப்பாடு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றிற்கான தேவைப்பாட்டினை மீண்டும் வலியுறுத்தும் வகையில் ஐரோப்பிய பாராளுமன்றம் தீர்மானமொன்றையும் நிறைவேற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்குப் பல்கலையிலும் கௌதம புத்தர்!

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடந்த 13ஆம் திகதி அன்று பௌத்த மாணவர்களினதும் விரிவுரையாளர்களினதும் வணக்க வழிபாடுகளுக்காக பௌத்த விகாரையும் புத்தர் சிலையும் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் மட்டக்களப்பு பிரிகேட் இராணுவத் தலைமையக அதிகாரி கேர்ணல் சுதத்த திலகரெட்ண, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கே.கோவிந்தராஜா, பதிவாளர் கே.மகேசன் உட்பட இன்னும் பல பீடாதிபதிகளும் பௌத்த மாணவர்களும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு ஜெயந்திபுரம் விகாரையின் பிரதம சங்க நாயக்கர் உடஹேவாஹெறட்ட சங்கநாயக்க பண்டித பட்டபொல குணானந்த தேரர் புத்த சிலையை பிரதிர்ஷ்டை செய்துவைத்தார்.

1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பௌத்த வழிபாட்டுக்கான ஒரு தலம் இதுவரை இருந்திருக்கவில்லை என்பது பௌத்த மாணவர்களினதும் விரிவுரையாளர்களினதும் குறைபாடாக இருந்து வந்திருக்கின்றது.



# சேதனப் பசளை உற்பத்தி திட்டம்

சேதனப் பசளை உற்பத்தி திட்டத்தை எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் நாடு முழுவதிலுமுள்ள 556 கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக ஆரம்பிக்கவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார். இதேவேளை அநுராதபுரம் மாவட்டத்தில் 41 கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக 20 ஆயிரம் விவசாயக் குடும்பங்களை இணைத்துக்கொண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சேதனப் பசளை உற்பத்தி திட்டத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்குத் தேவையான சகல உபகரணங்கள் மற்றும் ஆலோசனைகளும் அரசினால் இலவசமாக வழங்கப்படவுள்ளதோடு உற்பத்தி செய்யப்படும் பசளையினை கிலோ ஒன்றுக்கு 8 ரூபா வீதம் கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**தமிழ்த் தேசியத்திற்கு முஸ்லிம் சமூகம் செய்த அனுசரணை என்பது மிகப்பெரியது. அளவிட முடியாதது. குறைத்து மதிப்பிட முடியாத ஒன்று. தமிழ்த் தேசியத்தினுடைய அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தூண்களாக முஸ்லீம் சமூகம் இருந்திருக்கிறது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் முஸ்லிம்களின் முதுகிலே எழுதப்பட்ட அடிமைச் சாசனம் என்று எமது மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்கள் சொன்னார். ஆயினும் தமிழர் நலனுக்காக நாம் அதனை சகித்துக்கொண்டு அதற்கு ஆதரவளித்தோம். தமிழர் தரப்பின் காப்பரணாக நாம் இருந்திருக்கின்றோம். ஆனால் தமிழ்த் தேசியம் அதனை மறந்து வாகனேரியில் விவசாயிகளுக்கிடையில் ஏற்பட்ட தண்ணீரப் பிரச்சினையை அரசியலாக்கப் பார்க்கின்றது. அதன் வெளிப்பாடுதான் ஆர்ப்பாட்டம்.**

# கீழ்த்தரமான அரசியலும் சமூக இழப்புக்களும்!

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

தமது கடந்த கால அனுபவங்களிலிருந்து யாரும் எதனையும் கற்றுக் கொள்ளவில்லையென்றால் அவர்களை சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்கள் மனிதர்கள் என்ற உயர் திணைப்பட்டியலில் இருந்து நீக்கி விடுவதைத் தவிர வேறு வழியில்லை.

உரிமைப் போராட்டம் என்ற பெயரில் தொடங்கப்பட்ட ஆயுதப் போராட்டம் ஈடுசெய்ய முடியாத எத்தனையோ இழப்புக்களை நமக்குத் தந்திருக்கிறது. அதேவேளை அதன் மற்றப் பக்கத்தை நின்று நிதானித்து உற்றுக் கவனித்தால் பல்வேறு சாதகமான கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களையும் நமக்கு அது விட்டுச் சென்றிருக்கின்றது.

நமது நாட்டில் சமூகங்களுக்கிடையில் நிலவிவருகின்ற முரண்பாடுகளை நோக்கினால் உரிமைப் போராட்டம், மற்றும் அதனோடு இணைந்த ஆயுத வன்முறைகள் என்பனவற்றால் எத்தனையோ பேரழிவுகளை ஒட்டு மொதத நாட்டு மக்களுமே சந்தித்திருக்கின்றோம்.

போராட்டத்தின் விளைவுகளால் உண்டான பல தொடர் தோல்விகளுக்கு உரிமைப் போராட்டத்தின் சர்வாதிகாரத் தலைமைத்துவமும் 'அதனையே நம்பிக்கொண்டு சாமரம் வீசிய அதியுயர் முட்டாள்தனமும்தான் காரணம் என்பதைக் கற்றுக்கொள்ள அதிக நேரம் எடுக்காது.

ஆயினும் அதனை ஜீரணிப்பதற்கும் சுயபரிசோதனை செய்து கொள்வதற்கும் நம்மில் ஆழமாக உருவாக்கப்பட்டுள்ள "மூளைச் சலவை செய்யப்பட்ட" வசிய மாந்திரீகம் இன்னமும் இடங்கொடுப்பதாக இல்லை.

முஸ்லிம்களை பகைவர்களாகச் சித்தரித்ததுதான் சிறுபான்மையினராகிய தமிழர் உரிமைப் போராட்டம், படுமோசமான இழப்புக்களோடு படுதோல்வியில் முடிந்ததற்கு முழுமுதற் காரணமாய் அமைந்திருந்தது என்பது வெளிப்படையாகத் தெரியும் பெரிய விசயம்.

ஒரு பானைச் சோற்றைப் பகிர்ந்துண்டு வாழ்ந்த ஒரே மொழியைப் பேசும் சகோதர முஸ்லிம் சமூகத்தைப் பகைத்துக் கொண்டது தான் தோல்விக்கான முழுமுதற் காரணம் என்பதை இன்னமும் எஞ்சியிருக்கின்ற மூளைச் சலவை செய்யப்பட்ட புத்திஜீவிகள் உணர மறுக்கிறார்கள்.

தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு முஸ்லிமகளைப் பகைத்துக்கொண்டு அவர்களது ஆதரவையும் அனுசரணையையும் பெற முடியாமல் போன விடயம்தான் முழுமுதற் காரணம் என்று முன்னரேயே தெரிந்துகொண்டோம்.

போராட்டத்தின் பெயரால் மிகக் கொடூரமான முறையில் வடக்கிலிருந்து வெறுங்கையுடன் துரத்தப்பட்ட முஸ்லிம்கள் தமது பூர்வீக இடங்களுக்குத் திரும்பும்போது நேரடியாகவும் மறைமுகமாகவும் கடுமையான எதிர்ப்பு;

முல்லைத்தீவில் முஸ்லிம்களுக்கு முழுமையான கதவடைப்பு, மட்டக்களப்பில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் விரட்டப்பட்டு மீண்டும் தமது பழைய இடங்களுக்குத் திரும்பும் போது "இந்திய வீடமைப்புத் திட்டமா, முஸ்லிம் குடியேற்றமா?" என்ற இனத்துவேஷப் பிரச்சாரம்.

கடைசியாக மட்டக்களப்பு வாகனேரிப் பகுதியில் விவசாயிகளுக்கிடையில் ஏற்பட்ட தண்ணீரப் பிரச்சினையை தமது சொந்த அரசியலுக்காகப் பாவித்த கீழ்த்தரமான காட்சிகளையும் பார்க்க முடிந்தது.

விவசாயிகள் நீர்ப்பாசனம் செய்யும்போது தமது பயிர்கள் வாடிக் கருகிப் போவதற்கிடையில் முன்னுரிமை கொடுத்து நீர் பாய்ச்சி விட வேண்டும் என்பது எங்குமே எழுகின்ற ஒரு பொதுவான பிரச்சினை.

இவ்வாறான அடிபிடிகள், குத்து வெட்டுக்கள் ஒரே சமூகத்துக்குள், குடும்பத்துக்குள் கூட நிகழ்வதுண்டு.

வாகனேரியில் இடம்பெற்றதும் விவசாயிகளின் பிரச்சினையேயன்றி அது தமிழ், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினையல்ல.

ஓடிவந்த வாய்க்கால் நீரை ஒருவர் அணை போட்டு மறிக்க மற்றையவர் அந்த அணையை வெட்டிவிட அங்கு பிரச்சினை உருவாகிவிட்டது.

ஆக, இது அடிமட்ட ஏழை விவசாயிகளின் மட்டத்தில் எழுந்த ஒரு சாதாரண தகராறு. இதைப் போய் ஊதிப் பெருப்பித்து பௌத்த பிக்குவையும் அழைத்துக்கொண்டு சென்று ஆர்ப்பாட்டம் நடத்தி கூக்குரல் போட்டு ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையும் எதிரியாகக் காட்ட முனைந்தது ஒரு புத்தி 'சாலித்தனமான செயலல்ல.

மட்டக்களப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் உண்மையில் வடக்கு, கிழக்கு மாகாணத்திலும் நாட்டிலும் தமிழ், முஸ்லிம் சமூக சகவாழ்வை நெஞ்சார நேசிப்பவர்களாக இருந்திருந்தால் இத்தகைய தங்களது அற்பமான அரசியல் நன்மைக்காகப் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கமாட்டார்கள் என்றே தமிழ், முஸ்லிம் சகவாழ்வை விரும்பும் சகலரும் ஆதங்கப்பட்டுக் கொள்கின்றார்கள்.

ஆயுத வன்முறைகளால் அழிவடைந்து போயுள்ள அத்தனை இழப்புக்களுக்கும் மேலாக இன்று நாட்டு நடப்புக்களை உற்றுக் கவனிக்கின்ற ஒவ்வொருவருக்கும் சிந்தனையில் முதலிடம் பிடிக்கக் கூடியது சிறுபான்மையினரின் ஒற்றுமையேயன்றி வேறொன்றுமாக இருக்கமுடியாது.

ஆனால் இதனைத் தமிழ்த் தேசியம் என்று உரக்கக் குரல் கொடுக்கின்ற சுயநல அரசியல்வாதிகளின் போக்கு, குளிக்கப் போய் சேற்றை வாரிப் பூசிக்கொண்டது மாதிரி ஆகிவிடுகின்றது.

இந்தப் போக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், பிள்ளையான் தலைமை தாங்குகின்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் மீள் பரிசீலனை செய்வது அவசியமும் அவசரமுமாகும்.

ஏனெனில் இனவெறியூட்டப்பட்டு "மூளைச சலவை செய்யப்பட்டவர்கள்" இன்னமும் தமது மனோ இச்சைக்கேற்ப நடந்து கொள்கின்றார்கள்.

இந்தப் போக்குக் குறித்து தமிழர் உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்த போராளியும் தற்போதைய உற்பத்தித் திறன் விருத்தி ஊக்குவிப்பு அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் மனம் நொந்து கொள்கின்றார்.

தமிழ்த் தேசியத்திற்கு முஸ்லிம் சமூகம் செய்த அனுசரணை என்பது மிகப்பெரியது. அளவிட முடியாதது. குறைத்து மதிப்பிட முடியாத ஒன்று.

தமிழ்த் தேசியத்தினுடைய அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தூண்களாக முஸ்லிம் சமூகம் இருந்திருக்கிறது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் முஸ்லிம்களின் முதுகிலே எழுதப்பட்ட அடிமைச் சாசனம் என்று எமது மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்கள் சொன்னார், ஆயினும் தமிழர் நலனுக்காக நாம் அதனை சகித்துக்கொண்டு அதற்கு ஆதரவளித்தோம். தமிழர் தரப்பின் காப்பரணாக நாம் இருந்திருக்கின்றோம். ஆனால் தமிழ்த் தேசியம் அதனை மறந்து வாகனேரியில் விவசாயிகளுக்கிடையில் ஏற்பட்ட தண்ணீரப் பிரச்சினையை அரசியலாக்கப் பார்க்கின்றது. அதன் வெளிப்பாடுதான் ஆர்ப்பாட்டம். என்றார் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் கூறுகின்றார்.

காய்தல் உவத்தலின்றி இந்தக் கூற்று உண்மை என்பதை சிந்திக்கும் ஆற்றலும் நன்றியுணர்வுமுள்ள அனைவரும் ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும்.

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# வாக்குகள் வீணாகுமோ?

தமிழ் மக்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்து வடமாகாண சபைத் தேர்தலில் ஒரு வாய்ப்பை வழங்கவேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ கடந்த வாரம் கூறிய கருத்தானது தமிழ் மக்களிடையே சிந்தனைக்கு வழி சமைத்துள்ளது.

யுத்தத்திற்குப் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் அரசின் எதிர்பார்ப்புக்களுக்கு மாறாகவே வாக்களித்துள்ளனர். ஆனால் எதிர்வரும் வடமாகாண சபைக்கான தேர்தல் மாற்றமொன்றை எதிர்பார்க்கும் தேர்தலாக அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்காக பெறுமதிமிக்கதொரு முன்னெடுப்பை வடக்கு மாகாண சபையால் முன்னெடுக்க முடியும். அதேவேளை தமிழ் மக்களின் நாளாந்த மற்றும் உடனடிப் பிரச்சனைகளுக்கு தேவையான தீர்வை பெற்றுக் கொடுக்க மாகாண சபை நிர்வாகம் செயற்பட முடியும்.

மத்திய அரசுடன் நெருக்கமான உறவைப் பேணுவதன் ஊடாக மாகாண சபையின் உச்ச பயனை தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கமுடியும். மாகாண சபை அதிகாரமானது தமிழ் மக்களின் தனிநாட்டுக்கு ஒப்பானதல்ல என்பதை தென் இலங்கை பெரும்பான்மை மக்களுக்கு புரியவைப்பதோடு, தமிழ் மக்களுக்கு அதிகாரங்களே வழங்கக்கூடாது என்று இனவாதம் பேசுவோருக்கு நாகரிகமான நிர்வாகச் செயற்பாட்டின் மூலம் தகுந்த பதிலடியையும் வழங்க முடியும்.

இவற்றை சிந்தித்து தமிழ் மக்கள் இம்முறை வட மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கவேண்டும். அதைவிடுத்து அரசுடன் எட்டிக்குப் போட்டியாக நிர்வாகச் செயற்பாட்டை நடத்தி இனவாதிகளின் கூற்றை நிரூபணமாக்கிவிடக்கூடாது.

அரசுக்கு போட்டியாக நடந்து கொள்வதாக நினைத்துக்கொண்டு பெரும்பான்மை மக்களுக்கு அச்சம் தருகின்ற வகையிலும், மத்திய அரசுக்கு தர்மசங்கடங்களை கொடுக்கும் வகையிலும் வடமாகாண சபை செயற்படுவதற்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்கக்கூடாது.

வட மாகாண சபையோடு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு முயற்சிப் போரின் அரசியல் இலாப நோக்கத்தை தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். மாகாண சபை என்பது அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய கடினமான பயணத்தின் ஆரம்பமே தவிர முடிவல்ல.

தமிழ் மக்கள் கடந்த காலங்களைப்போல் வெறும் உணர்ச்சியூட்டலுக்குள் புதைந்து போய்விடாது. நிறைய இழந்திருக்கின்றோம். எதையும் பெறவில்லை, இன்னும் மீள முடியாத துயரம் நம்மை துரத்திக் கொண்டிருக்கின்றது. இதை எவரும் மறுக்கமுடியாது. ஆனாலும் நாம் வாழவேண்டும். இழந்த உயிர்களைத் தவிர ஏனையவற்றை மீண்டும் நமது மண்ணில் நிறுவவேண்டும். வாழ்விடத்தை பாதுகாப்பானதாக மாற்ற வேண்டும்.

இதற்கான முயற்சியை மாகாண சபை நிர்வாகத்தின் அடித்தளத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும். மாறாக பழைய காயங்களை சுரண்டிவிட்டு தமிழ் மக்களின் வலிகளை தமது சுயலாப அரசியலுக்காக பாவிக்க தமிழ் மக்கள் இடமளிக்கக்கூடாது.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# மட்டக்களப்பில் தொடரும் காணித் தகராறு

காணிப் பிரச்சினை இடம் பிரதேசம் என்ற வேறுபாடு இன்றி எல்லோருக்கும் இருக்கிறது. 13ஆவது திருத்தம் இல்லாமல் செய்யப்படும் விடயத்தில் கூட காணி விவகாரம் ஒரு முக்கியமானதாக அமைந்திருக்கிறது. நாம் இப்போது மட்டக்களப்பின் கெவிளியாமடு காணி விவகாரம் பற்றிப் பார்க்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காணிப் பிரச்சினை முடிந்துவிட்டதாக ஒருசிலர் எண்ணிக் கொண்டிருப்பது தெரிகிறது. ஆனாலும், பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கச்சைக்கொடி கிராம சேவையாளர் பிரிவின் கெவிளியாமடு பிரதேசத்தில் இன்னமும் காணிப் பிரச்சினைகள் தொடர்ந்து வருகின்றன என்பதை மட்டக்களப்பு மங்கள ராமய விகாராதிபதி வணக்கத்துக்குரிய அம்பிட்டிய சுமணரத்ன தேரர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று வெளிப்படுத்தியிருந்தது.

இப்பிரதேசத்தில் குடியேறியுள்ள அம்பாறை மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் நலன் மீது அக்கறை எடுத்துக் கொள்ளுமாறு அவர் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதம் அனுப்புவதற்குக் காரணமாக அங்கு குடியேறிய மக்களை அவ்விடத்தில் இருந்து வெளியேறுமாறு பிரதேச செயலாளரால் விடுக்கப்பட்ட அறிவித்தலே காரணம் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அவர் அனுப்பிவைத்துள்ள இந்தக் கடிதத்தில், யுத்தம் காரணமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்த கெவிளியாமடுவிலுள்ள சிங்கள மக்கள் தற்போது தாம் வசிக்கும் வீடுகளில் இருந்து வெளியேற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மக்களது பிரச்சினைகள் குறித்து இந்த வருடத்தின் ஜனவரி 21ஆம் திகதி கிழக்கு மாகாண அமைச்சர் விமலவீர திசாநாயக்கவுக்கும் கடிதம் எழுதியிருந்தேன்.

இதேநேரம், கடந்த 25ஆம் திகதி அவர்களின் ஒவ்வொரு வீட்டிலும் எதிர்வரும் ஜுலை 29க்கு முன்னர் அவர்கள் வெளியேற வேண்டும் என பிரதேச செயலாளரால் அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் பிரதேச செயலாளரிடமோ, கிராம சேவையாளர்களிடமோ சென்றால் எந்த பிரயோசனமும் கிடைப்பதில்லை. காரணம் மொழிப்பிரச்சினையாகும். அதனால் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இம்மக்களது பிரச்சினைகள் தொடர்பில் பல தடவைகள் பேசியும், இப்போது வெளியேறுமாறு அறிவித்தல் விடப்பட்டிருக்கிறது. 04.10. 13- 2013 இலக்கமிடப்பட்ட கிழக்கு மாகாண சபையில் யுத்தத்தின் பின் காணி தொடர்பில் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பிலான சுற்று நிருபம் சில தினங்களுக்கு முன்னரே எனக்குக் கிடைத்து. அதன்படி அந்த மக்களுக்கு தகவல்களை வழங்கி நடவடிக்கை எடுப்பதற்கு எனக்கு காலம் போதாமல் உள்ளது.

எனவே இது சம்பந்தமாக தகுந்த அதிகாரிகளை நியமித்து நடவடிக்கை எடுத்துத் தரவேண்டும் என இந்தப் பிரதேசத்தின் பௌத்த பிக்கு என்றவகையில் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இன்னும் பலவும் எழுதப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தின் பிரதி கிழக்கு மாகாண காணி அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் அனுப்பப்பட்டதை அடுத்து, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவின் கச்சைக்கொடி சுவாமிமலை கிராம சேவையாளர் பிரிவின் கெவிளியாமடுவில் குடியேறியுள்ளவர்கள் தொடர்பில் ஆராய்வதற்கு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் குழு ஒன்றினை நியமித்திருக்கிறார்.

இந்தக் குழுவில், பட்டிப்பளை பிரதேச செயலாளர், கச்சைக்கொடி சுவாமிமலை கிராமசேவகர், கச்சைக்கொடி கிராமத்தினைச் சேர்ந்த தமிழ் அங்கத்தவர்கள் 3பேர், சிங்களவர்கள் 5 பேர், இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்குகின்றனர்.

கெவிளியாமடு கிராமத்தில் அத்துமீறிக் குடியேறியவர்கள் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் வெளியேற வேண்டும் என பிரதேச செயலாளரால் அறிவித்தல்கள் வீடுகளில் ஒட்டப்பட்டதை அடுத்து மட்டக்களப்பு விகாராதிபதி விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்தக் குழு நியமிப்பட்டுள்ளது.

1990க்கு முன்னர் கெவிளியாமடு கிராமத்தில் குறித்த மக்கள், அவர்களது மூதாதையர்கள், பரம்பரையினர் குடியிருந்தமையினை உறுதிப்படுத்தினால், அவர்களும் இக் கிராமத்தில் குடியிருக்கலாம். அவ்வாறில்லாத பட்சத்தில் அத்துமீறிக் குடியேறியவர்களாகக் கருதப்படுவர். அதேநேரம், குடியிருந்தமை நிரூபிக்கப்பட்டால் சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கிறார்.

கெவிளியாமடு கிராமத்தில் யுத்தம் நிறைவுபெற்ற பின்னர் பெருந்தொகையான குடும்பங்கள் குடியேறி விவசாயத்திலும் ஏனைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த மாதம் 25ஆம் திகதி பட்டிப்பளை பிரதேச செயலாளரினால், தங்கியிருப்பவர்களின் வீடுகளில் 29ஆம் திகதிக்கு முன்னர் வெளியேறுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. இந்த அறிவித்தலையடுத்து மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

காணிக்கான தேவைகளே பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி விடுகின்றன. அந்தவகையில் கிழக்கு மாகாணத்தில் காணிகளுக்கான பிரச்சினை ஒரு பாரதூரமானதாகக் கொள்ளப்படுகிறது. பல இடங்களில் காணிகளுக்குத் தட்டுப்பாடு எழத் தொடங்கியிருப்பதனால் அரச காணிகளை வழங்கும் வகையில் காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டும் வருகின்றன.

1985 காலப்பகுதியில் இலங்கையின் வடக்கு, கிழக்கில் வன்முறைகள் ஆரம்பித்தவேளை, உயிருக்குப் பயந்து மக்கள் சிதறி ஓடினர். இதில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற வித்தியாசம் இருக்கவில்லை. குறிப்பாக எல்லைக் கிராமங்களில் இருந்த மக்களே இதில் அதிகமாகும். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் ஒரு குறிப்பிட்டளவானவர்களுக்கு வேறு பிரதேசங்களில் அரசாங்கத்தால் அல்லது, அரசின் ஆதரவுடன் நிறுவனங்களால் காணிகள் வழங்கப்பட்டன. அத்துடன் வீடுகள் அமைக்கப்பட்டு தொழிலுக்கான ஏற்பாடுகள்கூட மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

சமாதானம் ஏற்பட்ட பின்னர், காணிக்கான சச்சரவுகள் ஏற்பட்டு வருகின்றன. இதற்குள் அத்துமீறிய செயற்பாடுகள்தான் பெரியளவான பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. முக்கியமாக மட்டக்களப்பின் பட்டிப்பளை, கேரளைப்பற்று தெற்கு, மண்முனை மேற்கு, போரதீவுப் பற்று, ஏறாவூர்பற்று, கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் இப்பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன.

காணிகளை வழங்கும் வகையில், நடத்தப்பட்ட காணிக் கச்சேரிகள் சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. முக்கியமாக பெரியளவில் காணிச் சிக்கல் உள்ள பிரதேசங்கள் இதில் சேர்க்கப்படவில்லை என்பதே குற்றச்சாட்டாக உள்ளது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் மக்கள் வசித்த காணிகள், அரச காணிகள் என்ற இரு தரமான காணிகள் இருக்கின்றன. அவற்றில் வெளிநாட்டு, உள்நாட்டுக் கம்பனிகளுக்கு காணிகள் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டும் இருந்து வருகின்றன.

> யாராக இருந்தாலும். மக்களை ஏமாற்றவோ, அதிகாரிகளை ஏமாற்றவோ முனையக்கூடாது. இன்றைய காலத்தில் வாழ்ந்துவிட்டுப் போனால் போதும் என்பது வாழ்க்கையல்ல. இலங்கையைப் பொறுத்த வரையில். ஏற்படும் பிரச்சினைகள் பலவற்றுக்கு விட்டுக்கொடுப்புக்கள் இல்லாமையே காரணமாகும். ஆனாலும் பலவந்தமான செயற்பாடுகளால் ஒருவனின் இருப்பையே கேள்விக்குள்ளாக்குவது வீணான செயற்பாடாகவே இருக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், பாவற்கொடிச்சேனை, ஆரையம்பதி, மஞ்சந்தொடுவாய், ஏறாவூர்- 4ஆம், 5ஆம் குறிச்சிகள், ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஓட்டமாவடி, மீராவோடை, கறுவாக்கேணி திராய்க்கேணி, மயிலங்கரச்சை, காகிதநகர் உறுகாம், மட்டக்களப்பு நகரின் ஜெயந்திபுரம், சிங்களவாடி, அதேபோன்று சிப்பிமடு, தியாவட்டவான், கல்குடா, புன்னைக்குடா, உள்ளிட்ட பகுதிகளில் இருந்த மக்கள் தமது காணிகளை விட்டும் விற்றும் சென்றனர்.

ஆரம்ப காலத்தில் தமது இடங்களில் இருந்து வெளியேறிய மக்கள் தமிழர்கள் சிங்களவர்களிடம் காணிகளை விலைக்கு வாங்கினர். அப்போது எழுத்தில் எழுதிக் கொண்டவர்கள் போக மிகுதியானவர்கள் நம்பிக்கையின் அடிப்படையில் பணம்கொடுத்து பெற்றுக்கொண்டும் உள்ளனர். அதே போன்று முஸ்லிம்களின் காணிகளைத் தமிழர்கள் விலைக்குப் பெற்றுள்ளனர்.

உயிரைப் பாதுகாப்பதற்காக ஓடியவர்கள், செலவுக்குப் பணம் தேவை என்ற நிலையில் குறைந்த விலைக்கும் நம்பிக்கைக்குமாக காணிகளை விற்றுள்ளனர். அதேபோன்று உயிர் பாதுகாப்புக்காக ஓடியவர்களும் உண்டு. பெரும்பாலானவர்கள் தமது காணிகளை விற்றுவிட்டுச் சென்றுள்ள அதேவேளை சிலர் விற்காமலும் உள்ளனர்.

ஆனால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களும் தம்முடைய தற்துணிவினாலும் தமது பாதுகாப்பு கருதியும் தம்முடைய முயற்சிகளினால் தமது இருப்பிடங்களை அமைத்துக் கொண்டமையே ஏராளமாகும் என்பது இங்கு நினைவில் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுவரும் காணித்தகராறு நல்லதொரு முடிவினைக் கொடுப்பதாக அமையவேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறது என்றே கூறமுடியும். காரணங்கள் எவ்வாறானாலும் சாதகங்கள் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்படுகிறதோ, பாதகங்களும் அவ்வாறே பார்க்கப்படவேண்டும் என்பதே அனைத்துத் தரப்பினரதும் நோக்கமாக இருக்கிறது.

இப்பொழுது பிரச்சினையாக உள்ள பட்டிப்பளைப் பிரதேசத்தில், தங்கியுள்ள காணிகளில் 90ஆம் ஆண்டுக்கு முன்னர் குடியிருந்தமைக்கான ஆதாரங்கள் நிருபிக்கப்பட்டால் அவர்கள் குடியிருப்பதற்கு எந்த இடைஞ்சலும் ஏற்படுத்தப்படாது என்பதுடன், வீடுகள் உட்பட வசதிகள் அனைத்தும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பது அரசாங்க அதிபரினால் கொடுக்கப்பட்ட உறுதிமொழியாக இருக்கிறது.

யாராக இருந்தாலும், மக்களை ஏமாற்றவோ, அதிகாரிகளை ஏமாற்றவோ முனையக்கூடாது. இன்றைய காலத்தில் வாழ்ந்துவிட்டுப் போனால் போதும் என்பது வாழ்க்கையல்ல, இலங்கையைப் பொறுத்தவரையில், ஏற்படும் பிரச்சினைகள் பலவற்றுக்கு விட்டுக்கொடுப்புக்கள் இல்லாமையே காரணமாகும் ஆனாலும் பலவந்தமான செயற்பாடுகளால் ஒருவனின் இருப்பையே கேள்விக்குள்ளாக்குவது வீணான செயற்பாடாகவே இருக்கும்.

பட்டிப்பளை கெவிளியாமடு, மேய்ச்சல் தரை பிரச்சினை, குடியிருப்புப் பிரச்சினை, காணிப் பிரச்சினை எனப் பல பிரச்சினைகளுக்குள் சம்பந்தப்பட்ட பிரதேசமாகும். யுத்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து எல்லைப் பிரதேசமான அங்கிருந்து இடம்பெயர்ந்த மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் மீளச் செல்லத் தொடங்கினர். அவ்வேளையில், அம்பாறை மாவட்டத்தின் சில இடங்களில் இருந்தும் ஒரு தொகையினர் அப்பிரதேசத்தில் வந்து குடியேறினர். இதுவே பிரச்சினைகளுக்குக் காரணமாக இருந்தது.

இதில் முக்கிய பிரச்சினையாக இருப்பது, வந்தவர்களுடன் ஏற்கனவே இங்கு குடியிருக்காத பெருந்தொகையானவர்களும் வந்து தங்கினர். தமக்கு இதுதான் சொந்த இடம் என்பது அவர்களின் வாதமாக இருந்தாலும், அது பிழை என்பது அரச அதிகாரிகளின் கருத்தாக இருந்தது. சரி பரவாயில்லை என்றிருக்க தமிழர்களை அவர்கள் விடவில்லை. கச்சைக் கொடி சுவாமி மலை பிரதேசத்தில் விகாரை அமைப்பதற்கு வேலைகளை ஆரம்பித்தனர். இந்த முயற்சியே மிகவும் பெரிய பிரச்சினைகளைக் கொண்டு வந்திருந்தது. இப்போதும் அது முடிவதாக இல்லை. எப்போது முடியும் என்று எண்ணிக் கொண்டிருந்தாலும், இந்த மாதத்தின் இறுதிக்கூறு அதற்கு முடிவாக இருக்கும் என்று நம்பிக்கொள்வோம்.

-பிரகஸ்பதி-





# கனவுகளுக்காய் காலம் கடத்தும் ஒருத்தி....

**இன** மத மொழி பேதங்கள் தாண்டிய எங்கேயெல்லாமோ வாழ்கிற ஆயிரமாயிர மானவர்களின் கனவோடும் தாம் நேசித்தவர்களின் கனவுகளோடும் வாழ்கிற மனிதர்களோடு அவளும் ஒருத்திதான். உலகத்துப் பெண்களின் அம்மாக்களின் பிரதியாய் அவள் தனது குழந்தைகளின் வாழ்வை மேம்படுத்தவே இப்போது உழைக்கிறாள்.

4வயதில் ஆறு வயதெனப் பதிவுசெய்து ஆங்கிலப் பள்ளியில் அப்பா சேர்த்துவிட்டு அவளை வேகமாக முன்னேற வேண்டுமெனவே சொல்லி அனுப்பினார். அன்று 2வயதால் மூப்படைய வைத்து முன்னேறென்று சொன்ன அப்பா இன்று இருந்தால் அவளுக்காக தற்கொலையே செய்து கொண்டிருப்பார். 4வயதில் முன்னே ஓட வெளிக்கிட்டவள் இன்று 36 வயதாகியும் ஓட்டம் நிற்கவில்லையென்றே அலுத்துக் கொள்கிறாள்.

அவள் காதலின் பரிசாய் 3 குழந்தைகளும் அவள் கணவனின் ஞாபகமாய் அவனது சில நிழற்படங்களுமே இப்போது அவளுக்கான சொத்துக்கள். ஒரு பெரும் அமைப்பின் முக்கியமான சொத்தாயிருந்த அவனது மரணம் அவளோடும் அவளுடன் கூடிய சிலபேருடன் சில வருடங்களின் முன்னர் அந்நிய நாடொன்றில் நிகழ்ந்து முடிந்தது.

அவன் இறப்பதற்குச் சிலமாதங்கள் முன் வரையும் அவனாலேயே வாழ்ந்த உறவுகள், நட்புகள் எவருமே அவனது மரணத்திலும் கலக்கவில்லை. அப்படியொருவன் இருந்ததையும் மறந்துபோனார்கள். எல்லாத் தொடர்புகளும் அற்றுப்போய் மரணத்தின் வாசலில் நின்றபோதும் தன்னைப்பற்றி தனது பூர்வீகம், தனது சொந்தப்பெயரைக்கூட அவளுக்குச் சொல்லாமலே மௌனமாகினான்.

தேவையின் நிமித்தம், அவன் வாயில் பொய்யைத்தவிர எதுவும் வந்ததில்லை. அவளுக்குக்கூட அவனொரு கணினித்துறை நுட்பவியலாளனாய்தான் அறிமுகமானான். கடமையின் கனம்போன இடத்தில் ஒரு காதலை ஒரு குடும்பத்தை உருவாக்க வேண்டியிருந்தது. எல்லாம் தேசத்திற்காகவென்றே எல்லாவற்றையும் செய்தான்.

எல்லா முடிவுகளின் பின்னால் ஏதோவொரு நம்பிக்கை அவனில் ஒட்டியே இருந்தது. மீண்டும் துளிர்க்கும் கனவென்று நம்பியே இயங்கினான். ஒருநாள் அவனது கையிலிருந்து எல்லாவற்றையும் காலம் பறிக்க கைதியாகி அவனது காதல் துணையும் அவனைப் பிரிந்து சிறுகுழந்தைகளோடு அவள் மொழி தெரியாத ஊரொன்றில் ஒதுங்கினாள்.

சிலகாலங்களில் அவளும் கைதாகினாள். நீண்ட அலைவு துயரங்களின் பின்னர் இருவரும் இணைந்துகொள்ளும் வாய்ப்பை காலம் வழங்கியது. அவன் பற்றிய மர்மங்களை அவன் அப்போதும் சொல்லவேயில்லை. உற்சாகமாய் இயங்கிக் கொண்டிருந்தவன் சோர்ந்து போகத்தொடங்கினான். இறுதியில் அவன் உயிர்கொல்லும் புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருப்பதாய் மருத்துவர்கள் சொன்னார்கள்.

அவனது உயிர்மீள்தலுக்காக அவள் அலைந்த அலைச்சலும் பட்ட துயரங்களும் அவனை மிகவும் வருத்தியது. அவனது கண்களிலிருந்து வழிந்த கண்ணீர்த் துளிகளுக்கான காரணங்களைச் சொல்லமுடியாத நிலைமைக்குப் போயிருந்தான்.

எங்காவது தன்னோடிருந்த ஒரு நட்பெனினும் கைகொடுக்குமென்ற நம்பிக்கையோடு ஒரேயொரு தொலைபேசி இலக்கத்தை மட்டும் அவளிடம் ஒருநாள் எழுதிக் கொடுத்தான். அதற்குப் பிறகு அவன் கைகள் பேனாவைப் பிடித்ததில்லை. கடைசியில் அவன் மரணித்துப் போனான்.

எல்லாம் முடிந்து போனபின்னரே அவளை வறுமை துரத்தத் தொடங்கியது. சொந்த உறவுகள், பிறந்த ஊர் அவளை ஏதோ தப்பானவளாகவே கருதியது. தந்தையின் பெயர் தெரியாத பிள்ளைகளைப் பெற்றுவிட்ட தாயாகவே அவளைப் பரிகசித்தது. அவளைப் பாவத்தின் மிச்சமாகவே ஒதுக்கியது.

பிள்ளைகளில் ஒன்றுக்கு உலக விஞ்ஞானி ஒருவரின் பெயரையும், மற்றைய இரு பிள்ளைகளுக்கும் கரும்புலி வீரர்களின் பெயரையும் வைத்திருந்தான். போகிற இடமெல்லாம் பிள்ளைகளின் பெயரை வைத்தே பெரிய உபத்திரவமாகியது. ஒரு சமயம் போதகர் ஒருவர் தங்கள் சமய முறைப்படியொரு பெயரை மாற்றுமாறு வேண்டினார்கள். அவன் வைத்த பெயர்களை மாற்ற விரும்பாமல் ஊரைவிட்டே விலகினாள். எல்லோரையும் விட்டு தூரமாக ஒதுங்கினாள்.

அவனது இரத்த உறவுகளைத் தேடியலைந்தாள். எவரும் கைகொடுக்காமல் அவளை விலத்திக் கொண்டார்கள். ஆடைதுவைக்கும் நிலையமொன்றில் வேலைக்குச் சேர்ந்தாள். மாதாந்தம் கிடைக்கிற சம்பளம் 10 நாட்களுக்கு மேல் நகர முடியாத இறுக்கத்தைத் தந்தது. அயலில் கடனும் அதிகமாகியது.

செத்துப்போய்விட வேண்டும் போலிருந்த நேரங்களில் அவன் கண்ணுக்குள் வந்து நின்று காதுக்குள் கேட்கிற அவனது குரல் கண்ணீரோடு எல்லா நினைப்பையும் அழித்துச் செல்லும்.

அப்பாவைப் பற்றிக் கேட்கிற குழந்தைகளுக்கு அப்பா வெளிநாட்டில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டாள். வெளிநாட்டில் உள்ள அப்பாக்களின் பிள்ளைகள் போல அவர்களால் எதனையும் அனுபவிக்க முடியவில்லை. போன ஊரில் அறிமுகமான ஒரு அக்காவிடம் குழந்தைகளைக் கொடுத்துவிட்டு நிரந்தரமாக வேலை செய்யத் தொடங்கினாள். சனிக்கிழமை மாலை வீடு வந்து ஞாயிறு மட்டும் குழந்தைகளோடு பொழுதைக் கழித்து மீண்டும் வேலை.

அம்மாவும் அருகிலில்லாமல் அப்பாவும் அருகிலில்லாமல் இன்னொருவரை அம்மாவாக்கிய அம்மா வரும் வார இறுதிநாளுக்காக காத்திருக்கிற 5,4,3 வயதுப்பிள்ளைகளின் குழந்தைக் கனவுகளில் வெளிநாட்டிலிருக்கிற அப்பா அத்தை வீட்டில் அவர்களுக்காக உழைத்துக் கொண்டிருப்பதாய் நம்புகிறார்கள்.

ஒருவிடுறையில் வீடு வந்தபோது மகள் கேட்டாள். அத்தைக்குப் போன் போட்டுக் கேளுங்கம்மா அப்பாவை பேசச்சொல்லி.... எங்களையும் வெளிநாட்டுக்கு கூப்பிடச்சொல்லி....!

அன்று ஏதோ அலுவலாக அவன் கையெடுத்துடனான டயறியைத் திறந்தபோது ஒரு பக்கத்தில் அவன் எழுதிய சிலவரிகளும் ஒருநாள் அவன் எழுதி வைத்த தொலைபேசி இலக்கமொன்றும் கண்ணில்பட்டது.

தான் இல்லாது போகிற காலத்தில் அந்த இலக்கத்தோடு தொடர்பைப் பேணுமாறு அவன் எழுதியிருந்த அந்த இலக்கத்தை எடுத்தாள். தொடர்பு கொள்ளவா, விடவா என்ற குழப்ப மாயிருந்தது.

இரத்த உறவுகளே ஒதுக்கியிருக்க எங்கோ முகம் தெரியாத அவனது நட்பொன்று மட்டும் இவளுக்கு கைகொடுக்குமா என்ற சந்தேகத்தோடே ஒருநாள் அந்த இலக்கத்தை அழைத்தாள்.

அவள் எதிர்ப்பார்ப்புக்கு மாறாக மறுமுனையில் கேட்ட குரல். புது உறவு துளிர்த்ததாய் நம்பினாள். அவனைத் தேடிய அந்தத் தோழமை அவன் எங்கோ வாழ் வதாயே அன்றுவரை நம்பியிருந்தது. அவள் சொல்லியழுத கதைகள் அவனை அந்த நிலைமையில் இட்டுச்சென்ற விதியையே நோக வைத்தது. எனக்கு உதவி செய்யாட்டிலும் பரவாயில்லை....நீங்க கதைச்சாலே போதும்..... அவள் தனது துயரங்களைச் சொல்லிச் சொல்லியழுதாள்.

உயிருடன் இருந்தபோது ஒருநாள் அவன் தொடர்புகொண்டிருந்தாலும் அவன் உயிரைக் காத்திருக்கும் வாய்ப்புக்கூட வந்திருக்கலாம். குறைந்தபட்சம் அவனை மட்டுமே நம்பிய அவளுக்கும் குழந்தைகளுக்குமான ஒரு வாழ்வையேனும் கொடுத்திருக்கலாம். எல்லாம் முடிந்து அவன் அநாதையாய் முடியும் வரையில் ஏனோ நட்பையும் அழைக்காமல் விட்டிருந்தான் என்பது தெரியாது.

வரவிருக்கிற நத்தார் தினத்தில் அப்பா வருவார் என நம்புகிற குழந்தைகளுக்கு இம்முறையும் அப்பா வரமாட்டார் வேலை கூடவென்று சொன்னாள். அப்பா வெளிநாட்டிலிருந்து அனுப்பியதாக கடந்தமுறை அவள் தானே ஒரு பாசலை தனது முகவரிக்கு அனுப்பி அப்பாவின் நத்தார் பரிசென்று பிள்ளைகளுக்குக் கொடுத்தாள். இம்முறையும் உடுப்புகளும் இனிப்புப்பண்டங்களையும் தயாரித்து வைத்திருக்கிறாள் நத்தார் பரிசு.

அப்பாவின் மரணத்தை இன்றும் அறியாத குழந்தைகளுக்காக அப்பா பற்றிச் சொல்ல ஆயிரமாயிரம் வரலாறுகளை அவன் விட்டுச் சென்றிருக்கிறான் எனினும் எதையும் அவளால் வெளிப்படுத்தவோ வரலாறு ஆக்கவோ முடியாது அவன் மரணமும் அவனது வாழ்வும் மர்மமாகவும் மௌனமாகவுமே புதைந்து போயிருக்கிறது.



# புலிகளின் வதை முகாமில்

## வதை-70

## மணியம்

**வடக்கில் தீண்டாமை**க்கு எதிரான போராட்டத்தை எமது கட்சி நடாத்திய காலகட்டத்தில், நான் கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகள் மத்தியில் தீவிரமாக வேலைசெய்து கொண்டிருந்தேன்.

அந்தப் போராட்டத்தில் என் போன்றவர்களின் பங்களிப்பு வெகுஜன ரீதியானது மட்டுமே. அதாவது ஆலயப் பிரவேச அல்லது தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்கள் நடக்கும் போது, கட்சியினது அல்லது அந்தப் போராட்டத்தை நேரடியாகத் தலைமைதாங்கிய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் அழைப்பை ஏற்று, நாம் கிளிநொச்சியிலிருந்து சென்று பங்குபற்றிவிட்டு வருவோம். அதற்கு அப்பால், அந்தப் போராட்டத்தில் இடம்பெற்ற வன்முறை கலந்த நடவடிக்கைகள் பற்றி எமக்குத் தொடர்பில்லை என்பதுடன், அது பற்றிய தகவல்களும் எமக்குத் தெரியவாய்ப்பில்லை. அந்த விடயங்கள் கட்சியின் தலைமைக்கு மட்டுமே தெரிந்திருக்க வாய்ப்புண்டு.

இந்த விடயங்களை புலிகளின் புலனாய்வாளர்களுக்கு நான் விளக்கிக் கூறினேன். ஆனால் எதையும் இலேசில் நம்பாத புலிகள், எனது விளக்கத்தையும் நம்பவில்லை என்பது தெரிந்தது. கட்சியின் வட பிரதேசக் குழுவில் நானும் ஓர் அங்கத்தவராக இருந்ததால், எனக்கும் எல்லா விடயங்களும் தெரிந்திருக்கும் என்பதே அவர்களது நிலைப்பாடாக இருந்தது. அதனால் அவர்கள் எனது விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, என்னை அத்துடன் விட்டுவிடவில்லை.

எமது கட்சியினரிடம் இருந்த அந்த ஏ.கே.47 துப்பாக்கியை சங்கானைப் பகுதியிலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் போட்டுள்ளதாகவும், அந்தக் கிணறு எங்கிருக்கிறது என்றும் விசாரித்தனர். அந்த விடயமும் அவர்கள் சொல்லித்தான் நான் அறிந்துகொண்டேன். என்ன இருந்தாலும் அவர்கள் உண்மையாகவோ பொய்யாகவோ, நிறைய தகவல்கள் சேகரித்து வைத்திருந்ததைக்காண ஆச்சரியமாக இருந்தது.

தொடர்ந்து விசாரித்த அவர்கள், கேட்ட இன்னொரு விடயம் எனக்கு அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. அதாவது நான் என்னென்ன ஆயுதப் பயிற்சிகள் எடுத்துள்ளேன் எனக் கேட்டனர்! அதைக்கேட்டு என்னை நானே பரிதாபமாகப் பார்த்துக்கொள்வதைத் தவிர வேறு வழியேதும் தெரியவில்லை. புலிகளின் தலைவர் பிரபாகரனாவது ஒரு முழுமையான ஆயுதம் தாங்கிய போராளியாக மாறுவதற்கு முன்னர், சிறு வயதில் 'கெற்றப்போல்' என்ற ஆயுதத்தின்மூலம் அணில்களை அடித்துப் பயிற்சிபெற்றவர் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆனால் நானோ அந்த 'ஆயுதத்தை'க்கூட ஒருபோதும் பயன்படுத்தியிருக்காததுடன், ஒரு சிறு தடியைத் தன்னும் எடுத்து எனது பிள்ளையையோ, மருமக்களையோ அல்லது பெறாமக்களையோ அடித்துக்கூட அனுபவப்படாத என்னை நோக்கி வந்த கேள்வி, என்னைச் சற்றுப் பெருமைப்படவும் வைத்ததை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் என்னை ஓர் ஆயுதப் போராளியின் தோற்றத்தில் பார்த்த ஒரேயொரு நபர்கள் புலிகள்தான் என நினைக்கிறேன். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்!

தீண்டாமைக்கு எதிரான போராட்டம் நடந்து முடிந்து சுமார் இருபது வருடங்களுக்குப் பின்னர், அந்த நேரத்தில் தாயின் கர்ப்பப்பையில் உருவாகிக்கூட இருக்காத புலிப் 'பொடியன்கள்', அந்தப் போராட்டத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் பற்றி துருவித்துருவி ஆராய்கிறார்கள் என்றால், தமது சமகாலத்தில் செயற்பட்ட மாற்று இயக்கங்களின் வசம் இருந்த ஆயுதங்கள் பற்றி அறியவும், அவற்றைக் கைப்பற்றவும் என்ன பாடுபட்டிருப்பார்கள் என எண்ணிப் பார்த்தேன்.

விடயம் தீண்டாமை ஒழிப்புப் போராட்ட காலத்து ஆயுத விவகாரத்துடன் முடிந்துவிடும் என எண்ணினேன். அன்றைய தினம் மட்டும்தான் அந்த விவகாரம் தற்காலிகமாக முற்றுப் பெற்றது. அதைவிட ஒரு பெரிய விவகாரத்துடன் இன்னொரு புலனாய்வுப் பிரமுகன் இன்னொரு நாள் வந்து சேர்ந்தான். அந்த விவகாரம் வெறுமனே சாதி வெறியர்களுடன் நடந்த போராட்டம் போன்ற ஒரு விடயமல்ல. அது கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தருமபுரம் குடியேற்றக் கிராமத்தில் 1970ம் ஆண்டு இலங்கை, இராணுவத்துக்கும் பொதுமக்களுக்கும் நடந்த ஒரு மோதல் சம் வம் பற்றியதாகும். அந்தச் சம்பவம்தான் வடக்கில் இராணுவத்துக்கெதிரான முதலாவது தாக்குதல் சம்பவம் என்றபடியாலும், அந்த நேரத்தில் நான் கிளிநொச்சிப் பிரதேசத்தில் இருந்ததாலும், அதுபற்றி அவர்கள் என்னிடம் அறிவதற்கு மிகவும் ஆவலாக இருப்பதை அவதானித்தேன். அதுபற்றிய உண்மைகளை புலிகளுக்குச் சொல்வது தவிர்க்கமுடியாத விடயமாகிவிட்டது.

புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் என்னிடம் விசாரித்த, இராணுவத்துக்கும் பொது மக்களுக்குமிடையிலான மோதல் சம்பவம், 1970 பொதுத் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பாக நடந்தது.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம் 60

பா.ராகவன்

ஒரு யூதரைக் கொன்றுவிட முடியுமானால் ஒரு கிருத்தவருக்கு சொர்க்கம் நிச்சயம் என்று அப்போது சொல்லப்பட்டது.

முதலில் கண்ட இடத்தில் வெட்டித் தள்ளிக் கொண்டிருந்தவர்கள், கொலை பழகிவிட்டதும் சித்திரவதை செய்து கொல்லலாம் என்று முடிவு செய்து விதவிதமான சித்திரவதை உத்திகளை யோசிக்கத் தொடங்





கினார்கள். (பின்னாளில் இந்தக் கொசாக்குகளின் பரிணாம வளர்ச்சியாகத்தான் ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சி இருந்தது.)

கழுத்தில் கத்தியை வைத்து அறுத்து அப்படியே சதையை இடுப்பு வரை உரித்தெடுப்பது, விரல்களைத் தனித்தனியாக வெட்டி எடுத்து ஒரு மாலையாகக் கோத்து, வெட்டுபவரின் கழுத்தில் அணிவித்து, கழுத்தை ரம்பத்தால் அறுப்பது, ஒவ்வொரு முடியாகப் பிடுங்கி முழுத்தலையையும் இரத்தக் காயமாக்கி விட்டு அதன்மேல் கொதிக்க கொதிக்க வெந்நீரை ஊற்றுவது என்று குரூரத்தின் பல்வேறு எல்லைகளை அவர்கள் திறந்துகாட்டினார்கள்.

இந்தக் கொடுங்கோன்மையில் இருந்து தப்பித்த சில யூதர்கள், நீண்டதூரப் பிரயாணம் மேற்கொள்ள அவகாசம் இல்லாமல் உடனடி சாத்தியங்கள் தெரிந்த பால்கன் தீபகற்பத்துக்கும் ஜெர்மனிக்கும் ஹாலந்துக்கும் அகதிகளாகத் தப்பிப் போய்ப் பிழைத்தார்கள்.

இவர்கள் அல்லாமல் இன்னும் சில யூதர்கள் எங்குமே போக வழியின்றி வலுக்கட்டாயமாக கிருத்தவத்துக்கு மதம் மாறி அந்தந்த நாடுகளிலேயே தங்கிவிட்டதும் நடந்திருக்கிறது.

(போலந்தில் மட்டும் பொக்டான் ஷெமீயில் நிகியின் காலத்துக்கு பிறகு பதவிக்குவந்த மன்னர், நிர்ப்பந்தத்தின் பேரில் கிருத்தவத்துக்கு மாறிய யூதர்கள் மீண்டும் யூதர்களாகி, தம் மதவழக்கங்களைக் கடைப்பிடிக்கலாம் என்று அனுமதியளித்ததாக வும், அதன்படி சில ஆயிரம் பேர் தாங்கள் யூத மதத்தையே மீண்டும் கடைப்பிடிக்கிறோம் என்று அறிவித்ததாகவும் சில நூல்கள் தெரிவிக்கின்றன. இதுபற்றிய விரிவான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் ஒரு விஷயம். யூத மதத்திலிருந்து கிருத்தவத்துக்கு போனவர்கள் உண்டே தவிர, வேறெந்த மதத்திலிருந்தும் யூத மதத்துக்கு 'மாற' முடியாது. அதற்கு அனுமதி இல்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.)

இத்தனை களேபரங்களுக்கு இடையில் உயிர்பிழைத்து பாலஸ்தீன் வரையிலுமே கூட வர முடிந்த யூதர்கள், நடந்த கதைகளை விலாவாரியாக எடுத்துச்சொன்ன கையோடு, அப்போது அங்கே பரவலாகிக் கொண்டிருந்த ஹீப்ரு மொழி மறுமலர்ச்சிப் பணிகளில் உடனடியாக ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள்.

போலந்திலிருந்து அப்படித் தப்பி வந்த ஒரு யூதர், தமது முன்னோர்களின் மொழியான ஹீப்ருவை முதல் முதலாக தமது நாற்பது வயதுக்கு மேல் கற்றுக்கொண்டு, தமது தேசத்தில் நடந்த யூத இனப்படுகொலைகளை விவரித்து அந்த மொழியில் ஒரு நூலே எழுதியிருக்கிறாராம்.

துரதிர்ஷ்டவசமாக இன்று அந்தப் புத்தகம் இஸ்ரேலில் கூடக்கிடைப்பதில்லை. கிடைத்திருக்குமானால், எத்தனை நெருக்கடி காலம் வந்தாலும் யூதர்கள் தமது இனத்தையும் மொழியையும் காப்பதற்கான பணி என்று எது ஒன்று சுட்டிக்காட்டப்பட்டாலும் எப்படி உடனே அதில் மூழ்கிவிடுவார்கள் என்பதை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தக்கூடிய ஓர் ஆவணமாகத் திகழ்ந்திருக்கும்.

எத்தனையோ தமிழ் சினிமாக்களில் பார்த்திருக்கலாம். மிக உக்கிரமான, தீவிரமான சம்பவங்கள் நடப்பதற்கு முன்னதாகவோ அல்லது நடந்து முடிந்தவுடனேவோ சம்பந்தமில்லாமல் ஒரு நகைச்சுவைக் காட்சி அவசியம் சொருகப்பட்டிருக்கும். ஆசுவாசப் படுத்திக்கொள்வதற்கு ஒரு வேளை அந்த நகைச்சுவைக் காட்சி உதவக் கூடியதாக இருக்கும். துக்கத்தையோ, கோபத்தையோ அதிகப்படுத்துவதாகவும் சமயத்தில் அமைந்துவிடும். எப்படியாவது நெருக்கடிக்குச் சற்று முன்னதாகவோ, பின்பாகவோ ஒரு நகைச்சுவைக்காட்சி அமைவதென்பது இயற்கையின் நியதியே போலிருக்கின்றது.

பாலஸ்தீன யூதர்களின் வாழ்விலும் அப்படியொரு நகைச்சுவைக் காட்சி கி.பி.17ஆம் நூற்றாண்டில் அரங்கேறியது.

ஒரு பக்கம் போலந்திலிருந்து லித்து வேனியாவிலிருந்தும் உக்ரைனிலிருந்தும் லட்சக்கணக்கான யூதர்கள், அகதிகளாக இடம்பெயர்ந்து வந்துகொண்டிருந்தார்கள். மறுநாள் பொழுது விடிவதைப் பார்ப்போமா என்பதே அப்போதைய அவர்களின் தலையாய கவலையாக இருந்தது. கொசாக்குகளின் கோரதாண்டவத்தில் தினம் சில ஆயிரம் யூதர்களாவது கொல்லப்பட்டுக் கொண்டிருந்த சமயம் ஒட்டுமொத்த யூத குலமே நடுநடுங்கிக் கொண்டிருந்த நேரம். ஒட்டாமான் துருக்கியப் பேரரசின் எல்லைக்குள் நுழைந்துவிட்டால் உடனடி உயிர்ப்பயம் இல்லை என்கிற ஒரே ஒரு நம்பிக்கைதான் அவர்களிடம் இருந்தது. பிழைத்துக்கிடந்தால் பாலஸ்தீன் வரை போகலாம். மூதாதையர்களின் பூமியான ஜெருசலேத்தில் வாழமுடிந்தால் விசேஷம் ஜெருசலேத்தைக் கைப்பற்றுவதையெல்லாம் கூட அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்.

இப்படி வாழ்க்கைப் போராட்டத்தில் அவர்கள் சிக்கிக் கொண்டிருந்த தருணத்தில்தான் ஷபாத்தி இஜ்வி என்ற ஒரு யூதரைப் பற்றி துருக்கியப் பேரரசு முழுவதிலும் இருந்த மக்கள் பேச ஆரம்பித்தார்கள். போலந்தில் பொக்டான் ஷெமீயில்நிக்கியின் வெறிபிடித்த ராணுவம், யூதர்களைக் கொல்லத் தொடங்கிய காலகட்டத்தில் இஜ்விக்கு வயது இருபத்திரண்டு. மிகவும் இளைஞர். ஆனால் அந்த வயதிலேயே அவருக்குக் குரு ஸ்தானம் கிடைத்திருந்தது. ஒரு 'ரபி' யாக அறியப்பட்டிருந்தார். ஆனால் இஜ்விக்கு ரபியாக இருப்பதில் விருப்பமில்லை. அதற்கு மேலே ஒரு கீரிடம் சூடிக்கொள்ள ஆசைப்பட்டார். என்ன செய்யலாம்? குருமார்களின் குருவாகலாம். அதற்கு ஏதாவது அரசியல் செய்ய வேண்டியிருக்கும். அல்லது மக்கள் தலைவராகலாம். களத்தில் இறங்கிப் போராடவெல்லாம் அவருக்கு விருப்பமில்லை. கட்டளையிட மட்டுமே ஆர்வம் இருந்தது. தீவிரமாக யோசித்து அவர் ஒரு முடிவுக்கு வந்தார்.

ஓ யூதர்களே! என்னிடம் வாருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். ஒரு தேவதூதரின் குரலை நான் கேட்டேன். யூத இனத்தைப் பாதுகாக்க என்னைத் தூதுவராகக் கடவுள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார். என்று ஓர் அறைகூவல் விடுத்தார்.

கொஞ்சம் தடுமாறிப்போனார்கள் யூதர்கள் எப்படி அராபியர்களிடையே போய் தேவதூதர் பிறக்கமுடியும் என்று முகம்மது நபியை அங்கீகரிக்க மறுத்த யூதர்கள் இறைத்தூதர் என்று ஒருவர் தோன்ற முடியுமானால் அது யூத குலத்தில் மட்டுமே நிகழ முடியும் என்று உளமார நம்பிய யூதர்கள் யாராவது வந்து தங்களைக் காப்பாற்றமாட்டார்களா, உயிர் பிழைத்துத் தங்கள் புனித மண்ணான ஜெருசலேத்தை மீண்டும் அடைய மாட்டோமா என்று தவியாத் தவித்துக் கொண்டிருந்த யூதர்கள்.

அவர்களுக்கு இஜ்வியின் இந்த அறிவிப்பு பரவசத்தையும் அத்வேகத்தையும் தரத்தொடங்கியது. மிகவும் ஊன்றிக் கவனிக்க வேண்டிய விஷயம் இது. ஒருவர் தம்மை இறைத்தூதராக அறிவித்துக்கொள்வதற்கு எத்தனை நெஞ்சுரமும் துணிச்சலும் இருந்திருக்க வேண்டும்.

(தொடரும்...



# உயர்விற்கு ஊக்குவிப்பு

ஊக்குவிப்புத்தான் ஒரு மனிதனின் வளர்ச்சிப் பாதைக்கு ஊன்றுகோலாக, உந்துசக்தியாக அமைகின்றது. இந்த ஊக்குவிப்பு நிச்சயம் பெற்றோர்கள் மத்தியில் இருக்கவேண்டும். அப்படி இருக்கும் பட்சத்திலேயே எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களை இன்னும் பல திறமைசாலிகளை உருவாக்கவல்லதாக அமையும். கடந்தகாலப் பெற்றோர்களுடன் ஒப்பிடுகின்றபோது இந்த நவீன காலத்துப் பெற்றோர்களிடம் தங்கள் பிள்ளைகளை ஒரு திறமையான, பிறரால் மதிக்கத்தக்க ஒருவராக வளர்க்கவேண்டும் என்கிற வெறி நிறையவே ஊற்றெடுத்திருப்பதை கூறித்தான் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. இதனை காலை வேளைகளிலும், பாடசாலைகள் விடும் நேரங்களிலும், பிள்ளைகளை மேலதிக வகுப்புக்களுக்கு கொண்டு செல்லும் வேளைகளிலும் அவதானிக்கலாம். அந்தளவிற்கு பெற்றோரின் பொறுப்பு இந்த நவீன காலத்தில் வீச்சுப் பெற்றிருக்கின்றது அல்லது வீறுநடைபோடுகின்றது.

ஆனால், இந்த வீச்சு அல்லது வீறுநடை பிள்ளையின் அறிவுவளர அல்லது பருவமடைய பெற்றோர்களின் பங்கு மெல்லமெல்ல வீழ்ச்சியுற்றுப்போகின்றது. இதன்மூலம் அநேகமான பெற்றோர்களின் இலக்கு அல்லது அவர்கள் எதிர்பார்க்கும் நிலையை பிள்ளை எட்ட முடியாமல் போவதற்கு காரணமாக அமைகின்றது. இதனை சிறுகக்கூறின் ஏற்றி இறக்கும் காலம் வரைதான் பிள்ளைகளை குஞ்சு போன்று காத்துக் கொள்கின்றார்கள். பிள்ளைகள் தனித்து இயங்கும் நிலை வர அல்லது பருவமடைய பெற்றோர்கள் தங்களுக்கான பாதையை நோக்கி தனித்துப் பயணிக்கின்றனர். பிள்ளையுடன் சேர்ந்து பயணிக்கத் தவறும்போது இந்த நிலை உருவாக வழிவகுக்கின்றது.

இந்தவகையில், விளையாட்டிலும் இது விதிவிலக்கல்ல. சிறுபராயத்தில் பிள்ளைகள் பங்குகொள்ளும் விளையாட்டுப் போட்டிகளில் குடும்பத்துடன் கண்டு மகிழும் பெற்றோர்கள் அதிகம். அதாவது தாய், தந்தை, பேரன், பூட்டன், பாட்டன், அம்மம்மா, அப்பப்பா என குடும்பமே மைதானத்தை சங்கமிக்கும். சூழ்ந்திருக்கும். தங்கத்தின் விளையாட்டைப் பார்க்கத் தானே வவுனியாவில் இருந்து வந்தேன், கொழும்பிலிருந்து வந்தேன், திருகோணமலையிலிருந்து வந்தேன் எனக் கூறும் அம்மம்மாக்கள் உண்டு. அப்பப்பாக்கள் உண்டு. தத்தாக்களும் உண்டு. அப்பம்மாக்களும் உண்டு. அந்தளவிற்கு பிள்ளைகளை மகிழ்விக்கும் விருப்பு பெற்றோர்கள் மத்தியில், அதன் குடும்பத்தினர் மத்தியில் வியாபித்திருக்கும்.

ஆனால், இந்நிலை ஏனோதானோ தெரியவில்லை பிள்ளை வளர அல்லது பருவமடைய தேய்பிறை போன்று தேய்கின்றது. பிள்ளை பருவமடைந்த பின்னர் வினைத்திறன்மிக்க, பல சாதனைகளை ஏற்படுத்தத்தக்க போட்டிக்களங்களை நோக்கி அவர்கள் சங்கமிப்பதில்லை. அதாவது, கோட்டம், வலயம், மாகாணம், தேசியம் என நீளும் போட்டிகளை பெற்றோர்கள் மைதானத்திற்குச் சென்று கண்டு மகிழ்வதில்லை. ஊக்கப்படுத்துவதில்லை.

இதற்கு தொலைக்காட்சியின் மோகம், மெகா தொடர்கள் சில பெற்றோர்களைப் பாதிக்கலாம். சிலருக்கு வீட்டைத் தாண்டமுடியாத பல சுமைகள் காரணமாக இருக்கலாம் விருத்தெரிந்த பின்னர் விலகி நிற்பது தான் பிள்ளைக்குக் கௌரவம் எனச் சிலர் கருதலாம். சிலருக்கோ வேலையில்லாமல் பிள்ளைக்குப் பின்னால் அலைகிறோமே என்று சமூகம் கருதும் என்ற பயத்தால் பின்வாங்கலாம் இன்னும் சிலருக்கு விளையாட்டில் சாதித்து என்ன வரப்போகின்றது என்ற மெத்தனப்போக்காக இருக்கலாம் இப்படியாக சாக்குப்போக்குச் சொல்லி தங்கள் பக்கத்தை நியாயப்படுத்தப் பல காரணங்களை அவர்கள் தேடிக்கொள்ளலாம். சொல்லிக்கொள்ளத் தயாராக இருக்கலாம்.

ஆனால், இவர்களுக்கெல்லாம் முன்மாதிரியாக சகோதர மொழியான, சிங்கள மொழி பெற்றோர் விளங்குகின்றார்கள். பிள்ளைகளை ஊக்குவிப்பதில் அவர்கள் என்றும், எப்பொழுதும் பின்நிற்பதில்லை. பாலர் வயதைத் தாண்டிய தமது பிள்ளைகளை பயிற்சிக்கு கூட்டிச்சென்று, பயிற்சி முடியும் வரை காத்திருக்கின்றார்கள். பாடசாலை மட்ட சாதாரண போட்டியாக இருந்தாலென்ன அல்லது முக்கியமான போட்டியாக இருந்தாலென்ன பிள்ளைக்குத் தெரியும் திசையில் இருந்து, கரகோஷமிடுகிறார்கள். அதைக் கண்டு மகிழ்கின்றார்கள். இதில் உள்ளூர் அல்லது வெளிமாவட்டம் என்ற பாகுபாடு அவர்களைச் சூழ்வதில்லை. சூனியமாக இருப்பதுமில்லை. எந்த இடம் என்றாலும் சென்று பிள்ளைக்கு ஊக்கமளிக்கின்றார்கள். பிள்ளைகள் போகும் திசையில் வேர்பரப்பி, வெளிச்சம் பெற வேண்டும் என்பதே அவர்கள் நோக்கமாக இருக்கின்றது.

இதற்கும் அப்பால் மைதானம் ஒருபுறத்தில் தேசிய, சர்வதேச தரம் வாய்ந்த வீரர்களை உருவாக்கும் அதேவேளை, மறுபுறத்தில் மாணவர்களை முழு மனிதர்களாக்கிக் கொள்கின்றது என்று அவர்கள் நம்புகின்றனர். அதாவது, சகிப்புத் தன்மை, தாழ்வு மனப்பான்மை, நெருக்கடியிலிருந்து மீளுதல் போன்றவற்றை மைதானம் கற்றுக் கொடுகின்றது. நோயற்ற வாழ்வைப் பெற்றுக் கொடுக்கின்றது என்று நம்புவதால்தான். இதற்கும் மேல் வெளிநாட்டு கிரிக்கெட் சுற்றுலாவுக்குச் செல்லும் வேளை மனைவிமார்களையும் அழைத்துச் செல்வதற்கு இலங்கை கிரிக்கெட் சபையும் அனுமதித்துள்ளது. இதனால் வீரர்களின் ஆட்டத்திறன் திசை மாறிச் செல்லாது என கிரிக்கெட் சபை நம்புகின்றது.

ஓர் ஆரோக்கியமான சமூகம் உருவாகவேண்டும் என்பதற்காக கல்வி அமைச்சும் புதிய நடைமுறையைப் பாடசாலைகளில் இந்த ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தியுள்ளது. பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னர் அனைத்து மாணவர்களும் பத்து நிமிட உடற்பயிற்சி செய்யவேண்டும் என்பதை அது கட்டாயப்படுத்தி உள்ளது.

ஆசியாவின் ஆச்சரியம்மிக்க நாடாக்க வேண்டும் என்ற இலக்குடன் அரசாங்கமும் பயணித்துக் கொண்டிருக்கின்றது. வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடியுயரும், குடியுயரக் கோன் உயர்வான் என ஔவை யார் கூறினார். வரப்பாக இருந்து நீர் இலக்கை அடைய பெற்றோர் வழிவகுக்கவேண்டும். அதாவது பிள்ளையின் வளர்ச்சியில், எழுச்சியில் எப்பொழுதும் துணையாக பெற்றோர்கள் இருந்து ஊக்குவிக்கவேண்டும். அப்படி ஊக்குவித்தால் ஆசியா என்ன? முழு உலகமே இலங்கையை ஆச்சரியத்துடன் அண்ணார்ந்து பார்க்குமல்லவா?

க. இலட்சுமி 0

# மாவை - விக்னேஸ்வரன்

# வருகிறது வடக்குத் தேர்தல்

அலசுவது - மதியூகி

வட மாகாண சபைக்கான, தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்குமான திகதியை தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். இதுநாள் வரை தேர்தல் ஆணையாளர் தவிர ஏனையோர் வடமாகாண தேர்தல் தொடர்பாக பல்வேறுவிதமான வியாக்கியானங்களை விடுத்து வந்தனர்.


தற்போது வடமாகாண சபைக்கான தேர்தல் வேட்புமனுக்களை இம்மாதம் 25 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்வதற்கான திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் இரண்டுவார காலப்பகுதிக்குள் கட்சிகள் தமது முதலமைச்சர் வேட்பாளர் உட்பட தமது 38 உறுப்பினர் பட்டியலை தயாரித்து தாக்கல் செய்யவேண்டும். கட்சிகள் அதற்கான பணிகளில் இறங்கி விட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வட மாகாண தேர்தலில் பிரதான பேசுபொருளாக மாறியிருப்பது கூட்டமைப்புக்குள் நடக்கும் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை ஏகமனதாக தெரிவு செய்வதுதான்.

தமிழரசுக்கட்சியின் செயலாளர் நாயகமான மாவை சேனாதிராஜாவை முதலமைச்சர் வேட்பாளராக கூட்டமைப்பு சார்பில் நிறுத்தவேண்டுமென தமிழரசுக் கட்சியினர் தீவிரமான நிலைப்பாட்டில் இருக்கின்றனர். முதலில் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைகூடி தமது முடிவை அறிவித்தபோது அதை நிராகரித்த சம்மந்தன் முன்னமே தனக்கு அறிவிக்காமல் கட்சிகூடி அப்படி முடிவு செய்திருக்கக்கூடாது என்றும், ஆகவே அந்த தீர்மானத்தை பொருட்படுத்தத் தேவையில்லை என்றவிதமாக சமாளித்தார். பின்னர் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களின் தமிழரசுக் கட்சியினரும் இப்போது மாவை சேனாதிராஜாவையே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தவேண்டுமென அழுத்தம் கொடுத்துள்ளன.

இவற்றைப் பார்க்கின்றபோது வட மாகாண சபைக்கான தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக தமது செயலாளர் நாயகமான மாவை



சேனாதிராஜாவையே கூட்டமைப்பு சார்பில் களமிறக்கவேண்டும் என விரும்புகின்றன. அல்லது வற்புறுத்துகின்றன.

மாவை சேனாதிராஜாவும் தான் முதலமைச்சர் வேட்பாளராக களம் இறங்கத் தயார் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

மறுபக்கத்தில் புலிகளின் ஆதரவு சக்திகளும், கூட்டமைப்புக்கு பொருளாதார உதவிகளைச் செய்யும் தரப்புகளும் முன்னால் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக கூட்டமைப்பு நிறுத்த வேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவரான சம்மந்தனுக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுத்துவருகின்றது. அதற்கான வியாக்கியானங்களையும் அந்த தரப்புகள் முன்வைக்கின்றன. அதாவது விக்னேஸ்வரன் கல்விமான், நீதி விவகாரங்களில் அனுபவம் உடையவர் என்பதால் அரசோடு சட்டரீதியாக போராடக்கூடியவர், அவரது வார்த்தைகளை சர்வதேச சமூகம் புதிய எதிர்பார்ப்புடன் அவதானிக்கும், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையை இனி தூக்கி நிறுத்தப்போகும் மையமாக மாகாண சபை எனும் அதிகாரங்களை ஆளுமை செய்கின்ற தலைமைக்கே இருக்கப்போகின்றது. அவ்வாறு பலவிதமாக சிந்தித்துப் பார்த்தால் விக்னேஸ்வரன் பொருத்தமானவர் என்றும் அந்த வியாக்கியானங்கள் நீள்கின்றன.

அதையே தனது சகாக்களுக்கு விளங்கப்படுத்தவும் சம்மந்தன் முயற்சிசெய்து வந்ததை பெரும் இழுபறிப்புகளோடு மூன்று நாட்களாக கூட்டமைப்பு உறுப்பினர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகள் எனும் நாடகம் தெளிவுபடுத்தியது.

மாவையா?, விக்னேஸ்வரனா? என்பதை தீர்மானிக்கக் கூட்டமைப்பு இவ்வளவு தடுமாறுகின்றதே. இதற்கே இப்படியென்றால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான இன்னும் பல தீர்மானங்களை கூட்டமைப்பு சந்திக்கவேண்டியிருக்குமே. அதற்கு என்ன செய்யப்போகின்றார்கள் என்று சிலரும், விக்னேஸ்வரனை கூட்டமைப்புக்குள் இறக்கிவிட வேண்டும் என்ற முயற்சி இறுதியில் கூட்டமைப்பின் கட்சிகளுக்குள்ளே பிளவுகளை தோற்றுவித்துவிடுமோ என்ற அச்சத்தை சிலருக்கும் தோற்றுவித்தது.

கிட்டத்தட்ட சம்மந்தன், சுமந்திரன் ஒரு அணியாகவும், கூட்டில் உள்ள ஏனைய கட்சியினர் ஒரு அணியாகவும் பிரிந்து நின்று காரசாரமான விவாதங்களை செய்தபோதும், கூட்டம் முடிவொன்றை எட்டாமல் மூன்று தடவைகள் இடைநடுவில் முடிவுக்கு வந்தபோதும், ஊடகங்களுக்கு எப்படி கருத்துச் சொல்லவேண்டும் என்பதை கிட்டத்தட்ட சம்மந்தன் தனது சகாக்களுக்கு கற்பித்துள்ளார். அதாவது கூட்டமைப்பு நடத்திய கூட்டம் சுமூகமாக நடைபெற்றது. இருந்தபோதும் முடிவு எடுக்கப்படவில்லை. நாளையும் நாங்கள் கூடி முடிவெடுக்கவுள்ளோம் என்று கூறவேண்டும் என்று கூறியுள்ளார்.

முதலமைச்சரை தெரிவுசெய்யும் முக்கிய கூட்டமானது கூட்டமைப்புக்குள் பல உடைவுகளை கொண்டுவருமோ என்ற அச்சத்தில் மாவை சேனாதிராஜா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது, கூட்டமைப்பிலுள்ள அனைத்து கட்சிகளும் ஒருமித்து எடுக்கும் தீர்மானத்தை தான் ஏற்றுக் கொள்வதாகவும், அதற்கான விவாதங்கள் கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் விதமாக மாறிவிடுவதை தான் விரும்பவில்லை என்றும் எனக்கு ஆதரவளிக்கும் பிரதிநிதிகள் நிதானமாக தமது நிலைப்பாட்டை முன்வைப்பதையே தான் விரும்புவதாகவும் கூறியிருந்தார்.

இதற்கிடையே வட மாகாண முதலமைச்சர் பதவியை இரண்டாகப் பிரித்து முதல் இரண்டரை வருடங்களுக்கு விக்னேஸ்வரனும், பின்பாதி இரண்டரை ஆண்டுகளை மாவையும் வகிக்கலாம் என்ற விவாதங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில்தான் நாம் விக்னேஸ்வரன் அவர்கள் தேர்தல் அரசியல் தொடர்பாகவும், அதில் தான் போட்டியிடுவது தொடர்பாகவும் முன்னர் கூறிய கருத்துக்களையும், வட மாகாண தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னணியில் தெரிவித்துள்ள கருத்துக்களையும் மீட்டிப் பார்க்கவேண்டும்.

முன்னர் அவர் பொதுமக்களிடம் சென்று வாக்குக் கேட்டு அரசியல் செய்வதையும், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக தனிப்பட்ட சுதந்திரத்தையும், முழு நேரத்தையும் செலவுசெய்து அமைதியற்ற வாழ்க்கை ஒன்றை தான் விரும்பவில்லை என்றும் கூறியிருந்தார். கூடவே முழுமையான அரசியல்வாதியாக செயற்பட தனக்கு சில தகுதிகள் இல்லை என்றும் பகிரங்கமாக கூறியிருந்தார்.


இப்போது, வட மாகாணத் தேர்தலில் கூட்டமைப்பில் உள்ள அத்தனை கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரே குரலாக அழைத்தால் முதலமைச்சர் வேட்பாளராக தேர்தலில் நிற்பது பற்றி பரிசீலனை செய்ய தயாராக உள்ளதாக அறிவித்தார்.

விக்னேஸ்வரன் முன்னர் அப்படிக் கூறியபோது அவர் அரசியல் பதவிகளுக்கு ஆசைப்படாதவர். அவர் சுதந்திரமாக தனது கருத்துக்களை முன்வைக்கவே விரும்புகின்றார். என்று பாராட்டியவர்கள், இப்போது பதவிக்காக அரசியலுக்கு வருவதற்கு தயாராக இருப்பதாக கூறியுள்ளாரே என்று பெரும் சங்கடங்களுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள்.

விக்னேஸ்வரனின் உண்மையான நிலைப்பாடு முன்னர் கூறியதுதான் என்பது அவரைத் தெரிந்தவர்களுக்கும், அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கும் நன்றாகத் தெரியும். விக்னேஸ்வரனின் தற்போதைய மாற்றத்துக்கு என்னென்ன காரணிகள் காரணமாக அமைந்தன என்பதும், யார்? யார்? விக்னேஸ்வரனின் தலையைக் கழுவியவர்கள் என்பதும் விடை-காண முடியாத ஆச்சரியங்களாகத்தான் இருக்கின்றன.

தமிழ் ஊடகங்கள் வட மாகாண முதலமைச்சருக்கு எத்தகைய தகுதிகள் இருக்கவேண்டுமென ஒரு பட்டியலே போட்டு தமது அழுத்தத்தை கூட்டமைப்புக்கு கொடுத்தன.

கிட்டத்தட்ட மாவை சேனாதிராஜாவை மேற்குறிப்பிட்ட தகுதிகளற்ற நடமாடும் ஜடம் என்றளவுக்கு ஊடகங்கள் திறமையாக விக்ளேஸ்வரனுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தன.



மாவை சேனாதிராஜாவால் அரசை எதிரத்து வாதிட்டு சண்டையிட முடியாது, சர்வதேசம் கவனிக்கும் அளவுக்கு செய்திகளைத்தர முடியாது, அரசோடு ஏட்டிக்குப் போட்டியா நடந்துகொள்ள முடியாது," தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் புத்திஜீவியாக மாவை சேனாதிராஜாவை பார்க்கமுடியாது என்றெல்லாம் பல்வேறு கதைவிட்டார்கள். இவற்றைப் பார்க்கும்போது தற்போது கூட்டமைப்பில் இருப்பவர்களை தமிழ் மக்கள் தகுதி, தராதரம் பார்த்து தெரிவு செய்யவில்லை என்பதும், கூட்டமைப்பில் பதவிகளில் இருப்பவர்கள் "ஆலை இல்லாத ஊரில் இலுப்பம் பூ சர்க்கரை" என்றவாறாகவே இருக்கின்றார்கள்.

முதலமைச்சர் வேட்பாளராக புத்திஜீவி அல்லது தகுதிகள் நிறைந்த ஒருவர் தேவை என்பதற்காக வெளியிலிருந்து ஒருவரை கூட்டுக்குள் இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயம் தோன்றியுள்ளது.

எதிர்காலத்தில் கூட்டமைப்பு தகுதி காரணமாக பலபேரை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்திற்கான ஆரம்பமாகவே விக்னேஸ்வரனின் வருகை அமைந்துள்ளது. மூன்று கட்டங்களாக தொடர்ந்த கூட்டமைப்பின் நாடகம் இறுதியில் விக்னேஸ்வரனை வட மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்க கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகள் அனைவரும் ஏகமனதாக முடிவுசெய்திருப்பதாக சம்மந்தன் அறிவித்ததோடு முடிவுக்கு வந்துள்ளது.

இனிமேல்தான் விக்னேஸ்வரன் பல்வேறு விமர்சனங்களையும், அசிங்கங்களையும் சந்திக்கப் போகின்றனார். அவரது ஆடை மீது சேறுவாரிப் பூசப் போகின்றார்கள். விக்னேஸ்வரன் தமது இழுப்புக்கெல்லாம் இழுபட வேண்டுமெனவும் தனிப்பட்ட முடிவுகளை எடுத்துக்கொண்டு செயற்பட முடியாது என்றும் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் கடும் நிபந்தனைகளின் பேரிலேயே அவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த சம்மதித்துள்ளன.

விக்னேஸ்வரனை எவ்வித முரண்பாடுகளுமற்று கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் தெரிவு செய்யவில்லை. அப்படியாக இருந்திருந்தால் அந்த முடிவை முதல் கூட்டத்திலேயே கூட்டமைப்பு எடுத்திருக்கவேண்டும். மாறாக பலகட்ட கூட்டங்கள் நடத்தி கடுமையான நிபந்தனைகள் போட்டு தீர்மானித்திருப்பதானது விக்னேஸ்வரன் எதிர்பார்த்த செய்தி அதுவல்ல.

மறுபக்கத்தில் மாவை சேனாதிராஜாவுக்கும் அவரை முதன்மைப்படுத்திய தமிழரசுக் கட்சியினருக்கும் பெரும் தோல்வி கிடைத்துள்ளது. சம்மந்தன் தமிழரசுக் கட்சியை முனை மழுங்கச் செய்துவிட்டார் என்று தமிழரசுக் கட்சியினர் அங்கலாய்க்கின்றனர்.

இந்தச் சங்கடங்களுடன் தேர்தலில் தமிழரசுக் கட்சியினர் எவ்வாறு செயற்படப் போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பாரக்கவேண்டும். மாவையின் தகுதியை உரசிப் பார்த்தவர்கள் தமிழரசுக் கட்சியினரின் முகத்தில் கரியைப் பூசிவிட்டு பிரச்சாரங்களுக்கு மக்களிடம் போகும்படி கூறுவது வினோதமானது என்றும், வீட்டுச் சின்னத்தை புத்திஜீவி எனும் போர்வையால் இதுவரை தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் எவ்விதமான பங்களிப்பையும் நேரடியாகச் செய்யாதவரும் தமிழரசுக்கட்சியைச் சேராதவருமான ஒருவருக்கு தாரை வார்த்துக் கொடுக்க நேரிட்டுள்ளதை எண்ணி தமிழரசுக் கட்சியினர் கவலைப்படுவதையும் உணரமுடிகின்றது.

இந்த நிலைமையானது பலபேரும் வீட்டுச் சின்னத்தைப் பாவித்துக் கொண்டு தமிழரசுக்கட்சியினரை பகடைக்காய்களாக பாவிப்பதற்கான வாய்ப்பை வழங்கப் போகின்றது என்ற கவலைகள் தமிழரசுக் கட்சியினருக்கு ஏற்பட்டுள்ளது.


வெளியில் இருந்துகொண்டு கூட்டமைப்புக்கு புத்திஜீவித்தனம் காட்டுகின்றவர்களையும், ஆலோசனை கூறுகின்றவர்களையும் இழுத்து களத்தில் இறக்கிவிட்டால் அதுநாள்வரை தனக்கு மூப்புக் காட்டியவர்கள் பின்னர் தனது கட்டளைக்கு செவிசாய்த்து நடக்கும் சாதாரணமானவராகி விடுவார்கள் என்ற சம்மந்தனின் சாணக்கியம் வெற்றிபெற்றுள்ளது.

இன்னொரு தருணத்தில் ஆயர் ஒருவரையும் பிடித்து தள்ளிவிட்டால் தலையிடி குறையும் பின்னர் சம்மந்தர் தலைவர் ஏனையோர் இரண்டாம் நிலையினர்.

எது எப்படியோ விக்னேஸ்வரனை வல்லவர், கெட்டிக்காரர், நல்லவர் என்றெல்லாம் கூறி நேரடி அரசியலுக்கு இழுத்துவிட்டவர்களின் எதிர்பார்ப்புக்களை விக்னேஸ்வரன் எப்படி நிறைவேற்றப்போகின்றார்? வெளியே இருக்கப்போகும் சவால்கள் ஒருபுறமும் உள்ளே இருக்கும் சவால்களும் எதிர்பார்ப்புகள் கொடுக்கப்போகும் சுமைகளும் இப்போது பார்க்கும் விக்னேஸ்வரனை வேறு ஒரு வடிவத்துக்கு மாற்றிவிடும் என்று சிலர் கூறுகின்றனர்.

அரசியலுக்கு வரமாட்டேன் என்று கூறிய விக்னேஸ்வரன், நான்கு மாதத்துக்குள் தனது முடிவை மாற்றிக் கொண்டிருக்கின்றார் என்றால் எதிர்காலத்தில் எத்தனை மாற்றங்களுக்குள் விழுந்து எந்தத் திசையில் இருக்கப் போகின்றார் என்பதையும் வடக்கு மக்களை நேரடியாக சந்தித்து அவர்களுக்கு அரசியல் பலாபலனை பெற்றுக் கொடுப்பாரா என்பதையும் யூகிக்க கடினமாகவே இருக்கும்.

கொழும்பில் இருந்துகொண்டு கனவான் அரசியல் நடத்த அவர் நினைத்தாலும், அரசுடன் ஏட்டிக்குப் போட்டியாக நடந்துகொண்டு அவர் எங்காவது இருக்கட்டும் என்று கூட்டமைப்பு நினைத்தாலும் அநாதரவாக தொடர்ந்தும் நிற்கப்போகின்றவர்கள் தமிழ் மக்கள்தான் என்பதில் வேறு கருத்து இருக்கமுடியாது.



# ஸ்னோடன் கக்கும் உண்மைகள்!

தொகுப்பு வேணுகிருஷ்ணா

பாதுகாப்பு என்ற பெயரில் பறிக்கப்படும் தமது உரிமைகளுக்காக பொதுமக்கள் இவ்வளவு தீவிரமாக எதிர்வினை புரிந்தது எனக்கு ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் தருகிறது. வால்ஸ்ட்ரீட் ஆக்கிரமிப்பு போல இல்லாவிட்டாலும் ஜீலை 4ம் திகதி நான்காவது திருத்தத்துக்கு ஆதரவாக தெருக்களில் இறங்கிப் போராடும் 'நான்காவது திருத்தத்தை மீட்போம்' என்ற இயக்கம் ரெட்டிட் மூலமாக வளர்ந்திருக்கிறது. இணையத்தின் வழியான எதிர்வினை மிகப்பெரிதாகவும் ஆதரவு தெரிவிப்பதாகவும் இருக்கிறது.

---

எட்வர்ட் ஸ்னோடன் வெளியிட்ட அடுத்த அதிர வைக்கும் இரகசியம் இந்த பிரிட்டிஷ் உளவுத்துறை 2009-இல் லண்டனில் நடைபெற்ற G20 மாநாட்டின்போது. வெளிநாட்டு பிரதிநிதிகளை (அநேகமாக அந்தந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள்) உளவுபார்த்த விவகாரம்.

வெளிநாட்டு பிரதிநிதிகளின் கம்பியூட்டர்கள் இரகசியமாக உளவு பார்க்கப்பட்டன. அவர்களது போன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டன. இவை எல்லாவற்றையும்விட சுவாரசியமாக. வெளிநாட்டு பிரதிநிதிகள் நடமாடக்கூடிய இடங்களில் எல்லாம் போலி இன்ரநெட் மையங்களை (internet cafes) பிரிட்டிஷ் உளவுத்துறையே செட்டப் செய்திருந்தது.

---

G20 மாநாடு நடைபெற்ற இடத்துக்கு வெளியேயும் அநேக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தங்கியிருந்த ஹோட்டல்கள் உள்ள பகுதிகளிலும். உளவுத்துறையே இன்ரநெட் மையங்களை போலியாக திறந்து பெரிய போர்ட்டும் மாட்டி வைத்தது. அங்குள்ள அனைத்து கம்பியூட்டர்களிலும் ஈமெயில் இடைமறிக்கும் சொஃப்ட்வேயர் மற்றும் key-logging software போடப்பட்டிருந்தன.

அம்பலப்பட்டு அம்மணமாகும் நிலையிலேயே உலகமனிதர்கள் அனைவரும் உள்ளோம். (WORLD WIDE WEB) எனப்படும் உலக வலைப்பின்னல் தனிமனித இரகசியங்களையும் நாடுகளின் இறைமையையும் பாதுகாப்பையும் காட்டிக் கொடுத்தபடியிருக்கிறது.

## வெனிசுலாவில் ஸ்னோடன் தஞ்சமடைய தீர்மானம்

அமெரிக்காவின் இரகசிய உளவு வேலைகளை அம்பலப்படுத்திய எட்வர்ட் ஸ்னோடன் வெனிசுலாவில் தஞ்சமடையத் தீர்மானித்துள்ளார் என ரஷ்ய வெளிவிவகாரங்களுக்கான குழு அறிவித்துள்ளது.

அமெரிக்கா உலக நாடுகளை உளவு பார்த்ததை ஸ்னோடன் தெரிவித்ததை தொடர்ந்து அமெரிக்கா அவரை தேச துரோக குற்றவாளியாக அறிவித்தது. ஆனால் ஸ்னோடன் அமெரிக்காவைவிட்டு வெளியேறினார்.

அவரை உடனே ஒப்படைக்கும்படி உலக நாடுகளிடம் கேட்டுக்கொண்டது அமெரிக்கா. சீனாவின் ஹொங்கொங்கில் இருந்த அவர் கடந்த மாதம் 23ஆம் திகதி ரஷ்யாவுக்குள் நுழைந்தார்.

ரஷ்யாவின் சிரிமெத்யோவ் விமான நிலையத்திலேயே தங்கி இருந்தபடி 19 நாடுகளிடம் அவர் அடைக்கலம் கோரியிருந்தார். இந்நிலையில் வெனிசுலா நிகரகுவா கியூபா ஆகிய நாடுகள் அவருக்கு அடைக்கலம் தர முன்வந்தன.

இந்நிலையில் அரசியல் அடைக்கலம் தரத் தயாராக இருப்பதாக வெனிசுலா விடுத்த அழைப்பை ஸ்னோடன் ஏற்றுக் கொண்டார் என்ற தகவலை ரஷ்ய வெளியுறவு விவகாரங்களுக்கான குழு தெரிவித்துள்ளது. முன்னதாக ஸ்னோடன் கியூபாவில் தஞ்சமடைவார் என்ற செய்தி வெளியானது.

எனினும் ஸ்னோடனை எவ்வாறு வெனிசுலா தொடர்புகொண்டது என்ற தகவலும், அவர்களது அழைப்பை எப்படி ஸ்னோடன் ஏற்றுக்கொண்டார் என்பது குறித்த விபரங்கள் தெரியவரவில்லை.

ஸ்னோடனுக்கு எந்த நாடும் அடைக்கலம் தரக்கூடாது என்று அமெரிக்கா கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்னோடனின் பேட்டி இங்கிலாந்தின் கார்டியன் நாளிதழில் வெளியாகியிருக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அதன் மக்களை உளவு பார்க்கும் இரகசியங்களை வெளியிட்ட எட்வர்ட் ஸ்னோடன் ஹொங்காங்கில் புகலிடம் தேடியிருந்த பொழுது உலகின் மிகப் பெரிய ஈவு இரக்கமற்ற உளவு அமைப்பிற்கு எதிராக தனது குரலை எழுப்பத் துணிந்த அவரிடம் கிளென் கிரீன்வால்டும் ஏவன் மெக்ஆஸ்கில்லும் எடுத்த பேட்டி இங்கிலாந்தின் கார்டியன் நாளிதழில் வெளியாகியிருக்கிறது.

பேட்டியின் சில பகுதிகளின் தமிழாக்கத்தை கீழே தருகிறோம்.

**கேள்வி:** நீங்கள் விசில்புளோவர் (whistle Blower) (அம்பலப்படுத்துபவர்) ஆக ஏன் முடிவு செய்தீர்கள்?

**பதில்:** எதை வேண்டுமானாலும் ஒட்டுக் கேட்கும்படியான ஒரு கட்டமைப்பை அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆணையம் உருவாக்கியிருக்கிறது. அதன்மூலம் குறிப்பான தேவையின் அடிப்படையில் இல்லாமல் தகவல் பரிமாற்றங்கள் பெரும்பகுதி தானாகவே ஒட்டுக் கேட்கப்படுகிறது. உங்கள் மின்னஞ்சல்களை அல்லது உங்கள் மனைவியின் தொலைபேசியை நான் பார்க்க விரும்பினால் அந்த ஒட்டுக்கேட்பை செயற்படுத்த வேண்டியதுதான் தேவை. உங்கள் மின்னஞ்சல்கள் கடவுச்சொற்கள் தொலைபேசி பதிவுகள் கடன் அட்டைகள் எதை வேண்டுமானாலும் நான் அணுக முடியும்.

இதுபோன்ற விஷயங்களை செய்யும் சமூகத்தில் நான் வாழ விரும்பவில்லை. நான் செய்யும் ஒவ்வொரு செயலும் நான் பேசும் ஒவ்வொரு வாக்கியமும் பதிவு செய்யப்படும் ஒரு உலகில் நான் வாழ விரும்பவில்லை. அத்தகைய ஒன்றை ஆதரிக்கவோ அல்லது அத்தகைய அமைப்பின் கீழ் வாழவோ நான் விரும்பவில்லை.

**கேள்வி:** ஆனால் போஸ்டன் நகரில் நடந்தது போன்ற பயங்கரவாத செயல்களை தடுத்து நிறுத்த முயற்சிப்பதற்கு வேவு பார்ப்பது அவசியமில்லையா?

**பதில்:** பயங்கரவாதம் ஏன் புதிய அச்சுறுத்தலாக இப்போது உருவாகியிருக்கிறது என்று நாம் பரிசீலிக்க வேண்டும். பயங்கரவாதம் எப்போதுமே இருந்திருக்கிறது. போஸ்டனில் நடந்தது ஒரு குற்றச்செயல். அத்தகையவற்றை தடுப்பதற்கு வேவு பார்ப்பதைவிட வழக்கமான பாரம்பரியமான பொலிஸ் கண்காணிப்புதான் தேவை.

**கேள்வி:** உங்களை நீங்கள் இன்னொரு பிராட்லி மேனிங் ஆக பார்க்கிறீர்களா?

**பதில்:** "மேனிங் ஒரு சிறப்பான அம்பலப்படுத்துபவர். அவர் பொது நலத்தினால் தூண்டப்பட்டார்."

**கேள்வி:** நீங்கள் செய்தது ஒரு குற்றம் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** "அரசாங்கத்தின் தரப்பில் போதுமான குற்றங்களை நாம் பார்த்து விட்டோம். இந்த நிலையில் எனக்கு எதிராக இந்த குற்றச்சாட்டை வைப்பது போலித்தனமானது. அரசு அமைப்புகள் பொதுமக்களின் உரிமை வட்டத்தை பெருமளவு குறுக்கியிருக்கின்றன."

**கேள்வி:** உங்களுக்கு என்ன நடக்கும் என்று நினைக்கிறீர்கள்?


**பதில்:** "எதுவும் நல்லது நடக்காது." ஸ்னோடன் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அருகில் இருக்கும் அமெரிக்க தூதரகம் (மற்றும் உளவு அலுவலகம்)

**கேள்வி:** ஏன் ஹொங்காங்?

**பதில்:** "குறைவான சுதந்திரம் உள்ளதாக கருதப்படும் இடத்துக்கு ஒரு அமெரிக்கன் இடம் பெயர வேண்டியிருப்பது எவ்வளவு சோகமானது! சீன மக்கள் குடியரசுடன் இணைந்திருந்தாலும் ஹொங்காங் சுதந்திரத்துக்குப் பேர் பெற்றது. வலுவான பேச்சுரிமை பாரம்பரியம் உடையது.

**கேள்வி:** வெளியிடப்பட்ட ஆவணங்கள் எதை வெளிப்படுத்துகின்றன?

**பதில்:** அமெரிக்க நாடாளுமன்றத்தில் வேவு பார்த்தல் பற்றிய கேள்விகளுக்கு தேசிய பாதுகாப்பு ஆணையம் தொடர்ந்து பொய்யான தகவல்களை தந்திருக்கிறது என்பதை அவை தெரிவிக்கின்றன. செனட்டர் ரான் வைடனும் செனட்டர் மார்க் உடல்லும் வேவு பார்த்தலின் அளவைப் பற்றி கேள்வி எழுப்பிய போது, அதற்கு பதில் சொல்வதற்கு தேவையான வசதிகள் இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். வசதிகள் நிச்சயம் எங்களிடம் இருக்கின்றன.



## வேக தரவுப்பரிமாற்றம் கொண்ட SanDisk

தொழில்நுட்பம்




தரவுகளைச் சேமிப்பதற்கு பயன்படும் பல்வேறு சேமிப்பு சாதனங்களில் மிகவும் இலகுவாக பயன்படுத்தக்கூடியதாக San Disk காணப்படுகின்றது. தற்போது முன்பு காணப்பட்ட SanDisk இனை விடவும் இருமடங்கு வேகமாக தரவுகளை பரிமாற்றம் செய்யக்கூடிய SanDisk உருவாக்கப்பட்டுள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Extreme Micro-SDXC எனப்படும் இந்த நவீன SanDisk ஆனது 80MB/s எனும் வேகத்தில் தரவுகளை பரிமாற்றம் செய்யக்கூடியவையாக காணப்படுகின்றன.

மேலும் 16GB இருந்து 64GB வரையான கொள்ளளவுடையதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த சேமிப்பு சாதனத்தின் விலையானது 59.99 டொலர்களிலிருந்து 199 டொலர்கள் வரை அமைந்துள்ளது. நமது நாட்டுப் பெறுமதியில் சுமார் 7600 இலிருந்து 25670 ரூபா வரை.

## அடுத்த தலைமுறையின் intel

intel

இன்றைய உலகில் பல Processor கள் வந்துவிட்டாலும், இவை அனைத்திற்கும் முன்னணி என்று சொன்னால் அது இன்டெல்(intel) தான்.

இந்நிலையில் இன்டெல் நிறுவனம் தனது புதிய 4ம் தலைமுறை Processor களை அறிமுகம் செய்தது.

இதற்கு Haswell என்று Code Name கொடுத்துள்ளது.

முந்தைய தலைமுறை Processor-fis விட அதிக வசதிகளுடன் இது வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

1. கணினி மற்றும் Tablet என இரண்டாகவும் இயங்கும் வசதி.

2. பழைய மடிக்கணினிகளைவிட 50% அதிக Battery Life.

3. ஒன் செய்த 3 நொடிகளில் கணினி இயங்க ஆரம்பித்துவிடும்.

4. பழைய கணினிகளைவிட நான்கு மடங்கு அதிக வேகம்.

20 நிமிட HD Video களை ஒரு நிமிடத்தில் Convert செய்யும் வசதி. Voice Recognition, Immersive Touch, Face Login and Wireless Display To TV போன்ற வசதிகளும் உள்ளன.

## ஈரலிப்பை அகற்றும் ஸ்பிரே







• நீர் போன்ற பதார்த்தங்களால் ஏற்படும் ஈரலிப்பை அகற்றக்கூடிய ஸ்பிரே உருவாக்கப்பட்டுள்ளது. Rust-Oleum NeverWet என அழைக்கப்படும் இந்த ஸ்பிரே மூலம் ஸ்மார்ட் கைபேசிகள் போன்ற இலத்திரனியல் சாதனங்களில் காணப்படும் ஈரலிப்பு தன்மையை அகற்றி அவற்றினை சிறந்த முறையில் பராமரிக்க உதவுகின்றது.

இவை நீரினால் ஏற்படுத்துப்படும் படையை மாத்திரம் நீக்குவதனால் இலத்திரனியல் சாதனங்களுக்கு எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதுடன் இதன் பெறுமதியானது 19.97 அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நமது நாட்டுப் பெறுமதியில் சுமார் 2450 ரூபா.

## ஒரு கல்லில் இரு மாங்காய்

ஒன்றிற்கு மேற்பட்ட இணையக் கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு அவற்றின் கடவுச் சொற்களை ஞாபகம் வைத்திருத்தல் அல்லது மீண்டும் மீண்டும் அவற்றினை தட்டச்சு செய்தல் போன்ற சிரமமாகக் காணப்படும். இதனை தவிர்ப்பதற்கு Password Box எனும் மென்பொருள் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது. இது நீட்சியாகவும் கிடைக்கின்றது.




இலவசமாகக் கிடைக்கும் இந்த நீட்சி அல்லது மென்பொருளானது எந்தவொரு தளத்திலும் செயற் படக்கூடியதாகக் காணப்படுவதோடு, முற்றிலும் பாதுகாப்பானதாகக் காணப்படுகின்றது.

மேலும் எந்தவொரு இடத்திலிருந்தும் எந்தவொரு சாதனத்தின் மூலமாகவும் வேண்டிய தருணத்தில் கடவுச்சொற்களை மீண்டும் மீண்டும் ஒரே கிளிக்கில் பயன்படுத்தி கணக்கினுள் உள்நுழையும் வசதி காணப்படுகின்றது.

*தரவிறக்கச் சுட்டி:*

PasswordBox.com Free Password Manager.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு

நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# அரசனும் அரசியும்



**பீர்பாலை** அமைச்சர் பதவியில் இருந்துவிரட்ட அவரது எதிரிகள் பல முயற்சிகள் செய்து தோற்றுப் போயிருந்தனர். அவர்கள் அனைவரும் அரசியாரின் தம்பியை அணுகி பீர்பாலை அரசவையிலிருந்து நீக்க ஏதாவது செய்தால் அந்த இடத்தில் உங்களை இருத்தலாம் என்றும் இதனால் நீங்கள் மன்னருக்கு நெருக்கமாக இருக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்றும் தூபம் போட்டனர். பதவி ஆசை முற்றியதாலும் மன்னருக்கு மிக நெருக்கமான முறையில் பீர்பால் இருப்பதால் ஏற்பட்ட காழ்புணர்ச்சியாலும் அரசியாரின் தம்பி இதற்கு சம்மதித்தான்.

அவன் அரசியாரிடம் சென்று ஏதாவது நாடகமாடி பீர்பாலை தொலைத்துக்கட்டு. இல்லையேல் நான் தற்கொலை செய்து கொள்வதை தவிர எனக்கு வேறு வழியில்லை என்றும் மிரட்டலானான். அரசியும் தம்பியின் மேலிருந்த பாசத்தால் நாடகமாட சம்மதித்தாள். அவன் கூறிய திட்டப்படி அன்று அரசி நாடகமாடினாள்.

அன்று மன்னர் அந்தப்புரத்திற்கு வந்தபோது அரசியார் அழுது கொண்டிருந்தாள். மன்னர் அதிர்ந்தார். காரணம் வினவினார். அரசியோ பீர்பால் மிகவும் செருக்குற்று இருப்பதாகவும் அரசியாகிய தன்னை மதியாமல் நடந்துகொள்வதாகவும் அவரை பதவியில் இருந்து நீக்கவேண்டும் எனவும் கூறி விம்மலானாள். அரசர் மேலும் அதிர்ந்தார். "பீர்பாலை எந்த காரணமும் இல்லாமல் எப்படி பதவி நீக்கம்செய்வது?. அவர்போல அற்புத மனிதர் கிடைக்க மாட்டார். இதோ பார், அவர் உன்னை மதிக்குமாறு நடந்துகொள்ள என்ன செய்ய வேண்டும் என்று கூறு. அதைச் செய்வோம். அது நடக்கவில்லை என்றால் நீ கூறுவதைப் போல அவரை பதவிநீக்கம் செய்யலாம். என்ன சரியா?" என்றார் மன்னர்.

அரசியும் சம்மதித்தார். அரசியின் யோசனைப்படி இதற்காக ஒரு நாடகமாட இருவரும் தீர்மானித்தனர். அரசி கூறியதாவது; "நீங்கள் என்னிடம் சண்டை போட்டுக்கொண்டு வெளியேறிச் சென்றது போல நடியுங்கள். பீர்பால் சமரசம் செய்யவருவார். நீங்கள் அரண்மனைக்கு வர மறுத்துப் பிடிவாதம் பிடிக்கவேண்டும். உன்னால் முடிந்தால் மகாராணியாரை இங்கே வந்து பார்க்கச் சொல்" என்று சவால்விடுங்கள். இதில் தோற்றால் அமைச்சர் பதவியிலிருந்து விலகத் தயாரா? என்று கேளுங்கள். அதற்கு அவர் சம்மதம் தெரிவிப்பார். என்னைச் சமா தானம் செய்ய வருவார். என்னிடம் மரியாதையாக நடந்துகொண்டால் நான் மதித்து வருவேன். இல்லையேல் நான் மிகவும் பிடிவாதமாக வர மறுத்துவிடுவேன். அவர் முயற்சியில் தோற்பார். தானாகவே பதவியை விட்டு விலகிவிடுவார். என்று யோசனை கூறினார்.

மன்னரும் இதற்கு சம்மதித்தார். மன்னருக்கு பீர்பால்தான் வெல்வார் என்று நன்றாகத் தெரியும். மறுநாள் மன்னர் அரசியிடம் கோபப்பட்டு அரண்மனையை விட்டு வெளியேறிவிட்டார் என்று செய்தி காட்டுத் தீ போல பரவியது. பதறிய பீர்பால் மன்னரைச் சென்று பார்த்தார். மன்னரோ திட்டமிட்டபடி "பீர்பால், நான் அரண்மனைக்குத் திரும்ப வேண்டுமானால் எனது ஒரு நிபந்தனையை நீர் நிறைவேற்ற வேண்டும்" என்றார்.

"எந்த நிபந்தனை என்றாலும் சொல்லுங்கள். நான் நிறைவேற்றுகிறேன்". "அது உம்மால் முடியாது" "நிச்சயம் முடியும்" "முடியாது, ஒரு வேளை நீர் தோற்றால்.." "நான் அமைச்சர் பதவியை விட்டே விலகி விடுகிறேன்".

எல்லாம் திட்டப்படி நடப்பதால் மன்னர் புன்னகைத்தார்.

"பீர்பால், கோபித்துக்கொண்ட நான் தானாகவே அரண்மனை திரும்பமாட்டேன். அரசியார் என்னை இங்கே வந்து அழைத்துச் சென்றால்தான் வருவேன் உன்னால் முடிந்தால் அவரை இங்கே அழைத்து வா" என்றார் அக்பர்.

இதைக் கேட்ட மாத்திரத்தில் இதில் ஏதோ சூழ்ச்சி இருப்பதாகவே பீர்பால் மனதிற்கு தோன்றியது. அவர் அரசியை வரவழைக்கத் திட்டம் போட்டார். கண்களில் கண்ணீருடன் அரசியை சந்தித்தார் பீர்பால். "பீர்பால் என்ன நடந்தது? ஏன் இந்தக் கண்ணீர்?"

"என்ன சொல்வது அரசியாரே, மன்னர் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் இப்படி பாதை மாறி போகிறாரே. மனம் வெறுத்துப் போனதால் நான் பதவி விலகிவிட்டேன்"

"என்ன? விலகிவிட்டீர்களா...? தெளிவாகச் சொல்லுங்கள்.. மன்னர் நீக்கினாரா? நீங்களே விலகினீர்களா?"

"அரசியாரே.. நானே விலகிக்கொண்டேன்." "காரணம்.?" "என்னதான் உங்கள் மீது கோபம் இருந்தாலும் உங்களுக்கு துரோகம் செய்வதுபோல மன்னர் நடந்து கொள்வாரா? நான் எப்படிச் சொல்வேன்.. அரசியாரே.. உங்களை நிரந்தரமாக ஒதுக்கி வைத்துவிட்டு மன்னர் வேறு திருமணம் செய்ய பிடிவாதமாக ஏற்பாடுகள் செய்து வருகிறார்" என்றார் பீர்பால்.

அரசிக்குத் தூக்கிவாரிப்போட்டது. விளையாட்டுக்குத்தானே சண்டை போட்டேன். மன்னர் நிஜமென்று நம்பிவிட்டாரா என எண்ணிக் குழம்பினாள். அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை. உடனே பீர்பாலை அழைத்துக்கொண்டு மன்னரிருக்கும் இடம் தேடி ஓடலானாள்.

பீர்பாலுடன் அரசியார் வருவதைக் கண்ட அக்பர் மகிழ்ந்தார். தான் நினைத்தது போலவே பீர்பால் சவாலில் ஜெயித்ததை கண்டு பூரிப்படைந்தார். மிகுந்த பதைபதைப்புடன் வந்த அரசியை சமாதானப்படுத்தினார் அக்பர்.

பீர்பாலும் அரசியிடம் தான் நடத்திய நாடகத்தை தெரிவித்தார். அரசி பீர்பாலின் புத்தி சாதுரியத்தைக் கண்டு மிகவும் பாராட்டினார். இருவரும் மகிழ்ச்சியுடன் பீர்பாலுக்கு அன்பளிப்புக்கள் கொடுத்து மகிழ்வித்தனர். அந்த நாள்முதல் அரசி பீர்பாலை விரட்டும் எண்ணத்தை அடியோடு கைவிட்டார். அந்த அரசனும் அரசியும் இவங்க தானோ!

## வாரம் ஒரு திருக்குறள்



குறிப்பறிதல்

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்.

கண்பார்வையின் வேறுபாடுகளை உணரவல்லவரைப் பெற்றால், (ஒருவனுடைய மனதில் உள்ள) பகையையும் நட்பையும் அவனுடைய கண்களே சொல்லிவிடும்.

குறள்:709

## நூலகம்



நூலகம் என்பது ஒரு தேன்கூடு
நூல்கள் ஒவ்வொன்று தேன்துளிகள்
நூலகம் என்பது ஒரு பூக்காடு
அதில் ஆயிரமாயிரம் சுகந்த மலர்கள்
நூலகம் என்பது பழத்தோப்பு
அங்குள்ள நூல்கள்
அனைத்தும் அருங்கனிகள்
நூலகம் என்பது தனி உலகம்
அதுவே மானிடரின் அறிவுலகம்.

ஜெ.நிதர்சனா,
யா/ஊர் புனித மரியாள் றோ.ம. வித்தியாலயம்.

## அறிவியல் துணுக்குகள்

01.லியானார்டோ டார்வின்சி ஒரு கையில் எழுதிக்கொண்டே மறு கையில் வரையுவும் செய்வார்.

02. கண்களை திறந்துவைத்து தும்முவது சாத்தியமில்லை

03. நாம் பயன்படுத்தும் tooth-brushகளை கழிவறையில் இருந்து குறைந்தது ஆறு அடி தள்ளிவைக்க வேண்டுமென பல் மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றார்கள்.


04.விரல்களில் நகங்கள் வளர்வது இயற்கை. அதில் ஆட்காட்டி விரலில் மிக நிதானமாகவும், நடுவிரலில் மிக வேகமாகவும் வளருமாம்.

05. நான்கு வயது குழந்தை நாளைக்கு நானூறு கேள்விகள் கேட்கின்றதாம்.

06. ஒவ்வொருவரின் கைரேகையும் தனித்துவமானது. அதேபோல தான் நா ரேகையும்.

07. பன்றிகள் தானாக வானத்தை பார்ப்பது சாத்தியமே இல்லை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30.07.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1001**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 999**

எம்.நவீன், அராலி தெற்கு, அராலி

பரிசுக்குரியவர்: 999

பாராட்டுக்குரியவர்கள்

01. மு.சங்கவி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
02. எம்.பிரியந்தி, கொள்ளுப்பிட்டி.
03. என்.நிஷாந்த, பிரதான வீதி, புத்தளம்.
04. தா.சிந்துஜன், வேலணை மேற்கு, வேலணை.
05. மா.அபிஷா, இரத்தினபுரம், கிளிநொச்சி.
07. பொ.பிரியங்கா, கைதடி மேற்கு, கைதடி.
08. சி.மதுஷன், கொக்குவில், யாழ்ப்பாணம்.

## மனைவியே துணை!

தோமஸ் ஆல்வா எடிசன் புகழ்பெற்ற விஞ்ஞானி. ஆனால் அவருக்குக் காது கேட்காது. ஆகவே அவர் தன் காதலிக்குத் தந்திமொழியைக் கற்றுக்கொடுத்தார். தான் அவரைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதை அவளுடைய கையில் தன் விரல்களால் தந்தித் தாளமிட்டு சொன்னார் எடிசன். அதைப் புரிந்துகொண்ட காதலி அவர் கரத்தில் தானும் தந்தி மொழியில் சம்மதம் தெரிவித்தார்.

அவ்விருவரும் மணம் புரிந்துகொண்ட பிறகு ஒரு நாடகத்திற்குச் சென்றார்கள். அங்கே கதாபாத்திரங்கள் பேசும் வசனங்களைக் கேட்டுத் தன் பாராட்டுகளைத் கைதட்டித் தெரிவித்தார் எடிசன். அவரைப் பற்றி அறிந்த உடனிருந்த நண்பர்களுக்கு ஆச்சரியம். அவருக்குத்தான் காது கேட்காதே. அவரால் எப்படி கச்சிதமாக பாராட்ட முடிகிறது என்று?

அதற்குக் காரணம் அவர் மனைவிதான். அருகில் அமர்ந்து எடிசனின் தொடையில் கதாபாத்திரங்கள் பேசும் வசனங்களைத் தந்தி மொழியில் தெரிவித்தார்.

## உங்களுக்குத் தெரியுமா?

குடியரசு எனும் நூலை எழுதியவர் - பிளேட்டோ
கடலிலிருந்து பெறப்படும் உலோகம் - மெக்னீசியம்
இடிமுழக்கத்தின்போது உருவாகும் அமிலம் - நைட்ரிக் அமிலம்
பிரித்தானியாவின் தேசிய சின்னம் - ரோஜா மலர்
ஒஸ்கார் விருது வழங்கப்படும் துறை - சினிமாத்துறை
தெற்கின் பிரித்தானியா என அழைக்கப்படும் நாடு - நியூஸிலாந்து
உலக தபால் தினம் கொண்டாடப்படுவது - ஒக்டோபர் 09
கண்ணாடியில் உள்ள பிரதான மூலம் - பொட்டாசியம், சிலிக்கா

ஜெ.நிதர்சனா,
தரம் -04
யா/ஊர் புனித மரியாள் றோ.ம. வித்தியாலயம்,
ஊர்காவற்றுறை.

## ஸ்டைலின் அதிசயம்... 



ர.தனுசன்,
கிளி:கனகாம்பிகைக் குளம்
அ.த.க. பாடசாலை

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

166

**மறுபடியும்** பரசுராமின் பண்ணைக்கே திரும்பி வந்தனர். பரசுராம் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

பூலானுக்கு வானொலிச் செய்தி கேட்பது தினசரி கடமைகளில் ஒன்றாகிவிட்டது. தனது உடைமைகளுடன் மறக்காமல் ட்ரான்சிஸ்டர் ரேடியோவையும் எடுத்துச்செல்ல மறப்பதில்லை.

"சரணடைந்தால் சேவை செய்யவா விடுவார்கள்? சிறையில் போட்டு மூடி வைத்திருப்பார்கள்." என்றால் பூலான்.

"சில காலம் மட்டும்தான் சிறைவாசம் அதற்கு உடன்பட்டால்தானே சரணடையப் போகிறோம்!" என்றான் மான்சிங்.

தனக்கும் பரசுராமுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலுக்குள் புகுந்த மான்சிங் அபிப்பிராயம் சொன்னதும் அவனை ஒரு பார்வை பார்த்தாள் பூலான்.

தன்னைத் தவிர அனைவருமே சரணடைய விரும்புகிறார்கள் என்பது புரிந்தது. அவர்கள் அப்படி நினைப்பதில் தவறில்லை என்று ஒரு சமயம் தோன்றும் வேறொரு சமயம் அவர்கள் மீது வெறுப்பும் தோன்றும். தான் மட்டும் தனிமைப்பட்டுவிட்டதுபோல அந்தரமாக இருக்கும்.

தனிமை உணர்ச்சிக்கு ஆட்படும் போதெல்லாம் விக்ரம் மல்லாவின் நினைப்பு நெஞ்சுக்கூட்டில் இருந்து பீறிட்டுக் கிளம்பும்.

"மல்லா மட்டும் இன்று உயிரோடு இருந்திருந்தால்..." என்ற நினைப்பு பூலானை அடிக்கடி கலங்கவைக்கும்.

மான்சிங்குடன் பலமுறை இரண்டறக் கலந்தபோதும் மல்லாவின் இடத்தை நிரப்ப அவனால் முடியாது என்பதையும் பூலான் உணர்ந்தே இருந்தாள்.

மல்லாவின் நினைவுகளை பூலானிடம் இருந்து களைவதற்கு யாராலும் முடியாது என்பதை மான்சிங்கும் நன்கு

எங்கள் விசேஷமான வரவேற்பு முறை!" என்றான் மான்சிங். சதுர்வேதி இலேசாகப் புன்னகைக்க பூலான் அங்கு வந்துசேர்ந்தாள்.

கையில் ரைபிளுடன் தலையில் சிவப்பு பட்டியுடன் மார்புக்கு குறுக்காக அணிந்த ரவைப்பட்டியுடன் பூலானின் கம்பீரம் சதுர்வேதிக்கு பிரமிப்பாக இருந்தது.

பேச்சுவார்த்தை ஆரம்பித்தது. சதுர்வேதியுடன் இருந்த பேச்சு நடத்த வசதியாக மரங்களில் ஒரு பெரிய படங்கு கட்டியிருந்தார்கள். அப்போது பயங்கரமான பனிக் காலம் என்பதால், குளிர்காற்றும் வீசியடித்தது. அதனைத் தடுப்பதற்காக தடிப்பான துணியை வளைத்துக் கட்டியிருந்தார்கள்.

ரொட்டியும் தேநீரும் வழங்கப்பட்டது. தேநீர் குளிருக்கு இதமாக வயிற்றுக்குள் இறங்கியது.

"உங்கள் நிபந்தனைகள் சிலவற்றை ஏற்க மத்திய மாநில அரசு தயாராக இருக்கிறது. சில நிபந்தனைகளை நீங்களும் விட்டுக் கொடுக்க வேண்டும்!" என்று சதுர்வேதி கூறினார்.

அதுவரை உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்த பூலான் சட்டென்று முகம் மாறினாள்.

"நீங்கள் எல்லாம் என்னய்யா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இந்தப் பூலான் உங்களிடம் வந்து கைகளை உயர்த்திக்கொண்டு மண்டியிடப் போகிறாள் என்றா நினைத்துவிட்டீர்கள்? போய்யா முடிந்தால் என்னை பிடித்துக் கொள்ளுங்கள். உங்கள் பொலிஸ் படையால் ஒரு.....ம் பிடுங்க முடியாது.

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு



அறிந்திருந்தான்.

பூலான் தனிமையாக ஆழ்ந்த யோசனையில் இருக்கும்போது மான்சிங் அவளை குழப்பாமல் ஒதுங்கியே இருப்பான். மல்லாவின் நினைவுகளில் மூழ்கி இருக்கிறாள் என்றுதான் நினைப்பான்.

இதுவரை மரியாதை காட்டிய பூலான் அதற்கு நேர்மாறாகப் பேச முற்பட்டது சதுர்வேதிக்கு ஆச்சரியமாக இருந்தது.

மான்சிங்கோ, மற்றவர்களோ ஆச்சரியப்படவில்லை. பூலான் அடிக்கடி மனம் மாறக்கூடியவள் என்பது அனைவருக்கும் தெரியும்.

அவர்கள் மௌனமாக இருக்க பூலான் மறுபடி சாந்த சொரூபியாகி விட்டாள்.

"நான் கோபப்பட்டுவிட்டேனா? இது என் சுபாவம். பின்னே கோபம் வராதா சொல்லுங்கள்! நான் என்ன நாட்டையே என்னிடம் ஒப்படைக்கச் சொல்லியா கேட்கிறேன்? நாங்கள் சரணடைவதால்

"கொள்ளைக் கோஷ்டியினருடன் ஏற்பட்ட மோதில் ஐந்து கொள்ளையர்களை பொலிஸார் சுட்டுக் கொன்றனர். மோதலில் இரண்டு பொலிஸார் சிறுகாயங்களுக்கு உள்ளானார்கள்" என்று கலப்படமே இல்லாத பொய் கூறப்பட்டபோது, பூலான் விழுந்துவிழுந்து சிரித்தாள்.

"பொலிஸாரால் இதுவரை கொல்லப்பட்டதாக கணக்குக் காட்டப்பட்ட ஆட்களை எண்ணிப் பார்த்தால் நாங்கள் எவருமே மிஞ்சியிருக்க மாட்டோம்" என்றான் மான்சிங்.

"கையாலாகாத கழுதைகள்" என்றாள் பூலான். "இந்தப் பொறுக்கிப் பயல்களை நம்பி சரணடைய நான் விரும்பவில்லை. சதுர்வேதி வந்தால், சந்திக்க விரும்பவில்லை என்று திருப்பி அனுப்பிவிடுங்கள்!" என்றாள் பரசுராமிடம்.

பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டதே என்று நினைத்தார் பரசுராம்.

தன் ஏமாற்றத்தை வெளியே காட்டாமல், "இல்லையம்மா, சதுர்வேதியை நூற்றுக்கு நூறு நம்பலாம். உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை காத்திருக்கிறது," என்றார்.


"அப்படியானால் இப்போது மட்டும் என்ன கெட்ட வாழ்க்கையா வாழ்கிறேன்? என்று பூலான் கேட்டதும் ஆடிப்போனார் பரசுராம்.

"இல்லையில்லை. யாருக்கும் பயமில்லாத சட்டத்தை கண்டு அஞ்சாத புதிய வாழ்க்கை காத்துக் கிடக்கிறது. உன் மக்களிடம் உனக்கு நல்ல பெயர் இருக்கிறது. அதனால் அவர்களுக்கு நீ சேவை செய்ய முடியும்".

அதற்காக மான்சிங் பொறாமைப்பட்டது கிடையாது.

சதுர்வேதியை மறுபடி சந்திக்க பூலான் ஒப்புக்கொண்டாள். மத்திய பிரதேச முதலமைச்சர் அர்ஜூன் சிங்கை சந்தித்துவிட்டு சதுர்வேதி பூலானைப் பார்க்க வந்திருந்தார்.

பூலானின் முகாமுக்கு அவர் முதன் முதல் வந்திருந்தபோது அவர்மீது



சிறிது சந்தேகம் இருந்தது.

இந்த முறை வந்தபோது சாயலே இல்லாமல் உற்சாகத்தோடு வரவேற்கப் பட்டார்.

பூலான் குழுவைச் சேர்ந்த ஜயவீர், சதுர்வேதியின் காலைத்தொட்டு வணங்கினான். குளிர்காய்வதற்காக தீமூட்டிக் கொண்டிருந்த மான்சிங்கும் எழுந்து வந்து அவர் பாதங்களைத் தொட்டு வணங்கினான். தன்னிடமிருந்த நூறு ரூபா நோட்டை எடுத்து அவரது வலது கையில் வைத்தான்.

சதுர்வேதிக்கு ஒன்றும் புரியவில்லை "இது ஏன்?" என்றார். "இதுதான்

அரசாங்கத்துக்கு எத்தனை இலாபம்? இல்லை என்றால் எங்களைப் பிடிக்க பணத்தை தண்ணீராகக் கொட்டிக்கொண்டு இருக்க வேண்டியதுதான். எங்கள் நிழலைக் கூட தொட முடியாது தெரியுமா?"

"தெரியும் அதுதானே சரணடைய செய்ய இந்தப் பாடுபடுகிறேன்!" சதுர்வேதி பூலான் குணமறிந்து ஒத்து ஊதினார். சதுர்வேதியின் தந்திரம் பயனளித்தது.

**திருப்பங்கள் தொடரும்...**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன்
பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**
முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக, இந்த வாரம் தொடக்கம் (முரசு 1021 - கு.எ.போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூபா 1000/= ஆக உயர்த்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | 9 | 10 | | 12 |
| 13 | 14 | | | 17 | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 30.07.2013 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 530
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 528- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க[1] | ம[2] | ல[3] | ம்[4] | | மொ[6] |
| தா[7] | க[8] | ம்[9] | | சோ[11] | ழி[12] |
| த[13] | ரி[14] | சி[15] | | | த்[18] |
| ரி[19] | | பு[21] | | மா[23] | தி[24] |
| ன்[25] | தே[26] | | ம்[28] | தி[29] | ற[30] |
| | மா[32] | | ஓ[34] | சோ[35] | ன்[36] |

**இடமிருந்து வலம்**

01. அலங்காரம் அல்லது ஒப்பனை.
07. இலங்கையில். உல்லாசப் பயணிகளைக் கவரும் ஒரு கடற்கரை. (குழம்பியுள்ளது)
13. மணலின் முதல் நிலை.
17. முதல் வேதம். (திரும்பியுள்ளது)
21. பண்பின் முதல் நிலை. (குழம்பியுள்ளது)
25. மலைய மலையில் உண்டாகும் ஓர் ஆறு.
33. கொடியவன் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. ஆலோசனைக்காரர்.
02. ஆவல் ; ஒரு பாடல்.
03. இதை கல்லில் செதுக்கி உருவாக்குவர்.
04. தந்திரம் ; பேராசை.
12. இரக்கமுள்ள.
17. கனக்க ; அதிகரிக்க. (குழம்பியுள்ளது)
21. கடவுள்.
22 . சித்திரரூபம் - கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
25. இது வீதி செப்பனிடப் பயன்படும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 528 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

**சி.கானமயில்நாதன், தில்லையடி, புத்தளம்.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. வி.சுரேந்திரன், இல. 91, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
02. தா.அனாமிகா, தில்லையடி, புத்தளம்.
03. ஆர்.இபாஸ், ஹொரவப்பொத்தான.
05. மா.சோதிகுமார், புலோலி தெற்கு, புலோலி.
06. தீ.ராஜ்குமார், தும்பளை மேற்கு, தும்பளை.
07. மு.வேங்கை, தாளையடி, செம்பியன்பற்று.
08. எஸ்.அஷ்மிகா, நாரஹேன்பிட்டிய.
09. பொ.அற்புதன், பிரதான வீதி, வவுனியா.
10. மி.சாலமன், குருநாகல்.



# என்னது நான் அசிங்கமா நடிக்கிறேனா கடுப்பானார் பிரபல நடிகை!

தமிழில் எதிர்பார்த்த அளவுக்கு பட வாய்ப்புகள் இல்லாததால் மலையாள படங்கள் மாக கவர்ச்சிகாட்ட தயாராக இருப்பதாக வந்த செய்தியை மறுத்திருக்கிறார் இனியா. சற்குணம் டைரக்ட் செய்த 'வாகை சூட வா' படத்தின் மூலம் அறிமுகமானவர்தான் இ அந்தப் படத்தின் சுமாரான வெற்றிக்குப் பிறகு சில படங்களில் நடித்திருந்தாலும், அம் பேர் சொல்லும்படி பெரிய படங்கள் அமையவில்லை.

இதனால் வெறுத்துப்போன இனியா, பேசாமல் தனது சொந்த மொழி மலையாள பக்கமே வாய்ப்புகள் தேடலாம் என்று முடிவெடுத்திருப்பதாகவும் அத தாராளமாக கவர்ச்சிகாட்டி நடிக்கவும் முடிவு செய்துள்ளதாகவும் தகவல்கள் வெளியானது. ஆனால் இதனை உடனடியாக மறுத்துள்ள இனியா,

ஆபாசமாக நடித்து தான் நல்ல பெயர் வாங்கவேண்டும் என்கிற அவசியம் எனக்கு இல்லை. தமிழிலும், மலையாளத்திலும் என் சினிமா வாழ்க்கை நன்றாகவே போய் கொண்டு இருக்கிறது. அப்படி இருக்கும்போது நான் படங்களில் ஆபாசமாக நடித்துத்தான் சினிமாவில் வெற்றி பெறவேண்டிய அவசியம் இல்லை. என்று டென்ஷனாக கூறியிருக்கும் அவர், லேட்டஸ்ட்டாக கமிட்டாகியிருக்கும் மலையாள படத்தில் ஒரு சிங்கர் கேரக்டரில்தான் நான் நடிக்கிறேன், ஒரு சீனில் கூட அதில் ஆபாசமாக நடிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.



# நீருக்

புதிய தொ
காட்சிகளை
கமலுடை
உள்ளி போ
திரைக்கதை
நிறுவனத்து
தயாரிக்கிறா
தாபலாற
நடந்து முடிந்
சர்வதேச இந்
டிரைலர் மற்று
இந்நிலையில்
கமல் கூறுகையி
போதே, இரண்டாம்
விஸ்வரூபம் 2 படத்
முடிவடைந்துவிட்டன.
பாகத்தில் நவீன தொழி
இருக்கிறோம். தண்ணீருக்கு
எடுக்கப்பட்ட சண்டை காட்சி
பேசப்படும். மனித உறவுகளுக்கு
இரண்டாம் பாகத்தை உருவாக்கி
தெரிவித்துள்ளார்.

# கம்பிக் கூட்டில் கவர்ச்சி கன்னி

பொலிவூட்டின் கவர்ச்சி நடிகை மல்லிகா ஷெராவத், தமிழில் சில படங்களில் ஒற்றை பாடலுக்கு ஆடியுள்ளார். ஹொலிவூட்டிலும் நடித்துள்ளார். இந்நிலையில் கடந்த 2006ஆம் ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது ஹோட்டல் ஒன்றில் மல்லிகா ஷெராவத் ஆபாசமாக நடனமாடியுள்ளார். மல்லிகா ஷெராவத்தின் இந்த ஆபாச நடனத்தை டி.வியில் பார்த்த பரோடாவின் முன்னாள் பார் கவுன்சில் தலைவர் நரேந்திர திவாரி என்பவர் வதோரா மாவட்ட கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இதுதொடர்பாக மல்லிகாவை நேரில் ஆஜராகும்படி கடந்தவாரம் கோர்ட் சம்மன் அனுப்பியுள்ளது. ஆனால் இதுநாள் வரை மல்லிகா ஆஜராகவில்லை. இந்நிலையில் இன்று அவர் ஜாமினில் வெளிவர முடியாத அளவுக்கு பிடிவாரண்ட்டை பிறப்பித்தது மாவட்ட கோர்ட்.

கோர்ட்டின் பிடிவாரண்ட் உத்தரவையடுத்து மல்லிகா குஜராத் ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்துள்ளார். ஆனால் அவரது மேல்முறையீட்டு மனுவை ஐகோர்ட் நிரகாரித்துவிட்டது. இதனையடுத்து அவர் மாவட்ட கோர்ட்டில் கட்டாயம் ஆஜராக வேண்டிய சூழல் உருவாகி உள்ளது. அப்படி அவர் ஆஜராகவில்லை என்றால் அவர் கைது செய்யப்படும் சூழல் உருவாகும்.

# காற்றுள்ள போது தூற்றுகிறார் சந்தானம்

தமிழ் திரையுலகில் நகைச்சுவை திறமையை உயர்த்திக்கொண்ட சந்தானம் தனது சம்பளத்தையும் 5 கோடிக்கு உயர்த்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இன்றைய தமிழ் சினிமாவின் பாதிப் படங்கள் சந்தானத்தின் கொமடிக்காகத்தான் ஓடுகின்றன என்று கொலிவூட் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டு வருகின்றன. அதேபோல் தயாரிப்பாளர்களும் சந்தானம் படத்தில் இருந்தாலே போட்ட முதலை எடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையில் சந்தானத்தை தெரிவு செய்கின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தை மிகச் சரியாக பயன்படுத்திக்கொண்ட சந்தானம் தனது சம்பளத்தை 5 கோடியாக உயர்த்தியுள்ளார். சந்தானத்திற்கு மவுசு அதிகமாக உள்ளதால் வேறு வழியில்லாமல் தயாரிப்பாளர்களும் அவர் கேட்கும் சம்பளத்தை கொடுப்பதற்கு தயாராகி வருகின்றனர்.



# அழகு இன்றேல் வாய்ப்பு கிடையாது


சினிமாவில் ஜொலிக்க வேண்டும் என்றால் அழகுதான் முக்கியம் என்கிறார் ஹன்சிகா. இதுகுறித்து அவர் கூறுகையில், நான் சினிமாவுக்கு வந்த புதிதில் நடிப்பு என்றாலே என்னவென்று தெரியாது. ஆனால் அழகாக இருந்ததால் மட்டுமே எனக்கு சான்ஸ் கிடைத்தது, அதன் பிறகுதான் மெல்ல மெல்ல நடிப்பை கற்றுக்கொண்டேன். தற்போதெல்லாம் இரவு, பகல் என இடைவெளிவிடாமல் நடித்து வருவதால் அழகில் கவனம் செலுத்த முடியவில்லை என்று தெரிவித்துள்ளார். இதனால் படப்பிடிப்பின்போது சிறிய இடைவெளி கிடைத்தால்கூட தூங்கிவிடும் ஹன்சிகா, கேரவனுக்குள் வைத்தே அழகு சிகிச்சை செய்து கொள்கிறாராம். மேலும் உடல் பொலிவாக, ஆரோக்கிய மாக இருக்கவேண்டும் என்பதற்காக அவ்வப் போது ஆயுர்வேத மசாஜ்களையும் செய்யத் தவறுவதில்லையாம். குறிப்பாக தனது மேனியை பளபளப்பாக வைத்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறாராம்.



???

...தாரான-
மிழில
யா.
னிக்கு
ன
காக




## விக்ரமுக்கு பிசி பாராட்டு

இலக்கணங்களை மீறிய ஹீரோ விக்ரம் என்று பாராட்டியுள்ளார் முன்னணி ஒளிப்பதிவாளரும், இயக்குநருமான பிசி ஸ்ரீராம். விக்ரமின் ஆரம்ப நாட்களில் அவரை வைத்து மீரா என்ற படத்தை இயக்கியவர் பிசி ஸ்ரீராம். பாடல்கள், ஒளிப்பதிவுக்காக பெரிய அளவில் பேசப்பட்ட படம். இப்போது விக்ரம் நடிக்கும் ஐ படத்தில் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றுகிறார்.

விக்ரம் பற்றி பிசி ஸ்ரீராம் கூறுகையில், நடிகனாக மட்டுமல்ல..மனிதனாகவும் விக்ரம் ரொம்ப ஜெண்டில்மேன். ஆச்சரியப் படக் கூடிய ஒரு உழைப்பாளி. ஒரு ஹீரோவுக்கு நீங்க என்னலாம் சினிமா இலக்கணம் வெச்சிருந்தாலும் அது இல்லாத ஹீரோ அவர். தன்னை நடிகனாக மட்டுமே முன்நிறுத்திக் கொள்கிற ஒருத்தர். நமக்கு இவ்வளவுதான் வரும்னு பெரும்பாலும் பயப்படுவாங்க. ஆனா, விக்ரம் தனக்கு இதெல்லாம் வருமானு சோதனை பண்றதையே வேலையா செய்றவர். என்னைப் பொருத்தவரை திறமையோடு கூடிய முயற்சிங்கிற விஞ்ஞானம் தப்பே பண்ணாது. அதுக்கு சரியான உதாரணம் விக்ரம்தான் என்று பாராட்டியுள்ளார்.

## ...கடியில் நடக்கிறது சண்டை

...நுட்பத்தின் மூலம் விஸ்வரூபம்-2 படத்தில் தண்ணீருக்கு அடியில் சண்டை ...மாக்கி உள்ளதாக கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

...பூஜாகுமார், ஆண்ட்ரியா, ராகுல்போஸ், சேகர் கபூர், நாசர் ...ன் நடிப்பில் விஸ்வரூபம்-2 தயாராகி உள்ளது. கமல் ... வசனம் எழுதி இயக்க, கமல்ஹாஸனின் ராஜ்கமல் ...ன், ஒஸ்கார் ரவிச்சந்திரன் இணைந்து இப்படத்தை ...

..., பாங்கொக்கில் இதன் பெரும் பகுதி படப்பிடிப்பு ...விட்டது. இந்நிலையில் அண்மையில் நடைபெற்ற ...ப திரைப்பட விழாவில் விஸ்வரூபம் 2 படத்தின் ... போஸ்டர்களை கமல் வெளியிட்டார். ...த்தின் சிறப்பம்சம் குறித்து சமீபத்தில் ... விஸ்வரூபம் படத்தை உருவாக்கும் ...பாகம் பற்றி சிந்தித்தேன். ...றகான 90 சதவிகித படப்பிடிப்புகள் ...தல் பாகத்தைவிட இரண்டாம் ...நுட்பங்களை பயன்படுத்தி ...அடியில் வைத்து ... நிச்சயம் பெரிதாகப் ...முக்கியத்துவம் கொடுத்து ...க்கிறேன் என்று

## பிரியாணியை முந்துவாரா அழகுராஜா?

ரசிகர்களிடையே பலத்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது கார்த்தி நடித்து வெளிவர இருக்கும் படம் பிரியாணி. சிறுத்தை, அலெக்ஸ் பாண்டியன் என்று அதிரடியான படங்களில் தொடர்ச்சியாக நடித்துவந்தார் கார்த்தி. இதனைத் தொடர்ந்து தற்போது பிரியாணி மற்றும் அழகுராஜா ஆகிய இரு படங்களில் நடித்துவருகின்றார்.

அழகு ராஜா படமானது முழுக்க முழுக்க ஒரு கொமடி திரைப்படம் என்பதால் இந்த படமானது பிரியாணிக்கு முன்பு வெளியானால் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கின்றார் கார்த்தி. ஏனெனில் தொடர்ச்சியாக அதிரடி படங்களில் நடித்துள்ளதால் அழகுராஜா படத்தில் தன்னை ஒரு கொமடியனாக பார்ப்பது ரசிகர்களுக்கு கொஞ்சம் வித்தியாசமாக இருக்கும். ஆனால் பிரியாணி படத்தில் ஒரு பாடல் மட்டுமே மீதம் இருப்பதால் அந்தப் பாடலை முடிப்பதற்கு சென்னையில் அரங்கு அமைத்து வருகின்றார் இயக்குனர் வெங்கட் பிரபு. அழகுராஜாவை முன்னால் வெளியிட்டால் பிரியாணி காத்திருக்க வேண்டும். "ஒன்றிரண்டு நாட்கள் அல்ல பல வாரங்கள், ஏன் பல மாதங்கள்" கூட ஆகலாம். இதனால் பிரியாணியை விரைவில் வெளியிட வெங்கட்பிரபு திட்டமிட்டு வருகின்றார்.





## குமுறுகிறார் இலியானா

பெண்களின் சுதந்திரத்தை பெற்றோரே பறிப்பதாக ஆவேசப்பட்டுள்ளார் இலியானா. இதுகுறித்து அவர் கூறுகையில், பெண்கள் சுதந்திரம் புத்தகங்களில் மட்டுமே இருக்கிறது என்றெல்லாம் மேடைகளில் பேசுகின்றனர். ஆனால் வீடுகளில் பெற்றோர்களோ பெண்களை சுதந்திரமாக வளரவிடாமல் நிறைய கட்டுப்பாடுகள் விதிக்கின்றனர். ஆண்களிடம் பேசக்கூடாது. ஆண்கள் கேலிபேசினால் அதனை எதிர்க்காமல் தலைகுனிந்து போய்விடவேண்டும். சிரிக்கக் கூடாது, முகத்துக்கு நேர் பார்க்கக் கூடாது என்றெல்லாம் பெற்றோர்கள் பெண்களை நிர்ப்பந்தம் செய்கின்றனர்.

இதனால்தான் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், மானபங்கம், பாலியல் பலாத்காரம் என நடக்கிறது. பெண்களை நாலு சுவற்றுக்குள் அடைத்துவைக்காமல் தைரியசாலியாகவும், சுதந்திரமாகவும் வளரவிடுங்கள் என்று கூறியுள்ளார்.

# தேன்கிண்ணம்

## தடம்புரளும் நியதி...!

கற்பாறைகளும் கரைந்து விடுகிறது
இவ்வுலகுதனில் நடக்கும்
கொடிய பல செயல்களினால்...!
விண்மீன்களும் உதிர்ந்து விடுகிறது
அப்பாவி பல மழலைகளின்
உயிர்கள் பறிக்கப்படுவதனால்...!

கடலலைகளும் பேரலைகளாக
உயர்ந்து விடுகிறது
மனிதன் மிருகமாக
நடந்து கொள்வதனால்...!

சுவாசிக்கும் வாயுகூட
சீற்றம் கொண்டு உயிர்கள்
பல காவுகிறது
ஈன்றெடுத்த அன்னையையே
ஈவிரக்கமின்றி கொல்லும்
அரக்கர்கள் பலர் வாழ்வதனால்!

**எம்.யூ.அல்சாத்,**
**ஒட்டமாவடி.**

## ஈழத்துக் கவிஞர்கள்

### சில்லையூர் செல்வராஜன்



ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவர். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம், வானொலி நாடகம், மொழிபெயர்ப்பு, விளம்பரம் எனப் பரவலான பங்களிப்புச் செய்தவர். தான் பிறந்த ஊரின் பெயரை முதல்நிலைப்படுத்தி தனது பெயரை சில்லையூர் செல்வராஜன் எனச் சூடிக்கொண்டார்.

தான்தோன்றிக் கவிராயர் என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். அங்கதப் பாணிக் கவிதைகள் எழுதிய இவரது கவிதைகள் கவியரங்குகளில் பெருவரவேற்புப் பெற்றன. விளம்பரத்தைக் கவிதை இலக்கியமாக ஆக்கிய பெருமையும் அவரைச் சாரும். 'உப்பு' என்ற கவிதை, பென்குவின் பதிப்பகம் வெளியிட்ட தொகுப்பில் இடம்பெற்றது. சில்லையூராரின் கவித்திறனுக்கு "ஞாயிறென வந்தாள்" என்ற பாடல் பெரும் புகழ்சேர்க்கிறது. கிழமைகளையும், மாதங்களையும் வைத்துமிக அழகாக வடித்த பாடலாகும். அக்கவிதையின் உயிர்த்துடிப்பு சில்லையூரின் வாயால் வரும்போது இன்னும் மெருகுபெறுகிறது.

20 ஆம் நூற்றாண்டின் மகா கவிஞராகத் திகழ்ந்த சில்லையூர் செல்வராஜன் தணியாத தாகம் என்ற வானொலி நாடகத்தை இலங்கை வானொலியில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் இயக்கிச் சாதனை படைத்தார்.

ஷேக்ஸ்பியர் கவிதைகளை தமிழில் சிறப்பாக மொழி பெயர்த்துள்ளார். ஜூலியஸ் சீசர் நாடகத்திலிருந்து இவர் மொழிபெயர்த்த பகுதி மிகச் சிறப்பானதாகும். 1959இல் பம்பாயில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் பங்குபற்றியவர். 1987 ஆம் ஆண்டு கோபல் நகரில் (பாரத்பவன்) நடைபெற்ற உலகக் கவிஞர்கள் மகாநாட்டில் பங்குபற்றிய ஒரேயொரு தமிழன் இவராவார்.

**முற்போக்கு எழுத்தாளர்**

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய அங்கத்தவராக இருந்து இலக்கியச் செயற்பாடுகளில் முன்னின்றார். 1950இல் பொதுவுடைமைவாதியாக காலடி வைத்த சில்லையூர் செல்வராஜன் அதைப் பற்றுறுதியுடன் கடைசி மூச்சுவரை பற்றிக் கொண்டார். பண்டித வர்க்கத்தினரால் இழிசனர் வழக்கு என்று கொச்சைப்படுத்தியவர்களுக்கு எதிராக தன் கவித்துறை திறமையால் சாடி கவிதைகளைப் படைத்தார். இழிசனர் மரபு வாதத்தில் ஊறிநின்று ஓரங்க நாடகத்தைச் செய்துகாட்டி அவர்களுக்குச் சாட்டையடி கொடுத்தார்.

ஆறுமுக நாவலரைப் பற்றி மேல்தட்டு வர்க்கத்தினர் கொண்டிருந்த கொள்கைகளுக்கு மாறாக, நாவலரின் மனிதநேயத்தை எடுத்தியம்பி கவியரங்குகளில் அவரின் தனித்துவத்தை நிலைநாட்டி வந்தார். பண்டித பரம்பரையினரை சாடி புதுக்கவிதைப் பரம்பரையைச் சில்லையூரான் முன்வைத்தார்.

**அங்கதக் கவிஞர்**

யாழ்ப்பாணச் சாதி முறைக்கு எதிராக புதிய வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க அங்கத மொழியில் செல்வராஜன் சங்கநாதத்துடன் கவிதையால் எடுத்தியம்பியுள்ளார். சமுதாய அடக்குமுறைக்கு, அநியாயங்களுக்கு, மூடக் கொள்கைகளுக்கு எதிராக அவற்றை ஒழித்துக்கட்ட கவிதையால் சாடினார். அங்கதக் கவிதைகள் புதுமைக் கருத்தை இலக்கியத்தில் புகுத்தின. தலைவர்கள் வாழ்க மாதோ என்ற அங்கதக் கவிதை மூலம் அரசியல் தலைவர்களை சில்லையூரான் சாடினார்.

**இவரது நூல்கள்**

**ஊரடங்கப் பாடல்கள்**
**ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி**
**கவிதை சிமிழ் (ஒலிப்பேழை)**
**தணியாத தாகம் - திரைப்படச்சுவடி நூல்**

***

## போதும் என்ற மனம்

போதும் என்ற மனம்
போதாது என்று
போர் தொடுக்கும்
காலம்தான் இது.

வாழ்க்கைச் செலவு
வானில் முட்டுவதால்
கொஞ்சம் நீ
நிலைமாறுவது
நியாயம்தான்!
முழுதாய் மாறிவிடாதே என்று
முடிவாய் கட்டளை இடுகிறேன்
என் மனதுக்கும்
எல்லோர் மனதுக்கும்.

பூவாய் இருந்தாலும்
இலையாய் இருந்தாலும்
சருகாகும் என்பது
எல்லோரும் அறிந்த உண்மை...
போதாது என்று நினைத்தால்
போதாதுதான்!
போதும் என்று நினைத்தால்
எள்ளளவு கிடைத்தாலும்
எல்லையற்ற மகிழ்ச்சி பிறக்கும்
இது நான் கூறும் உண்மை!

என்னை இயக்கும்
என் மனமே!
போதாது என்று நினைத்து
இருப்பதையும்
இழக்க வைக்காமல்....
கிடைப்பதையும்
தடுத்து விடாமல்
அவதானமாய் இரு!

பேராசை பெரும் நஷ்டமாம்
அரசனை நம்பியவள்
புருஷனை இழந்தாளாம் -
என்றெல்லாம்
படித்த பழமொழிகளை
மறந்துவிட்டாயா?

உண்மை ஒன்றையும்
ஞாபகப்படுத்துகிறேன்
புதுப்பித்துக்கொள் என் மனமே!
உன் உணர்வுகளை...

போ மனமே போ...
கொஞ்சம் பின் நோக்கிப் போ!
முடிந்த விடுதலைப் போரையும்
முடியாத அவலத்தையும்
நினைத்துப்பார்...
கிடைத்தது
போதுமென்று நினைத்திருந்தால்
போர் வெடித்திருக்காது அல்லவா?
அவலம் தொடர்ந்திருக்காது
அல்லவா?

பாடம் பல படித்தும்
பைத்தியமாய் அலையாதே
போதாதென்று!
உனக்கு போதும் என்றதும்
உடனே ஆமோதித்து விட்டாயே...
இப்போதுதான் நீ
எனக்குள் இருக்கும்
என் மனம்.

போதாது என்ற நிலையிலிருந்து
போதும் என்ற நிலைக்கு
வந்திட்டாயே!
போர்க்களமும்
பூங்காவனம்தான் இனி.

**A.பாரிஸ், மிகிந்தலை.**

## மழலை

உள்ளக் கிடக்கையின்
உணர்வலைகளை உசுப்பி
உயிரோட்டமாய் உலவிடும்
உயர்ந்த செல்வ உளவள துணை!

சொல்லால் சொல்லாமலே
செயலால் செப்பனிட்டே
அழுது புரண்டு அடம்பிடித்து
அரவணைப்புத் தேடும் ஆரமுது!

சிரித்து சிரித்து சின்ன வாயால்
சிந்தை கிளறி சிந்துபாடும்
சின்னமலர் அவள் உலா
எண்ணச் சிதறலோ பலபல!

குறுகுறு நடந்து குதூகலித்து
சிறுகை நீட்டி மகிழ்வித்து
தூழியில் ஆடி தூங்கிட
துடிக்கும் துடிப்பான பூ!

கள்ளங்கபடமற்ற வெள்ளை
உள்ளங்கொண்ட பிள்ளை
தந்த அகமகிழ்வின் ஆர்ப்பரிப்பில்
பொங்கி வழியுது மழலையே இன்பம்!

**அப்ரார் ஏ.அஸீஸ், யாழ்ப்பாணம்.**

## நடிக்கின்றாயா...?!

உன் அன்பு
என் வாழ்நாளில்
ஓர் வசந்தம்
உன்னை நினைக்க
தெரிந்த - என்
இதயத்திற்கு
உன்னை மறக்க
தெரிய வில்லையடா!
உன்னோடு பேசிய
அந்த நாள்
ஞாபகங்கள் - என்னை
விட்டு செல்லவில்லை
என்னோடு
கலந்துவிட்டன - ஆனால்
நீயோ
அந்த நாள்
ஞாபகங்களை
மறந்து விட்டாயா?
அல்லது
மறந்தது போல
நடிக்கின்றாயா...?

**க.கிருசிகா, வவுனியா.**

## தூக்கமதன் பக்கங்கள் தீர்த்துவிடும் ஏக்கங்கள்...!

உலகிலுள்ள உயிர்களெல்லாம்
நீண்ட நேரம் நிம்மதி காணும்
நிறைவான நிசப்த நேரமது...!
ஒளி அலைகள் அவசியமில்லா
மூன்றாவது விழியும் - அதுவே...!

சிறப்பிற்கும் வெறுப்பிற்கும்
பெயர்போன பெரிய மனிதர்
என்றுகூட இதனைக் கூறலாமே...!
இரவின் உறவில் இதுதான் முதலில்...!
இன்றியமையா அழகிய பொழுதில்...!
பாசாங்குடன் பண்பாக வீசும்
பனியில்...!
தாலாட்டும் நிலவும் தாராளமாய்...
நட்சத்திர திரளில்...!

மனிதனுக்கு மருந்தாகி
மருத்துவம் செய்து மஹானாகி
விழிகளுக்கும் விருந்தாகி
வாழ்வினில் இனிக்கும்...!
இயலாத இல்லாத
இயல்பற்ற இலக்குகளை - கூட
இலகுவாக எட்டிப் பார்க்க
எளிய வழி இது எளியவருக்கும் கூட...!

கனவு எனும் விந்தை உலகம்
அதில் மனிதன் நாமோ
மோகமுள்ள மந்தை கழகம்...!
காண முடியா காட்சிகளும்
கண்டு கரைந்த சம்பவங்களும்
கருவுற்றுக் கரை சேரும்
கடவுள் தந்த கண்ணிய வரம் - இதனை
கண்ணில்லாதவரும் காணமுடியுமே...!

தூக்கமதன் பக்கங்கள்...!
தீர்த்துவிடும் ஏக்கங்கள்...!
இன்பமாகி இதயம் வருடி...!
இயற்கையாகி புத்துணர்க்கும்...!

துன்பத்திலும் ஆறுதலாகி
ஆத்மாவிலே அமைதியை
விதைக்கும்...!
கள்ளமில்லா நல்ல நண்பன்...!
பேதமின்றி பாசம் கொள்ளும்
உற்ற நண்பன்...!

அளவுக்கு மீறினால் இதுவும்கூட நஞ்சு
மழலை முகத்தில் குழைந்து சிரிக்கும்
வெண் வண்ணப் பிஞ்சு...!


விடியலுக்கு அர்த்தம் புகட்டும்
விருதுகள் பெறா வேங்கை இது...!
உயிர்களின்
முடிவுரையில் முழுமை பெறும்
முற்றுப்பெறா கங்கை இது...!

**எஸ்.சிபானி முஹம்மட்,**
**ஒலுவில்.**

**மக்களின்** விடிவிற்கான போராட்டத்தில் மரணித்தவர்களை நினைவுகூர்வது சீரிய பண்பாடு. அது இன்றைய எமது வரலாற்றுச் சூழலில் மேலதிக முக்கியத்துவம் வாய்ந்தது. இவர்களையெல்லாம் மறந்து விடுவோம். அந்தச் சுவடே தேவையில்லை என்று ஒரு கூட்டம் புறப்பட்டிருக்கிறது. அது மக்களின் இன்பதுன்பங்களில் பங்கு பெறாத எந்த தியாகமும் செய்யாத கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் மக்கள் என்பதே மறக்கப்பட்டு வருகிறது. மாற்றங்கள் எதுவும் சமூகத்தில் பெரிதாக நிகழ்ந்து விடவில்லை. கிராமசேவகர் அலுவலகம், பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை எந்த இடங்களிலும் சாதாரண மனிதனுக்கு மரியாதை எதுவும் கிடையாது. அதிகார மமதையே மேலோங்கிக் காணப்படுகிறது.

ஒரு சில விதிவிலக்குகள் இருக்கலாம். சாதாரண மக்களுடனான சாதாரண வார்த்தையாடல்களில் கூட வன்முறை விரவிக் கிடக்கிறது. அதிகார வர்க்கத்தின் செயற்பாடுகளை தட்டிக்கேட்கும் அரசியல், கலாசார இயக்கம் தேவைப்படுகிறது. மனிதத் தன்மையற்ற அதிகார கட்டமைப்பில் பாரிய சீர்திருத்தங்கள் தகர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

இலஞ்சம், ஊழல், முகஸ்துதி, சலுகை என்பன நிர்வாணமாகவே உலாவித் திரிகின்றன. 30 ஆண்டுகள் போராடிய சமூகத்திற்கு கிடைத்த பரிசு இதுதான் என்றால் நாம் தீவிரமாக சிந்திக்கவேண்டும். போராட்டத்தில் தார்மி வலு அறம் என்பன எந்தளவுக்கு இருந்தன என்பது பற்றி நாம் மீளாய்வு செய்யவேண்டும். இந்த வரலாற்று படிப்பினை மிகமிக முக்கியமானது. ஏனெனில் நம்பிக்கை வறட்சி விஸ்வரூபம் எடுத்துள்ளது.



# வடக்கு மாகாண சபை சந்திக்கப்போகும் சவால்கள்!!

பேரழிவுகளையும் அவலங்களையும் சந்தித்த போது சம்பந்தமில்லாமல் இருந்துவிட்டு இப்போது தமிழ் மக்கள் மீது அதிகாரம் செலுத்த புறப்பட்டிருக்கிறது.

போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் பஞ்சமும் நோயுமாக வாழ, இந்த சௌகரியமான கூட்டம் இவர்களை ஆளப் புறப்பட்டிருக்கிறது. இதுபற்றி மிகமிக எச்சரிக்கையாக இருக்கவேண்டிய தருணமிது.

சமூகத்தின் விடியலுக்கு என்றே ஒவ்வொரு போராளியும் வீட்டிலிருந்து புறப்பட்டிருக்கிறார்கள். தவறான வழிகளில் சிக்குண்டவர்களும் இருக்கிறார்கள். ஆனால் உயிர்த்தியாகம் நிகழ்ந்திருக்கிறது. இந்த தியாகங்கள் வியர்த்தமாவதை, இழிவுபடுத்தப்படுவதை தார்மீக உணர்ச்சி உள்ள எவரும் சகித்துக்கொண்டிருக்க முடியாது. எமது சாதாரண குடும்பங்களின் பிள்ளைகளின் தியாகங்களை கனவான்களிடம் விட்டுவிட முடியாது.

இலங்கையில் தமிழர்கள் பேரழிவுகளை அனுபவித்திருந்தாலும் அனைத்து சமூகங்களும் ஏதோ ஒரு அளவில் அழிவுகளைச் சந்தித்திருக்கிறார்கள். இதில் தேசிய இன சுதந்திரம், ஜனநாயகம், சமூக சமத்துவத்திற்காக போராடியவர்களை நாம் மறந்துவிட முடியாது.

இன்று 30 வருடம் பாரிய யுத்தம் நடந்தது

> வடக்கு மாகாண சபை அமைந்தாலும் அது பல சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும். புத்திசாதுரியமும், பொறுமையும் தீர்க்க தரிசனமும் தேவைப்படுகிறது. தமிழ் ஜனநாயக சத்திகளின் ஐக்கியமும், முஸ்லீம், மலையக மக்களுடன் ஐக்கியமும், தென்னிலங்கை ஜனநாயக இடதுசரி சத்திகளுடனும் ஐக்கியமும் இவ்வாறான முறையிலேயே நாம் இயங்கவேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை வென்றெடுக்க இலங்கை ஜனநாயகமானதும் - பல்லினங்களின் நாடாக மாறுவதற்கும் இது அவசியம். இன்று அதற்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

கண்ணியமான சுயமரியாதையுடன் கூடிய வாழ்வொன்று எம் மக்களுக்கு கிட்டவேண்டும் சுதந்திரமான வாழ்வை நோக்கியே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் திசை தடுமாறி எங்கெங்கோ சென்று முன்னர் இருந்ததை விட மோசமான வாழ்நிலை.

அதிகாரப் பரவலாக்கல் என்ற விடயம் 13 ஆவதை தாண்டி செல்லவில்லை. அந்த 13 ஆவதில் மிச்சமீதியாக உள்ளவற்றையும் பறித்தெடுக்கும் போக்குத்தான் அரச பேரினவாத மட்டத்தில் செயற்படுத்தப்படுகிறது. இதற்கெதிராக தெற்கின் இடதுசாரி ஜனநாயக சக்திகள் குரல் எழுப்புகிறார்கள். 13 ஆவதில் உள்ள பொலிஸ் நில அதிகாரங்கள் உள்ளவாறே இருக்கவேண்டும். அதில் மாற்றம் செய்யக் கூடாது என்று இவர்கள் உறுதிடத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் தரப்பில் 13 வதை பாதுகாக்கவேண்டும் என்ற கருத்து பகிரங்கமாக வெளிப்படுத்தப்படவில்லை.

இது அதிகாரப்பரவலாக்கல் சம்பந்தமான இதயசுத்தியை கேள்விக்குள்ளாக்குகிறது. 13 ஆவதை பாதுகாப்பதற்கு தெற்கின் ஜனநாயக இடதுசாரி சத்திகளுடனும், மலையக முஸ்லீம் மக்களுடனும் இணைந்து செயற்பட தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும் எமது மக்களின் இருப்பு பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிப்பதாக ஏதோ ஒரு அளவில் அதிகார பரவலாக்கல் அரசாங்க கட்டமைப்பு அமையவேண்டும். அதிலிருந்துதான் தொடங்கவேண்டும்.

கிழக்கு மாகாணசபையின் அதிகாரங்களை உறுதிப்படுத்த பிரதானமாக தமிழ் முஸ்லீம் கட்சிகள் இணைந்து யதார்த்தமாக செயற்படவேண்டும். அதிகாரப் பரலாக்கல் கட்டமைப்பை பலப்படுத்தும் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும்.

வடக்கு மாகாண சபை அமைந்தாலும் அது பல சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும். புத்திசாதுரியமும், பொறுமையும் தீர்க்க தரிசனமும் தேவைப்படுகிறது. தமிழ் ஜனநாயக சத்திகளின் ஐக்கியமும், முஸ்லீம், மலையக மக்களுடன் ஐக்கியமும், தென்னிலங்கை ஜனநாயக இடதுசாரி சத்திகளுடனும் ஐக்கியமும் இவ்வாறான முறையிலேயே நாம் இயங்கவேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை வென்றெடுக்க இலங்கை ஜனநாயகமானதும் - பல்லினங்களின் நாடாக மாறுவதற்கும் இது அவசியம். இன்று அதற்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

நாம் தமிழ் மக்களுக்கும் இலங்கையின் அனைத்து சமூகங்களுக்கும் கண்ணியம் - சுயமரியாதையுடன் கூடிய வாழ்வை வென்றெடுக்கவேண்டும்.

**– சுகு சிறீதரன் –**

---

# அரைகுறை ஆடை ஏற்படுத்தியிருக்கும் பரபரப்பு

**– ஷர்மி –**

**ஆள்** பாதி ஆடை பாதி என்பார்கள். மனிதன் வாழ்வதற்கு உணவு உடை உறையுள் என்பன அத்தியாவசியமானவை. இவற்றில் ஏதாவதொன்றில் பற்றாக் குறை காணப்பட்டால் மனிதன் சங்கடத்தையும் அவஸ்தையையும் எதிர்கொள்ள வேண்டிவரும்.

இந்த உணவும் உடையும் உறையுளும் மனிதனைப் பாதுகாப்பதற்கும் சௌகரியமாக வாழ்வதற்கும் உதவிபுரிகின்றன.

ஆனால் சமகாலத்தில் இந்த உடை என்பது மனிதர்களை சங்கடத்திற்குள்ளாக்கும் ஒரு விடயமாகவும் மாறிவிட்டிருக்கின்றது.

அதாவது ஒரு சிலர் உடை என்று கருதிக்கொள்ளும் ஒன்று, இன்னும் சிலருக்கு உறுத்தலாகவும் இருப்பதாக அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

நமது நாட்டில் இடம்பெற்ற அரைகுறை ஆடை விவகாரம் ஆட்சிக் கலைப்பு வரையும் யோசிப்பதற்குப் போதுமானதாகி விட்டது.

வட மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆனந்த சரத்குமாரவின் மகள் பாடசாலைக்கு அணிந்து வந்திருந்த சீருடை பாடசாலை ஒழுக்க விழுமியங்களுக்கும் கண்ணியத்திற்கும் உகந்ததல்ல என்றுகூற விவகாரம் சூடுபிடித்து விட்டது.

தான் அணிந்துபோன அரைகுறை ஆடை ஒருத்தருக்கும் உறுத்தலாக இருக்காது என்பது அவளது நினைப்பு. 'தந்தை ஆளும் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் என்பதால் உடனடியாக பாடசாலை ஆசிரியைப் பற்றி மகள் குறைகூறவே தந்தை பாடசாலை ஒழுக்கம் ஒருபுறமிருக்கட்டும். மாகாண சபை உறுப்பினராகிய எனது மகளின் ஆடையை அரைகுறை எனக்கூறிய ஆசிரியையை நான் சும்மா விட மாட்டேன் என கர்ஜித்தவண்ணம் தனது செல்வப் புதல்வி கற்கும் நவகத்தேகம பாடசாலைக்கு ஓடோடிச் சென்று சம்பந்தப்பட்ட ஆசிரியையை அழைத்து தவறுக்காக மன்னிப்புக் கேட்டு முட்டுக்காலில் விழுந்து வணங்கச்சொல்லிவிட்டார்.

குண்டர்கள் சகிதம் வந்து மாகாண "சபை உறுப்பினர் கூப்பாடு போடும்போது ஆசிரியையாலும் சக ஆசிரியர்களாலும் அதிபராலும் என்னதான் செய்யமுடியும். முழந்தாழிடுமாறு இட்ட கட்டளையை ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டது.

பொதுவாகவே மாதா, பிதா, குரு, தெய்வம் என்று நமது கலாசாரத்தில் விழிப்பதுண்டு. அதாவது முதலில் வீட்டில்தான் பிள்ளையின் வாழ்க்கை ஆரம்பமாகின்றது. அங்கே கண்கண்ட தெய்வமாக இருப்பவர்கள் அன்னையும் தந்தையும்தான். எனவே அவர்களை முதலில் கனம் பண்ண வேண்டும்.

பின்னர் வீட்டுக்கு வெளியே ஒரு பிள்ளை வெளியுலகைச் சந்திக்கும் அடுத்த இடம் பாடசாலை அங்கே பெற்றோருக்கு அடுத்ததாக பிள்ளைகளை வழி நடாத்துபவர்கள் குருக்கள் அதாவது ஆசிரியர்கள்.

அவர்களையும் கனம் பண்ண வேண்டும். பின்னர் பிள்ளை வெளியுலகில் சஞ்சரிக்கத் துவங்கியவுடன் கண்காணாத பக்தியை தெய்வத்திற்குக் கொடுக்க வேண்டும் இதுதான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதன் தத்துவம்.

ஆனால் நவகத்தேகமவில் இந்த மாகாண சபை உறுப்பினர் தனது புத்திரிக்கு சொல்லிக் கொடுத்தது குருக்களை அதாவது கண்ணியம் மிக்க ஆசிரியர்களைக் கனம் பண்ணத்தேவையில்லை என்பதுதான். ஆசிரியரை மகளின் கண்முன்னே முட்டுக்காலில் நிறுத்தி தண்டனை கொடுப்பது என்றுதான் சொல்லிக் கொடுத்திருக்கின்றார்.




இந்த விவகாரம் பொலிஸ் முறைப்பாட்டுக்குச் சென்றவுடன் பொலிஸார் சம்பந்தப்பட்ட மாகாண சபை உறுப்பினரைக் கைது செய்தனர். விவகாரம் மேலும் சூடுபிடிக்கச் சூடுபிடிக்க ஆசிரியர் சங்கங்களும் கொதித்தெழுந்தன. பல தரப்பிலிருந்தும் வேறுபாடுகளுக்கப்பால் கண்டனங்கள் வர ஆரம்பித்தன.

சம்பந்தப்பட்ட மாகாண சபை உறுப்பினர் தமது கட்சியைச் சார்ந்தவர் என்பதால் ஜனாதிபதிக்கும் இந்த விவகாரம் தலையிடியை ஏற்படுத்தியது.

உடனடியாக சம்பந்தப்பட்ட உறுப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கையும் சட்ட நடவடிக்கையும் எடுக்குமாறு உத்தரவு பறந்தது. அத்தோடு வடமத்திய மாகாண சபையிலுள்ள ஆளுந்தரப்பு உறுப்பினர்களைச் ஜனாதிபதி சந்தித்தோடு அவர்களிடமிருந்து மாகாண சபையை எந்நேரமும் கலைப்பதற்கான கையொப்பத்தையும் பெற்றுக்கொண்டார்

அதுமட்டுமல்லாமல் சம்பந்தப்பட்ட மாகாண சபை உறுப்பினரான ஆனந்த சரத்குமாரவை அவர் வகிக்கும் மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியையை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஜனாதிபதி அவருக்கு ஆறுதல் கூறியதோடு மனத்தைரியத்தையும் ஊட்டினார்.

விவகாரம் நாடளாவிய அமைப்பு ரீதியில் சூடு பிடிப்பதற்கு வாய்ப்பளிக்காமல் எல்லாத் தரப்பினரும் கவனமாகக் கையாண்டார்கள்.

எனினும் அதிபர் ஆசிரியர் சங்கங்கள் தமது எதிர்ப்பை வீதிக்கு வந்து வெளிக்காட்டியிருந்தார்கள். கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த மாகாண சபை உறுப்பினர் இப்பொழுது பிணையில் வெளியே வந்துள்ளார். வந்ததும் முதல் வேலையாக நேர்த்திக் கடன் கழிப்பதற்கு கோயிலுக்குச் சென்று சிதறு தேங்காய் உடைத்துள்ளார். குருவை மதிக்காத குறை தெய்வத்திடம் போய் சரணடைய வைத்திருக்கிறது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதை மறுபடியும் மறுபடியும் நினைவூட்டவேண்டும்.

வழக்குத் தொடர்கிறது ஆக அரைகுறை ஆடை ஆட்சிக்கலைப்பு வரையும் சூடு பிடித்துள்ளது.






# குடும்பம் வலிமையடைய...

"குடும்பத்தின் ஆணிவேர் பெண் என்றாலும். ஆணும் மிகமிக முக்கியமே. குடும்பத்தின் சந்தோசமானது கணவன். மனைவியின் புரிந்துணர்விலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனோநிலையிலும் தான் தங்கியுள்ளது. இப்புரிந்துணர்வானது இருவரையும் விட்டுவிலகிப் போனால். நடைமுறையில் உள்ள நாளாந்த சந்தோசமானது இருவரையும் விட்டுவிலகிச் செல்லும். குடும்பத்தை நிர்வகிப்பதில் கணவனும். மனைவியும் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும். ஆண் என்பதால் அதிகாரம் என்றோ. பெண் என்பதால் அடிமைநிலை என்றோ கருதும் நிலை அடியோடு களையப்படவேண்டும். இரு கை தட்டினால்தன் ஓசை கிடைக்கும். ஆணும். பெண்ணும் குடும்பத்தின் தலைவனும் தலைவியும் என்பதை உணர்ந்து தலைமைத்துவம் என்பதை சரிவர ஆளுமை செய்யவேண்டும்."

**குடும்பம்** ஒரு கோயில் என்பார்கள். குடும்பம் கோயிலாக வேண்டும் எனில் இல்லரசி நந்தீபமாக ஒளிரவேண்டும். குடும்பத்தின் ஆணிவேர் பெண்ணே. ஒரு சமுதாயமானது சிறப்படைய வேண்டுமெனில், ஒவ்வொரு குடும்பத்துப் பெண்களும் சிறப்பாக வாழவேண்டும். பெண்களுக்கே உரித்தான பெறுமை. தியாகம், விட்டுக்கொடுப்பு, இரக்கம், தாய்மை என்பவற்றை சரிவர நடைமுறைப்படுத்தவேண்டும்.

"ஆணை அடக்கிப் பண்படுத்தவே ஆண்டவன் பெண் பிறவியைப் படைத்திருக்கிறான்" என வால்டேர் கூறுவதையும், "பெண் மடியில் இறையன்பு வளர்கிறது" என இக்பால் கூறுவதையும் பெண்கள் தமது குடும்ப வாழ்க்கையில் படிநிலைகளாக கொள்ளவேண்டும்.

குடும்பம் என்ற ஆத்மார்த்த உறவிலேயே உணர்வுகள் பரிமாறப்பட்டு, உறவுகள் பலப்படுத்தப்பட்டு புத்துயிர்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இங்கு கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் தாங்குபவர்களாக, உயிர்களைத் தோற்றுவிப்பவர்களாக உயிர் நிலைகளை அடைகின்றனர். ஒருயிரானது சமுதாயத்தின் உட்கருவான குடும்பத்தின் உறவுமூலம் உருவாக்கம் பெறுமானால், அவ்வுயிர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியதாக கொள்ளப்படுகிறது. விடுத்து, பாலியல் இன்பத்தினாலும், சந்தர்ப்ப சூழ்நிலையினாலும் சட்டவிரோதமாக உருவாக்கம் பெறும் உயிரானது ஒரு கேள்விக்குறியாகவும், அவ்வுயிர் உருவான தாய்மையை ஆதங்கப்படுத்தும் ஒருயிராகவும் விளங்குவதை இன்று சமுதாயத்தில் காணமுடிகிறது.

தனிமனிதன், குடும்பம், கிராமம், சமுதாயம், நாடு என்ற வளர்ச்சி நிலைகளில் ஒரு நாட்டின் வளர்ச்சியானது குடும்பத்தை இரண்டாம் இடத்தில் தக்க வைத்துள்ளது. நல்ல மனிதர்களை உருவாக்குவது குடும்பமே. "தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம், அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம். இரண்டும் இருந்தால் பேரை வாங்கலாம். பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்." என்ற கவியரசரின் பாடல்வரிகள் ஒரு மனிதனின் வளர்ச்சியில் குடும்பத்தின் கட்டாயத்தை எமக்கு இயம்பி நிற்கிறது.

இன்று குடும்பங்களானது பல நிலைகளிலும் தளர்நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. கருத்துச் சிதைவுகளும், கண்பார்க்கும் திசைகளில் மனம் செல்வதும், புரிந்துணர்வில்லாத குடும்பங்களில் பெரும்பாலானவை விவாகரத்து வழக்குகளே. விவாகரத்துக்கான காரணங்களைப் பார்ப்போமானால், குடும்ப உறவுக்கு புறப்பான பல காரணங்கள் குடும்பங்களில் ஆட்சி செய்வதால், நீதியைத் தேடி நீதிமன்றுக்கு செல்வதைக் காணமுடிகிறது. ஏன் இந்த நிலை? மனித வளர்ச்சியானது ஆன்மீகத்தாலும், அறிவியலாலும், பல படிநிலைகளை தாண்டியபோதும், குடும்ப உறவானது புனிதத்தன்மையை இழந்து விவாகரத்தினை நோக்கி நகர்வது வேதனையிலும் வேதனையே.

கன்னியாக குடும்பத்தில் பிரவேசித்த பெண் நல்ல மனைவியாக வாழ்ந்து தாய்மை என்ற புனிதத்துவத்திற்கு அடையாளமாகிறாள். "தாய்" என்ற ஒப்பந்த விருதினை குடும்ப் உறவே பெண்ணுக்கு அளிக்கிறது. அதேபோல், "தந்தை" ன்ற விருதினையும் குடும்ப உறவுமூலமே ஆண் பெற்றக் கொள்கிறான். குடும்பம் எனும் வட்டத்திற்குள் "தாய், தந்தை" என்ற நிலையடையும் ஆணுக்கும் பெண்ணுக்கும்தான் சமுதாயத்தில் மரியாதையும், கௌரவமும் கிடைக்கிறது. தப்பான நடத்தைகளினால் தாய், தந்தை என்ற நிலைகளை அடைபவர்கள் பழிச்சொல்லுக்கும் அவமானத்திற்கும் ஆளாகின்றனர்.

எனவே, குடும்பம் எனும் விளைநிலம் பண்படுத்தப்பட்டு பயிர்கள் வளர்ந்து அறுவடை செய்யப்பட கணவனும் மனைவியும் புரிந்துணர்வோடும், விசுவாசமுள்ள அன்போடு ஒருவரை ஒருவர் தாங்கி, ஒருவரில் ஒருவர் தங்கி வாழவேண்டும். சமுதாயத்தில் சிறந்த புத்திஜீவிகளை உருவாக்கவும், தாய், தந்தை என்ற உயர்நிலைகளை அடையவும் குடும்பங்கள் தமது அடிக்கட்டுமானத்தைத் தளர்வடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குடும்பத்தின் வளர்ச்சியின் சிறப்பும் ஆண், பெண்ணின் விசுவாசம் மிக்க உறவுநிலையிலேயே தங்கியுள்ளது.

**உடுவிலூர் கலா**



# மார்பகப் புற்றுநோயை தடுக்க...

ஜிம்முக்கு சென்று மாங்கு மாங்கென்று உடற்பயிற்சி செய்துவரும் நன்மைகளை வீட்டு வேலைகளின் மூலம் பெற்றுவிடலாம், அதுவும் எந்த ஒரு பக்கவிளைவும் இல்லாமல்.

'Physical Activity' வாரத்தில் ஐந்து முறை வீதம், 30 நிமிடங்களுக்கு சுறுசுறுப்பாக இருக்க முயற்சி செய்யவும். ஒரே முறையில் 10 நிமிடங்கள் நீங்கள் அதைச் செய்யலாம். உங்களுடைய தினசரி அட்டவணையில் உடற்பயிற்சியையும் சேர்த்துக்கொள்ளவும்.

வாரத்தின் பெரும்பான்மையான நாட்களில் சுறுசுறுப்பாக இருக்க முயற்சிக்கவும். ஆரோக்கியமான உடற்பயிற்சி என்பது, உங்களுடைய செல்லப்பிராணியுடன் விரைவாக நடை பயிலுதல், குப்பைகளை வாருதல், அல்லது வீட்டுவேலைகளைச் செய்தல் போன்ற எளிமையான பயிற்சிகளாகவும் இருக்கலாம்.

## சமையல் குறிப்பு

### மரவள்ளிக் கிழங்கு குழம்பு

**தேவையான பொருட்கள்**

மரவள்ளிக் கிழங்கு 1/4 கிரோகிராம்
கடுகு - 1/2 தேக்கரண்டி
பெருஞ்சீரகம் - 1/2 தே.கரண்டி
உழுத்தம்பருப்பு - 1/2 தேக்கரண்டி.
.காய்ந்த மிளகாய் - 3
வெங்காயம் - 50 கிராம், தக்காளி 100 கிராம்
மஞ்சள் தூள் - 1/2 தே.கரண்டி
மிளகுதூள் - 1 மேசைக் கரண்டி
மிளகாய்த்தூள் - 2 மேசைக் கரண்டி
கறிவேப்பிலை - 5 நெட்டு
தேங்காய்ப்பால் - 1 கறிக்கரண்டி
உப்பு அளவாக, தேசிக்காய் பாதி.

* கிழங்கை சுத்தப்படுத்தி முக்கால் பதமாக அவித்து ஓரளவான துண்டங்களாக வெட்டி வைக்கவும்.
* எண்ணெயில் கடுகு, உழுத்தம்பருப்பு, பெ.சீரகம், காய்ந்த மிளகாய் போட்டு வதக்கவும்.
* இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து கறிவேப்பிலை சேர்க்கவும்.
* மஞ்சள் தூள் சேர்த்து தக்காளி சேர்த்து நன்கு வதக்கவும். * அவித்த கிழங்கை சேர்த்து மிளகாய்த்தூள் போட்டு உப்பு சேர்க்கவும்.
* நன்கு பிரட்டி ஒரு கறிக்கரண்டி தே. பால் சேர்க்கவும்.
* பால் சுண்டிவரும்வரை மூடி மெல்லிய தீயில் விடவும். * திரண்டு வந்ததும் மிளகுதாள் சேர்த்து இறக்கி கறிவேப்பிலை போட்டு மூடவும்.

ஆறியபின் தேசிப்புளி விட்டு பிரட்டி பரிமாறவும்.

# அழகுசாதனங்களுக்கு அடிமையானவரா?



**பெண்கள்** என்றாலே அழகு என்பார்கள். அது இயற்கை. இன்றைய பரபரப்பான சூழலில் இயற்கையாக அழகு சாதனங்களை தயாரித்து பயன்படுத்த நேரமும் இல்லை, பொறுமையும் இல்லை. முகத்தை பளிச்சென்று வைக்கும் க்ரீம் என்று எந்த விளம்பரம் வந்தாலும் சிலர் தவறுதில்லை.

இப்போது சந்தைகளில் விற்பனையாகும் அழகுசாதனப் பொருட்களில் சருமத்தை வெண்மையாக்கும் க்ரீம் வகைகளே அதிகம். பாதரசம் சருமத்தில் உள்ள மெலனின் என்கிற நிறமியுடன் சேர்ந்து சருமத்தை மேலும் வெள்ளையாக்க உதவுகிறது. தோல் பளிச்சென ஆனாலும், நாளடைவில் இது சருமப் பாதிப்பை ஏற்படுத்தும்.

பாதரசம் கலந்த சோப்பு, க்ரீம், ஐ-லைனர், மஸ்காரா, க்ளென்சிங் போன்ற அழகு சாதனங்களால் சிறுநீரகம் பழுதடைவதோடு, ஒட்டுமொத்த உடலுமே பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்று தோல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

அழகு சாதனப் பொருட்களின் லேபிளில் பாதரச அயோடைட், பாதரச குளோரைட், பாதரச சல்பைட், பாதரச ஒக்சைட் போன்றவை சேர்மானப் பொருட்களாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கும். ஆனால், பல அழகு சாதனப் பொருட்களில், பாதரச துணைப் பொருட்கள் சேர்ப்பது பற்றிய எந்த விவரமும் லேபிளிலும் இருப்பது இல்லை என்ற அதிர்ச்சித் தகவலையும் வெளியிட்டுள்ளது.

பாதரசம் கலந்த சோப் மற்றும் க்ரீம் வகைகளைப் பயன்படுத்துவதால், சுற்றுச்சூழல் மாசுபடுவதோடு பிறக்கும் குழந்தைக்கு நரம்பு தொடர்பான பாதிப்பும் ஏற்படுகிறது என்கிறது இந்த ஆய்வு.



# பொடுகுத் தொல்லை நீங்க...

வெந்தயம் பொடுகை எளிதில் நீக்கிவிடும். அதற்கு வெந்தயத்தை இரவில் படுக்கும் முன் நீரில் ஊறவைத்து. மறுநாள் காலையில் அரைத்து பேஸ்ட் செய்து. பின் வெதுவெதுப்பான தேங்காய் எண்ணெயில் கலந்து. தலைக்கு தடவி. 2 மணிநேரம் ஊற வைத்து. பிறகு ஷம்புவை போட்டு குளிக்கவேண்டும்.

இதனால் வெந்தயத்தில் உள்ள கசப்புத்தன்மையால் பொடுகு நீங்கி. கூந்தல் உதிர்தல் நின்று விடும். பின் கூந்தலும் வலுவடையும்.

## வாசகர்களின் கவனத்திற்கு...

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக இந்த வாரம் தொடக்கம் (முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375) இப்போட்டியில் வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

**250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-377**

**கேள்வி:** பாதரசம் கலந்த அழகு சாதனப் பொருட்கள் எவை?

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 30.07.2013**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 377
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 375 இற்கான விடை :- சரும பராமரிப்பு, குழந்தைகள் பராமரிப்பு, கூந்தல் பராமரிப்பு மற்றும் ஆடை அணிகலன்கள், உணவு.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- த.யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

377

பெயர் : ....................
முகவரி : ....................
....................
தே.அ. அட்டை இல : ....................
விடை : ....................
....................
கையொப்பம் : ....................

எந்தெந்த இடங்களில் மக்கள் அதிக அளவு கண்காணிக்கப்படுகிறார்கள் என்பதைக் காட்டும் வரைபடங்கள் என்னிடம் இருக்கின்றன. ரஷ்யாவிலிருந்து சேகரிப்பதை விட அதிகமாக அமெரிக்காவிலிருந்து தகவல் பரிமாற்றங்களை ஒட்டுக்கேட்கிறோம்.

**கேள்வி:** சீனாவினால் நடத்தப்படும் கணினி தாக்குதல்கள் குறித்து ஒபாமா நிர்வாகம் தெரிவிக்கும் கண்டனங்கள் பற்றி?

**பதில்:** நாம் எல்லோரையும் எல்லா இடத்திலும் தாக்குகிறோம். கூடவே நமக்கும் மற்றவர்களுக்கும் இடையே வேறுபாடு காட்ட முயற்சிக்கிறோம். ஆனால் நாம் போரிட்டுக் கொண்டிருக்காத நாடுகளில்கூட கிட்டத்தட்ட உலகின் எல்லா நாடுகளிலும் மூக்கை நுழைக்கிறோம்.

**கேள்வி:** அரசின் வேவு பார்த்தலிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான நடைமுறை களை ஒருவர் அமுல்படுத்திக் கொள்வது சாத்தியமா?

**பதில்:** "எதெல்லாம் சாத்தியம் என்பதைப் பற்றி உங்களுக்கு தெரியாது. அவர்கள் செய்ய முடிபவற்றின் வீச்சு திகி லூட்டக் கூடியது. உங்கள் கணினிகளில் வேவு மென்பொருளை புகுத்தமுடியும். நீங்கள் இணையத்தில் இணைந்ததும் உங்கள் கணினியை அடையாளம் கண்டுகொள்ள முடியும். எத்தகைய நடவடிக்கைகளை நீங்கள் செயற்படுத்தினாலும் நீங்கள் பாதுகாப்பாக இருக்கவேமுடியாது.

**கேள்வி:** நீங்கள் இதை திட்டமிட்டது உங்கள் குடும்பத்துக்கு தெரியுமா?

**பதில்:** "இல்லை. என்ன நடக்கிறது என்று என் குடும்பத்துக்கு தெரியாது. என்னுடைய அடிப்படை பயமே அவர்கள் என் குடும்பத்தையும் நண்பர்களையும், என் துணைவியையும் குறிவைப்பார்கள் என்பதுதான். நான் தொடர்புவைத்திருக்கும் யாரையும்" எஞ்சியிருக்கும் என் வாழ்க்கை முழுவதும் நான் இதனுடன்தான் வாழ்ந்தாக வேண்டும். அவர்களுடன் நான் தொடர்பு கொள்ளமுடியாது. என்னைத் தெரிந்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு எதிராக அதிகார வர்க்கத்தினர் கடுமையாக நடந்து கொள்ளப்போகிறார்கள். அது என் தூக்கத்தை கெடுக்கிறது.

**கேள்வி:** ஆவணங்களை வெளியிட வேண்டும் என்று எப்போது முடிவு செய்தீர்கள்?

**பதில்:** உங்களை தொந்தரவு செய்யும் விஷயங்களை நீங்கள் தினமும் பார்க்கிறீர்கள். எல்லாவற்றையும் பார்க்கும் போது அவற்றுள் சில முறைகேடானவை என்று உணர்கிறீர்கள். நடப்பது தவறானது என்ற உணர்வு படிப்படியாக வளர்கிறது. திடீரென்று ஒரு நாள் காலையில் எழுந்து நான் இதை முடிவு செய்யவில்லை. அது இயல்பாகவே நடந்தது.

2008இல் பலர் ஒபாமாவுக்கு வாக்களித்தார்கள். நான் அவருக்கு வாக்களிக்கவில்லை. மூன்றாவது வேட்பாளருக்கு வாக்களித்தேன். ஆனால், நான் ஒபாமாவின் வாக்குறுதிகளை நம்பினேன். அப்போது நான் உண்மைகளை வெளியிட நினைத்திருந்தேன். ஆனால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் காத்திருந்தேன். அவர் தொடர்ந்து அதே கொள்கைகளை பின்பற்றினார்.

**கேள்வி:** ஒபாமா இந்த அம்பலப்படுத்தலை கண்டித்துவிட்டு பாதுகாப்புக்கும் வெளிப்படைத் தன்மைக்கும் இடையேயான சமநிலை பற்றிய விவாதத்தை வரவேற்பதாக சொன்னதற்கு உங்கள் எதிர்வினை என்ன?

**பதில்:** என் உடனடி எதிர்வினை, அவரால் தனது செயல்களை நியாயப்படுத்த முடியவில்லை என்பதுதான். நியாயப்படுத்த முடியாததை அவர் நியாயப்படுத்த முயல்கிறார் அவருக்கும் அது தெரிகிறது.

**கேள்வி:** இந்த அம்பலப்படுத்தல்கள் பற்றிய மக்களின் எதிர்வினை பற்றி?

**பதில்:** பாதுகாப்பு என்ற பெயரில் பறிக்கப்படும் தமது உரிமைகளுக்காக பொதுமக்கள் இவ்வளவு தீவிரமாக எதிர்வினை புரிந்தது எனக்கு ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் தருக-றது. வால்ஸ்ட்ரீட் ஆக்கிரமிப்பு போல இல்லாவிட்டாலும் ஜூலை 4ஆம் திகதி நான்காவது திருத்தத்துக்கு ஆதரவாக தெருக்களில் இறங்கி போராடும் "நான்காவது திருத்தத்தை மீட்போம்" என்ற இயக்கம் ரெட்டிட் மூலமாக வளர்ந்திருக்கிறது. இணையத்தின் வழியான எதிர்வினை மிகப்பெரிதாகவும், ஆதரவு தெரிவிப்பதாகவும் இருக்கிறது.

**கேள்வி:** வாஷிங்டனைச் சேர்ந்த வெளியுறவுத் துறை நிபுணர் ஸ்டீவ் கிளெமன்ஸ் தலைநகரில் டல்லஸ் விமான நிலையத்தில் நான்கு பேர் அவர்கள் அப்போது கலந்துகொண்ட உளவுத் துறை கருத்தரங்கு குறித்து பேசிக் கொண்டிருந்ததை ஒட்டுக்கேட்டிருக்கிறார். இந்த அம்பலப்படுத்தல்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களில் ஒருவர் இதில் சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர் அம்பலப்படுத்துபவர் இரண்டு பேரையுமே மறைந்துபோகச் செய்யவேண்டும் என்று சொன்னதாக கிளெமன்ஸ் சொல்கிறார். நீங்கள் அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** "அந்தச் செய்தியைப் பற்றி கருத்து சொன்ன ஒருவர் உண்மையான உளவாளிகள் அப்படி எல்லாம் பேச மாட்டார்கள் என்றார். நான் ஒரு உளவாளி நான் சொல்கிறேன், இப்படித்தான் அவர்கள் பேசுவார்கள். குற்றங்களை எப்படி கையாள்வது என்று அலுவலகத்தில் விவாதிக்கும் போதெல்லாம் அவர்கள் சட்டப்படியான நடைமுறைகளை ஆதரிப்பது இல்லை. அவர்கள் முடிவான ஒரு நடவடிக்கையை ஆதரிப்பார்கள். ஒருவரை விமானத்தி லிருந்து தள்ளிவிடுவது அத்தகைய நபர்களுக்கு நீதிமன்றத்தில் வாய்ப்பு கொடுப்பதைவிட சிறந்தது என்பார்கள். அது ஒரு சர்வாதிகார மனநிலை.

**கேள்வி:** நீங்கள் என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?

**பதில்:** "நான் செய்ய முடிவது இங்கே உட்கார்ந்துகொண்டு ஹொங்காங் அரசு என்னை நாடு கடத்தாது என்று எதிர்பார்ப்பதுதான். மனித உரிமைகளை மதிக்கும் ஒரு நாட்டில் புகலிடம் கோருவதுதான் எனது விருப்பம். இதை பெருமளவு கடைப்பிடிக்கும் நாடு ஐஸ்லாந்து. இணைய சுதந்திரம் பற்றிய விவகாரத்தில் அவர்கள் மக்களுக்காக நின்றார்கள். என் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று எனக்கு எந்த திட்டமும் இல்லை."

"அவர்கள் ஒரு இன்டர்போல் அறிவிப்பை வெளியிடலாம். ஆனால் அமெரிக்க சட்டங்களுக்கு வெளியில் நான் எந்த குற்றமும் செய்யவில்லை என்று நினைக்கிறேன். இது முழுக்க முழுக்க அரசியல் தொடர்பானது என்பது தெளி-வாகும் என்று நினைக்கிறேன்."

**கேள்வி:** நீங்கள் ஒருவேளை சிறை யில் அடைக்கப்படுவீர்கள் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** "சிறைக்குப் போகும் சாத்தியத்தை கருத்தில் கொள்ளாமல் நான் இதை செய்திருக்க முடியாது. உலகின் மிக சக்திவாய்ந்த உளவுத் துறைக்கு எதிராக நிற்க முடிவு செய்த பிறகு இந்த அபாயத்தை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். என்னை தீர்த்துக் கட்டவேண்டும் என்று அவர்கள் நினைத்தால் என்றாவது ஒரு நாள் அதை செய்துவிடுவார்கள்."

**கேள்வி:** முதல் வெளியீட்டுக்கு கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்குப் பிறகு நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?

**பதில்:** "இது தொடர்பான ஆவே சமான கோப உணர்வுகள் நியாயமா-னவை என்று நினைக்கிறேன். எனக்கு என்ன நடந்தாலும் சரி அமெரிக்காவுக்கு நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையை அவை எனக்கு தந்திருக்கின்றன. என் வீட்டை நான் மறுபடியும் பார்க்க முடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அதைத்தான் நான் விரும்புகிறேன்."

ஹொங்காங்கில் ஸ்னோடன் வெளியிட்ட அடுத்த அதிரடி இரகசியம்! சிக்கியது பிரிட்டிஷ் உளவுத்துறையும்!!

அமெரிக்க உளவுத்துறை NSA பற்றிய இரகசியங்களை ஹொங்காங்கில் வைத்து வெளியிட்ட எட்வர்ட் ஸ்னோடன் வேறு பல அதிர வைக்கும் இரகசியங்களையும் தெரியப்படுத்தி யுள்ளார். அவை ஒவ்வொன்றாக உரிய நேரத்தில் வெளியிடப்படும் என்று தெரிவித்திருந்தது கார்டியன் பத்திரிகை.

இதோ மற்றொரு அதிர வைக்கும் இரகசியம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் NSA உளவுத்துறைக்கு சமமான அதே டைப்பான பிரிட்டிஷ் உளவுப் பிரிவின் பெயர் GCu;Q (Government Communications u;eadquarters). இந்த துறைதான் பிரிட்டனில் தொலைத்தொடர்பு சிக்னல்களை உளவு பார்க்கும் ஆட்கள். இவ்வகை உளவு பார்த்தலை சிக்இன்ட் (SIGINT) என்று உளவு வட்டாரங்களில் குறிப்பிடுவார்கள். Signals Intelligence என்பதன் சுருக்கமே அது.

எட்வர்ட் ஸ்னோடன் வெளியிட்ட அடுத்த அதிர வைக்கும் இரகசியம் இந்த பிரிட்டிஷ் உளவுத்துறை 2009-இல் லண்டனில் நடைபெற்ற G20 மாநாட்டின்போது. வெளிநாட்டு பிரதிநிதி-களை (அநேகமாக அந்தந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள்) உளவுபார்த்த விவகாரம்.

வெளிநாட்டு பிரதிநிதிகளின் கம்பியூட்டர்கள் இரகசியமாக உளவு பார்க்கப்பட்டன. அவர்களது போன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டன. இவை எல்லாவற்றையும்விட சுவாரசியமாக. வெளிநாட்டு பிரதிநிதிகள் நடமாடக்கூடிய இடங்களில் எல்லாம் போலி இன்ரநெட் மையங்களை (internet cafes) பிரிட்டிஷ் உளவுத்துறையே செட்டப் செய்திருந்தது.

பிரிட்டிஷ் உளவுத்துறைக்கு இந்த விவகாரத்தில் அமெரிக்க உளவுத்துறை NSA சில விதங்களில் உதவியது. அதனால் இந்த ஒப்பரேஷன் பற்றிய விபரங்கள் அமெரிக்க உளவுத்துறையின் கம்ப்யூட்டரிலும் இருக்க அதை அடித்துக்கொண்டு ஹொங்காங் வந்துவிட்டார் எட்வர்ட்.

சரி. இரகசியங்கள் உரிய நேரத்தில் வெளியிடப்படும் என கார்டியன் பத்திரிகை சொன்னதன் அர்த்தம் என்ன? அர்த்தம் ஒன்று உள்ளது!

39 ஆவது G8 மாநாடு யூனில் அயர்லாந்தில் தொடங்கியது. 2009 இல் லண்டனில் நடைபெற்ற G20 மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டு வெளியுறவு அமைச்சர்கள் அநேகமாக இதிலும் கலந்துகொண்டார்கள். அத்துடன் G20 குருப்பில் உள்ள நாடுகளில் சில G8 குருப்பில் உறுப்பினராக இல்லாத போதிலும் பார்வையாளர் அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணம் தென்னாபிரிக்கா.

அப்போது அயர்லாந்தில் உள்ள இந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தாம் உளவுபார்க்கப்பட்ட விஷயத்தை அறிந்து அதிர்ந்து போயிருந்தார்கள்.

இதுதான் இரகசியங்கள் வெளியிடப்பட்ட உரிய நேரம்!

சரி எட்வார்ட் வைத்துள்ள ஆவணங்களில் என்ன விபரங்கள் உள்ளன?

2009ஆம் ஆண்டு முதலில் ஏப்ரல் மாதத்திலும் பின் செப்டெம்பரிலும் லண்டனில் நடைபெற்ற G20 மாநாடு களில் உளவு பார்க்கப்பட்டுள்ளது. (அதன் அர்த்தம் ஜூன் மாநாட்டில் கலந்துகொள்ள அயர்லாந்து வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதி-களையும் உளவுபார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்திருக்கலாம். அவசர கதியில் அவற்றை மறைக்கவேண்டும்!)

பிரிட்டனின் நீண்ட நாள் கூட்டாளி களான நாடுகளின் பிரதிநிதிகளையும் உளவு பார்த்திருக்கிறது பிரிட்டிஷ் உளவுத்துறை.


இப்படியான மாநாடுகளில் கலந்துகொள்ள வரும் சில நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் உஷார் பேர்வழிகள். தாம் தங்கியிருக்கும் ஹோட்டலில் உள்ள கம்பியூட்டர்கள், அல்லது தமது சொந்த கம்பியூட்டர்கள் உளவு பார்க்கப்படலாம் என்ற சந்தேகத்தில் அவர்கள் வெளியே போய் இன்ரநெட் மையங்களில் கம்பியூட்டர்களை பயன்படுத்துவார்கள். இது உளவுத்துறைக்கும் தெரியும். எனவே G20 மாநாடு நடைபெற்ற இடத்துக்கு வெளியேயும் அநேக வெளிநாட்டு பிரதிநிதிகள் தங்கியிருந்த ஹோட்டல்கள் உள்ள பகுதிகளிலும், உளவுத்துறையே இன்டர்நெட் மையங்களை போலியாக திறந்து 'பெரிய போர்ட்டும் மாட்டி வைத்தது. அங்குள்ள அனைத்து கம்பியூட்டர்களிலும் இமெயில் இடைமறிக்கும் சொ.ப்ட்வேயர் மற்றும் key-logging software போடப்பட்டிருந்தன.

அம்பலப்பட்டு அம்மணமாகும் நிலை யிலேயே உலகமனிதர்கள் அனைவரும் உள்ளோம். (WORLD WIDE WEB) எனப்படும் உலகவலைப் பின்னல் தனிமனித இரகசியங்களையும் நாடு களின் இறைமையையும் பாதுகாப்பையும் காட்டிக்கொடுத்தபடியிருக்கிறது.

✷







# நடந்தது அதிர்ச்சி

ஆஷஸ் தொடர் முதலாவது டெஸ்ட் போட்டியில் எதிர்பார்க்கப்பட்ட இங்கிலாந்து வெறும் 215 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது ஒரு அதிர்ச்சி. இதற்குப் பதிலாக சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்தி அவுஸ்திரேலிய அதிகபட்ச எண்ணிக்கையை அடைவார்கள் என்று எதிர்பார்த்தால் மேலும் அதிர்ச்சி. மிகமோசமான நிலையில் அதாவது 9 விக்கெட்டு இழப்பிற்கு 117 ஓட்டங்கள் என்ற பாதகமான நிலையில் அவுஸ்திரேலிய அணியின் புதுமுகம், சுழற்பந்து வீச்சாளர் அஷ்டன் அகார் இறுதி நபராகக் களம் இறங்குகின்றார். அப்பொழுது ஒரு கிரிக்கெட் சாதனை நிகழப்போகின்றது என்று யாரும் நினைத்திருக்கமாட்டார். மேற்கு அவுஸ்திரேலிய அணியில் பத்து முதல்தர போட்டிகளில் மட்டும் ஆடிய அகார் அதிரடியாக நூற்றி ஒரு பந்துகளில் 98 ஓட்டங்கள் குவித்தார். இதில் 12 நான்குகளும் 2 ஆறுகளும் அடக்கம். மேலும் பதினோராவது இலக்க துடுப்பாட்ட வீரர் எந்தவொரு டெஸ்ட் போட்டியிலும் அடித்த அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை என்ற சாதனை படைக்கப்பட்டது. அதோடு கடந்த வருடம் இங்கிலாந்துக்கு எதிராக மே.இந்தியத் தீவுகள் அணியின் டினோ பெஸ்ட் அடித்த 95 ஓட்டங்கள் என்ற சாதனை முறியடிக்கப்பட்டது. மேலும் அவுஸ்ரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கை, இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கையில் அறுபத்தைந்தையும் அதிகரித்து இரு நூற்று எண்பதில் முடிவடைந்தது.

இந்த பத்தொன்பதே வயதான அகார் உதைபந்தாட்டத்திலும் ஆர்வம் உள்ளவர். ஆனாலும் டெஸ்ட் கிரிக்கெட் எனது கனவாக இருந்தது. இப்பொழுது நிரம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது என்பவர், சதம்பெற இரண்டு ஓட்டங்கள் குறைந்து போனதில் பெரிதும் கவலைப்பட்டவராகத் தெரியவில்லை.

(ஆனால் ரசிகர்களுக்கு மனவருத்தம்.)

முன்னதாக சுவானின் பந்துவீச்சில் நிச்சயமான ஸ்ரம்ப் ஆட்டமிழப்புக் கேட்கப்பட்டு நடுவர்கள் மறுத்திருந்த நிலையிலும், இவர் 98 எடுத்து இறுதி இலக்காக வெளியேறியபோது பிடியெடுத்த சுவானே ஓடிச்சென்று "இளைஞனே அருமையாக ஆடினாய்" என்று பாராட்டியது வெகுசந்தோசமாக இருந்தது என்கிறார். இவரது பெற்றோர் மகனின் விளையாட்டைப் பார்க்க தூர அவுஸ்திரேலியாவில் இருந்து இங்கிலாந்து வந்திருந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த சந்தோஷத்துக்கு மேலாகவே பெற்றுவிட்டார்கள்.

இன்னொருபுறம் பில்ஹியூஸ் ஒருபுறத்தில் சுவராக நின்று ஆட்டம் இழக்காமல் பெற்ற 81 ஓட்டங்கள் பற்றிக் குறிப்பிடாவிட்டால் இந்தப் பத்தி பூரணமானதாக இருக்கமுடியாது.

**அஷ்டன்** அகார் விக்டோரியாவில் 1993, ஒக்ரோபர் 14ஆம் திகதி பிறந்தவர். இவரது தந்தை பெயர் ஜோன். விக்ரோரியாவிற்காக கிரிக்கெட் ஆடியவர். தாயாரின் பெயர் சோனியா. இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருக்கு இரண்டு தம்பிகள் இருக்கின்றனர்.

மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் சட்டம் மற்றும் கலைத் துறையில் பயின்றுவருகின்றார். இவருக்குப் பிடித்த கிரிக்கெட் வீரர்கள் ஷேன்வோர்ண் மற்றும் ரங்கண ஹேரத் இவர் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே சென்றுள்ளது இதுவே முதல் தடவை. அதோடு அவுஸ்திரேலியாவின் கிரிக்கெட்டில் உள்ள மெல்பர்ண் நகரில் இருந்து மேற்கு அவுஸ்திரேலியாவில் சென்று குடியேறியது இவரது குடும்பம்.

## எங்க வீட்டுப்பிள்ளை






2013 விம்பிள்டன் ரெனிஸ் ஒற்றையர் ஆடவர் வெற்றிவீரன் அன்ரி முரே. விம்பிள்டன் ஆடவர் சாதனையொன்றைப் புரிய பிரித்தானிய வீரருக்கு 77 வருடங்கள் தேவைப்பட்டிருக்கிறது. முன்னதாக 1936 இல் பிரெட் பெரி ஒற்றையர் ஆடவர் கிண்ணம் வென்றபின் இந்தப் பெருமையை யாராலும் அடைய முடியவில்லை. மகளிர் ஒற்றையர் கிண்ணத்தைப் பொறுத்தவரை 1977 இல் வேர்ஜினியா வேட் கிண்ணம் வென்றியிருந்தார். ஆனால் 1990களின் இறு தியில் ரின் ஹென்மென் பிரித்தானியாவிற்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்தார். சில தடவைகள் அரை இறுதிக்குப் போட்டிவரை முன்னேறிய இவரால் அதற்கப்பால் செல்ல முடியவில்லை. அதன்பின் அன்டியின் காலம். மூன்று முறை அரை இறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றார். அடுத்து 2012 இல் விம்பிள்டன் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். ஆனால் ஏழு முறை கிண்ணம் வென்ற றொஜர் பெடரின் முன்னால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

ஆனால் அன்டி வஞ்சம் தீர்க்கத் தவறவில்லை. ஒலிம்பிக் தங்கத்தை இவரை வீழ்த்தியே பெற்றுக்கொண்டார். அதுவும் தனது தாயக மண்ணில் தொடர்ந்துவந்த யூ.எஸ். ஒப்பன் ரென்னிஸ் போட்டிகளில் இறுதிப் போட்டியில் நொவாக் ஜோகோவிச்சைத் தோற்கடித்து சம்பியன் கிண்ணம் வென்றார். அதே ஜோகோவிச்சை விம்பிள்டனில் தோற்கடித்து 77 வருட பிரித்தானியக் கனவை நனவாக்கியுள்ளார். இவரது வெற்றியை அநேகமான பிரித்தானியப் பத்திரிகைகள் முன்பக்கச் செய்தியாகப் படத்துடன் போட்டு மகிழ்ந்துள்ளன. பிரித்தானியாவில் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பைப் பார்த்தவர்கள் அண்ணவளாக இரண்டு கோடிப்பேர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.



# காத்திருப்பு முடிந்தது



# சாம்பல் பூக்கள்



1882இல் ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவிடம் முதன்முதலாக டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்தது. இதனைச் சகிக்கமுடியாத THE SPORTING TIMES பின்வருமாறு மரண அறிவித்தல் ஒன்றைப் பிரசுரித்தது. இங்கிலிஷ் கிரிக்கெட்டின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டு, சாம்பல் அவுஸ்திரேலியாவிற்கு எடுத்துச் செல்லப்படும். ASHES (சாம்பல்) தொடர் என்ற சொற்பதம் இதில் இருந்துதான் ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

1882 - 1883 இங்கிலாந்து, அவுஸ்திரேலிய தொடரில் 2 - 1 என்று இங்கிலாந்து அவுஸ்திரேலிய மண்ணில் அவுஸ்திரேலியாவைத் தோற்கடிக்க, இதனால் ஆத்திரமுற்ற பெண்கள் சிலர் அந்த ஆட்டத்தில் பெய்ல்ஸ்களை எரித்து சாம்பலை இங்கிலாந்து அணித்தலைவரிடம் கொடுத்ததாகவும் ஒரு வரலாறு உண்டு.

1911 -12 அவுஸ்திரேலியாவில் 4 - 1 என்று இங்கிலாந்து தொடரை வெல்கிறது. இங்கிலாந்தின் ஜக் ஹொப்ஸ் அபாரமாக ஆடி 82:75 என்ற சராசரியில் 662 ஓட்டங்கள் குவிக்கிறார்.

1920 - 21 முதன்முதலாக 5 - 0 என்று இங்கிலாந்தை அவுஸ்திரேலியா வெல்கிறது. (WHITE WASH)

1930 இன்றுவரை எந்த டெஸ்ட் தொடரிலும் முறியடிக்கப்படாத 974 என்ற ஓட்ட எண்ணிக்கையை அவுஸ்திரேலியாவின் டொன் பிரட்மன் சாதிக்கிறார். இதில் அதிகூடுதலாக 334 ஓட்டங்களும் 4 சதங்களும் அடங்கும்.

1932 - 33 BODY LINE SERIES என்று இந்தத் தொடர் அழைக்கப்படுகிறது. இங்கிலாந்தின் தலைவர் டக்ளஸ் ஜார்டின் வேகப்பந்து வீச்சாளர்களான ஹரொல் லாவூட் மற்றும் பில்வோஸ் இருவரையும் துடுப்பாட்டக்காரரின் உடலை இலக்குவைத்து பந்துவீசச் சொல்கிறார். இந்த உத்தி டொன் பிரட்மனைக் கட்டிப்போடுவதே இங்கிலாந்து 4 - 1 என்று தொடரை வென்றதும் இன்றுவரை சர்ச்சைக்குரிய தொடராகவே இது கருதப்படுகிறது.

1948 டொன் பிரட்மன் தனது கிரிக்கெட் வாழ்வின் இறுதி இனிங்சில் ஆடுகிறார். இன்னும் நான்கு ஓட்டங்கள் எடுத்தால் இவரது துடுப்பாட்டச் சராசரி 100 ஆக இருந்திருக்கும். ஆனால் இங்கிலாந்தின் சுழல் பந்துவீச்சாளர் எரிக்ஹொலிஸ் பந்துவீச்சில் இவர் டக் அவுட்டாகிறார். அதனால் இவரின் சராசரி 99.94 என்று நின்றுவிட்டது. ஆனால் இன்றுவரை இந்தச் சாதனை முறியடிக்கப்படவில்லை.

1956 ஓல்ட் டிரபோட் டெஸ்ட் இங்கிலாந்து வெற்றிபெறுகிறது. இந்த டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்தின் சுழல் பந்துவீச்சாளர் மொத்தம் இருபது விக்கெட்டுகளில் 19ஐக் சாய்க்கிறார். அதாவது 90 ரண்களுக்கு 19 விக்கெட் இது இன்றுவரை சாதனையாகும்.

1972 இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் தனது கன்னி டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வேகப்பந்து வீச்சாளர் பொப் மெஸி 16 விக்கெட்டு களை 137 ஓட்டங்கள் கொடுத்துச் சரிக்கிறார்.

1974 - 75 மேற்கிந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு இணையில்லை என்றிருந்த காலம். அவுஸ்திரேலியாவின் டெனிஸ் லிலி மற்றும் ஜெப்தொம்ஸன் இருவரும் வேகப் பந்துவீச்சில் கலங்க வைக்கிறார்கள். 4 - 1 என்று இங்கிலாந்தை கவிழ்க்க உதவுகிறார்கள்.

இன்றைக்கு எதற்கெடுத்தாலும் ரெடிமேட் உணவுகளையோ, மசாலாக் களையோ உபயோகிக்கின்றோம் செயற்கை உணவுகளும் ரசாயன உரங்களும் உடம்பில் நச்சுத்தன்மையை ஏற்படுத்திவிடுகின்றன. உயர் ரத்த அழுத்தம் தொடங்கி உயிர்க் கொல்லியான புற்றுநோய் வரை மனிதர் களை தாக்குவதோடு மலடாகவும் மாற்றி விடுகிறது. மலட்டுத்தன்மையை தடுக்க உணவுகளை எவ்வாறு உண்ணவேண்டும், எவற்றை தவிர்க்கவேண்டும் என்று நிபுணர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

இன்றைக்கு கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால் சமைத்து பிரிட்ஜில் வைத்துசாப்பிடுவதை இளைய தலைமுறையினர் வழக்கமாகக் கொண்டிருக் கின்றனர். இது தவறான நடைமுறையாகும் அன்றாடம் புதிதாக சமைத்த உணவுகளை உண்ணவேண்டும் அதுதான் ஆரோக்கியம்.

### செயற்கை மசாலாக்கள்

பண்டைய காலங்களில் செயற்கை நிறம், மணம் சேர்க்கப்பட்ட உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் பாஸ்ட் புட் போன்றவை இல்லை. ஆனால் இன்றைக்கு மஞ்சள்தூள் தொடங்கி மிளாகாய்த்தூள், சாம்பார் பவுடர் என கலர் கலராய் ரெடிமேட் மசாலா உணவுப் பொருட்கள் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதில் செயற்கை மணத்திற்காக உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்கள் சேர்க்கப்படு கின்றன. இந்த செயற்கைப் பொருட்கள் தான் மலட்டுத்தன்மைக்கு காரணமாகிறது என்கின்றனர் நிபுணர்கள்.

இந்த செயற்கை மசாலாத் தூளில் எடையை அதிகரிப்பதற்காக அதில் சீனி வள்ளிக்கிழங்கு சேர்க்கப்படுவதாக சோதனையில் கண்டறியப்பட்டது. இந்த கிழங்குமா கெட்டுவிடும் என்பதால் அதற்காக பிரசர்வேடிவ் சேர்க்கின்றனர் என்றும் தெரியவந்துள்ளது.

### சினைப்பை நீர்க்கட்டி

சினைப்பை நீர்க்கட்டியை கரைக்கச் செய்யும் மிகப்பெரிய மருந்து மிளகு ரசம். மிளகு, சீரகம், பூண்டு, பச்சைமிளகாய், கொத்தமல்லித்தழை சேர்த்து ரசம் வைத்து சாப்பிடுவதாகும் என்கின்றனர் மருத்துவர்கள். இதேபோல் கொள்ளுரசம் சாப்பிட்டால் உடல் பருமன் குறையும், பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சினை இருந்தால் சீராகும் என்கின்றனர் நிபுணர்கள்.

### விந்து உற்பத்தி அதிகரிக்க...


சின்ன வெங்காயம் சாம்பார் அடிக்கடி சேர்த்துக்கொண்டால் விந்து உற்பத்தி அதி கரிக்கும். பெண்களுக்கு வெள்ளைபடுதல் நோய் குணமாகும். நல்லெண்ணெயில் சின்ன வெங்காயத்தை வதக்கி சாப்பிட்டாலும் ஆண்களுக்கு விந்து உற்பத்தி அதிகமாகும். அதேபோன்று திராட்சை, உலர்திராட்சைப் பழங்கள், சோயா, வால்நட், முருங்கைப் பூ போன்றவை பெண்களின் மாதவிடாய் பிரச்சினையை தீர்க்கும். மலட்டுத்தன்மையை குணமாக்கும் என்கின்றனர் நிபுணர்கள்.

### மண்பானை சமையல்

பண்டைய காலங்களில் வீடுகளில் மண்பாண்டங்களில் சமைத்தனர். அதனால்தான் எளிதாக ஐந்து, ஆறு குழந்தைகளைக் கூட பெற்று ஆரோக்கியமாக வாழ முடிந்தது. ஆனால் இன்றைக்கு சமைக்கும் பாத்திரங்களும் முறைகளும் கூட மாறிவிட்டன. இதனால்தான் விந்தணு உற்பத்தியில் சிக்கல் ஏற்படுகிறது. மண்பானையில் சமைத்தால் விந்து நீர்த்துப் போவதை தடுக்கும்.

விந்துவை கெட்டிப் படுத்துவதோடு உற் பத்தியை அதிகமாககும்.

மண்பாண்ட சமையல் பெணகளுக்கு வெள்ளைப்படுதல் நோயை குணமாக்கும். சரியான உணவை தேர்ந்தெடுத்து சரியான முறையில் சமைத்து சாப்பிட்டால் உடல்குறை நீங்குவதோடு குழந்தைப் பேறு ஏற்படும் என்கின்றனர் நிபுணர்கள்.



# மலட்டு தன்மையை தவிர்க்கும் மட்பாண்டங்கள்

# பெண்களின் ஆயுள் குறைய இதுவும் காரணமாகலாம்....!



அதிக ஆண் குழந்தைகளை பெறும் தாய்மார்களின் ஆயுள் குறையக்கூடும் என்று ஒரு புதிய ஆய்வில் தெரியவந் துள்ளது.

அதிக ஆண் குழந்தைகளை பெறுவதால் தாய்மார்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வில் அதிக ஆண் குழந்தைகள் பெறுவதால் பெண்களுக்கு மன அழுத்தம் அதிகமாவது கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் தாய்மார்கள் விரைவில் வயதானவர்கள் ஆகின்றனராம்.

ஆண் குழந்தைகள் தாய்மார்களின் உடலில் உள்ள டெஸ்டோஸ்டீரான் அளவை அதிகரிக்கிறதாம். அதனால் தாய்மார்களின் எதிர்ப்பு சக்தி குறைந்து அவர்களின் உடல் வீக்காகிவிடுகிறதாம். இதனால் அதிக ஆண் குழந்தைகளை பெறும் தாய்மார்களின் ஆயுள் குறைய்க்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் அதிக பெண் குழந்தைகள் பெறுவதால் தாய்மார்களின் ஆயுள் குறைவதில்லையாம். பின்லாந்தைச் சேர்ந்த தாய்மார்களை வைத்து இந்த ஆய்வு மேற் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாலூட்டும் அன்னையரின் கவனத்திற்கு...

பிறந்த குழந்தைக்கு கூடுமானவரை தாய் [illegible]லே கொடுப்பதே சிறந்தது.

❖ பால் அதிகமாக சுரக்க ஹார்லிக்ஸ், போன்றவற்றை பாலில் காய்ச்சி குடிக்க வேண்டும். தினமும் ஐந்து டம்ளர் குடிக்கலாம். ஒவ்வொரு முறை பாலூட்டும்போதும் தாய் மார்கள் சூடாக மேலே குறிப்பிட்ட ஏதாவது ஒரு பானத்தை குடித்துக்கொண்டு பாலூட்டுவது நல்லது.



❖ குழந்தைக்கு சளி இருப்பதுபோல் தோன்றினால் இஞ்சி கோப்பி குடிக்கலாம். பாலூட்டும் தாய்மார்கள் குளிர்மையான அயிட்டங்கள் சாப்பிடக் கூடாது. மிளகை சாப்பாட்டில் அதிகம் சேர்த்துக்கொண்டால் குழந்தைக்கு சளி பிடிக்காது.

❖ தாய்மார்கள் இரண்டு காதுகளையும் ஒரு ஸ்கார்ஃப் கொண்டு சுற்றி கொள்ளவும். காலில் எப்பொழுதும் செருப்பு அணிந்து கொண்டிருக்க வேண்டும். இரவில் தூங்கும் போது சொக்ஸ் போட்டு கொள்ளவும். இப்படி செய்வதால் நரம்புகளில் காற்று ஏறுவதை தவிர்க்கலாம்.

❖ எலும்புகள் வலுவடைய கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டுக்கால், மீன் போன்றவைகளில் மிளகு சேர்த்து எலும்புகளில் சூப் வைத்து 40 நாட்கள் வரை தினமும் மூன்று டம்ளர் அளவிற்கு குடித்தால், உங்கள் எலும்பும் பலம் பெறும். உங்கள் குழந்தை எலும்பும் பலம் பெறும். பாலும் நன்கு சுரக்கும்.

❖ பிள்ளை பெற்றவர்களுக்கு வயிறும் பத்து மாதமாக பெரியதாக இருந்ததால் சுருங்க நாள் எடுக்கும். சுகப்பிரசவமானவர்கள் இடுப்பை சுற்றி பெல்ட் போடவும். இல்லை மெல்லிய கொட்டன் சேலையை மேல் வயிறுக்கும், அடிவயிற்றிக்கும் சுருட்டி இருக்கமாக கட்டிக்கொள்ளவும். சாப்பிடும் நேரம், பாத்ரூம் போகும் நேரம் தவிர மற்ற நேரம் கண்டிப்பாகக் கட்டவும். இது தொடர்ந்து 40 நாள் வரையும், அதற்கு மேல் கொண்டும் கட்டாலாம்.

❖ வயிற்றில் சுருக்கம் விழாமால் இருக்க நல்லெண்ணெய், ஒலிவ் ஓயிலில் மஞ்சள் சேர்த்து வயிற்றில் தேய்த்து குளிக்கவும். நாளடைவில் சுருக்கம் மறைந் துவிடும். வயிற்றில் சுருக்கம் விழாமல் இருக்க பிள்ளை உண்டாகி மூன்றாம் மாதத்திலிருந்து வயிறு விரிவுகொடுக்கும் போது அரிப்பெடுத்தால் சொரியாமல் ஏதாவது கிரீம், ஒலிவ் ஓயில் தடவி வந்தால் பிரசவத்திற்கு பிறகு சுருக்கம் அவ்வளவாக விழாது.

# வாழ்க்கை போர்க்களம்

வாழ்க்கை என்பது சந்தோசமான போர்க்களம். இந்தப் போர்க்களத்தில் தம்பதியரிடையே வெற்றி, தோல்வி ஏற்படுவது சகஜம்தான். இதில் வெற்றி பெற்றவரைவிட தோல்வியடைந்தவர் களுக்குதான் மகிழ்ச்சி அதிகம் ஏற்படுவ தாக கூறுகின்றனர் அனுபவசாலிகள். சிலிர்ப்பை ஏற்படுத்தும் சுவாசக்காற்று, சின்னச்சின்ன வலிகள் போன்றவைகூட சந்தோசத்தை தரும் என்கின்றனர் நிபுணர்கள் இந்தப் போர்க்களத்தில் வெற்றிகொள்ள நிபுணர்கள் கூறும் ஆலோசனைகளை படியுங்களேன்.


சின்னச் சின்னக் கொஞ்சல்கள் வீட்டில் பிற இடங்களில் துணையை சந்திப் பதற்கும், போர்க்களத்தில் துணையை தனி யாக சந்திப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. வீட்டில் பெரியவர்கள், குழந்தைகள் இருந்தால் அவர்கள் முன்னிலையில் பெயரைச் சொல்லி அழைக்கும் கணவர்கள் போர்க்களத்தில் தங்களை செல்லப் பெயரிட்டுக் அழைக்க வேண்டும் என்று மனைவிகள் விரும்பு கின்றனர். இவ்வாறு நிகழும்போது, கிறங்கிப் போகும் மனைவி போர்க்களத்தில் தாங் களாவே விரும்பி தோற்றுப்போகின்றனராம்



இந்த இராஜதந்திர அணுகுமுறை கணவருக்கும் பிடிக்கும்! கணவர் மட்டும் தான் செல்லப்பெயரால் அழைக்க வேண்டும் என்றில்லை. மனைவியும் செல்லப் பெயர் எனப்படுகின்ற ஆயுதங்களைப் பயன்படுத்தலாம். அப்புறம் தலையணை மந்திரமெல்லாம் தேவையில்லை என்கின்றனர் அனுபவசாலிகள். அதாவது, சமையலறை யில் பார்த்துப் பார்த்து எப்படி சுவையோடு சமைத்து பரிமாறுகிறோமோ அதேபோல போர்க்களத்திலும் பார்த்து பார்த்து பதமாய் நடந்து கொள்ளவேண்டும் என்கின்றனர் நிபுணர்கள். அப்பொழுதுதான் போரில் பலன் கூடுமாம்.

போரில் சின்னச் சின்ன காயங்கள் சகஜம்தான் இப்படி ஏற்படும் காயங்கள் அகிம்சையான இம்சைதான் என்கின்றனர் சில தம்பதியர். இந்த காயங்கள் மகிழ்ச்சி யையும், அதேசமயம் வேகத்தையும் அதிகரிக்குமாம். போர் உக்கிரமாய் நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது, கிசுகிசுப்பாய் பேசுவது உற்சாகத்தை அதிகரிக்குமாம்.

எப்படியோ இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு சூழ்நிலைகளை அனுசரித்து உற்சாகத்தையும் உறுதியையும் தளரவிடாமல் போரில் ஈடுபட்டால் இறுதியில் தோற்பது யாராக இருப்பினும் இருவருக்குமே மகிழ்ச்சிதான், நன்மைதான்!






# மாற்றங்கள்

ஏன் நீ வாத்தியாரிடம் கேட்டுப்பாரன் என்று பாட்டி ஒரே சொல்லில் பதில் அளித்து விடுவார். உண்மையிலேயே தனது பேரனுக்கு எழுத வாசிக்க மட்டும் தெரிந்தால் காணும் என்ற அளவிற்கே பாட்டி சிந்தித்திருந்தார். அதற்கப்பால் எதைப் பற்றியும் சிந்திக்கும் அறிவாற்றல் பாட்டிக்கு இல்லை.

அரவிந் பாடசாலைக்குப் போகும் நேரம் தவிர மற்றைய பொழுதெல்லாம் அவனையே சுற்றிக் கொண்டிருப்பதால் பாட்டி, அவனுக்கு ஒரு தலையிடி என்றால் கூட துடித்துப் போய்விடுவார்.

அடிக்கடி அருகிலுள்ள பிள்ளையார் கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்வதும் அர்ச்சனை செய்வதும் பிள்ளையாரப்பா நான் கண்ணைமூட முன்னர் என்ர பேரனுக்கு நல்ல வாழ்வைக் கொடுக்கவென வேண்டிக் கொள்வார்.

ஒரு முறை தமிழ்ப்பாட ஆசிரியர் இரு மாணவர்களிற்கு ஒரு வினாப்பத்திரம் என்ற வீதத்தில் கொடுத்து விடை எழுதி வருமாறு கூறியிருந்தார். அரவிந்துடன் இணைத்து விடப்பட்ட மாணவன் தான் இருக்குமிடம் தூரம்... அதனால் உன்னுடன் சேர்ந்து விடை எழுத நேரம் இல்லை.

நாளைக்கு காலையில் நேரத்துடன் வா கேள்விப் பேப்பரைத் தருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான். மறுநாள் அந்த மாணவன் பாடசாலைக்குச் சமூகம் கொடுக்கவில்லை.

இதனால் அரவிந் வீட்டுப்பாட வேலையைச் செய்திருக்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாது அரவிந்தனின் மனம் படபடத்துக் கொண்டிருந்தது. தமிழ்ப் பாடம்தான் அன்று முதல் நடைபெற்ற பாடம். ஆசிரியரும் மிகக் கடுமையானவர்.

விட்டுப் பாடவேலை செய்யாவிட்டால் வகுப்பிற்கு வெளியே விடுவார் என்றும் தெரியும். இவ்வாறு எண்ணியபடி பிரார்த்தனை மண்டபத்திலிருந்து அரவிந் பிரார்த்தனை முடிந்ததும் உடனே வகுப்பறைப் போய் யாரிடமாவது வினாப்பத்திரத்தினை வேண்டி வீட்டுப்பாடத்தை செய்துமுடிப்போம் என நினைத்தான். அதுவும் யாரிடம் வேண்ட முடியும்.

எல்லோரும் தன்னில் சினந்துவிடுவார்கள். இருந்தாலும் தனது அயல் ஊர் மாணவியும் ஓரளவு தன்னுடன் அன்பாகப் பழகும் சுபாவமும் பாடங்களில் ஏதேனும் சந்தேகங்கள் எழுந்தால் யாரும் இல்லாத வேளைகளில் தன்னிடம் கேட்டு அறிந்துகொள்ளும் ஆர்த்தியிடம் கேட்போம் என எண்ணிய போது அன்று வெள்ளிக்கிழமை என்பதால் சிவபுராணம் பாடுவதற்கு அதிகநேரம் பிரார்த்தனை மண்டபத்தில் பிரார்த்தனை நடைபெற்றது.

இது முடிந்துபோகும் போது அடிக்கடி தன்னை அரவிந் பார்த்தான் என்பதை அவதானித்த ஆர்த்தி அருகில் வந்து என்ன அரவிந் எனக் கேட்டாள். அப்போது வேகமாக அரவிந் வேண்டுகையை விடுத்தான். வகுப்பறையில் வந்து ஆர்த்தி வினாப்பத்திரத்தை எடுத்துக்கொள்ளவும் தமிழ் ஆசிரியர் வகுப்பறைக்கும் வரவும் சரியாக இருந்தது.

வீட்டுப்பாடம் செய்யாதவர்கள் வெளியில் அனுப்பப்பட்டனர். அதில் அரவிந்தும் அடங்கியிருந்தான். அன்று பாடத்தை முடித்து ஆசிரியர் வெளியில் வரும் போது அரவிந் அவர் அருகில் சென்று சேர் மன்னிக்கவேண்டும். எங்களுக்கு வழங்கப்பட்ட வினாப்பத்திரத்தினை மற்றைய மாணவன் என்னிடம் தரவில்லை.


அதனால்தான் பாடம் செய்யவில்லை என்றபோது அப்படியானால் உனது வீட்டிற்குப் பக்கத்திலுள்ள சக மாணவரிடமாவது பத்திரத்தை வேண்டி விடை எழுதியிருக்க வேண்டும். சரி நாளைக்காவது எழுதிவா எனக்கூறிச் சென்று விட்டார். வகுப்பறைக்குள் சென்ற அரவிந் வினாப்பத்திரத்தை வாங்க ஆர்த்தியைப் பார்த்தபோது ஆர்த்தி சைகைமூலம் ஏதோ சொல்வதை அரவிந் அவதானித்து விட்டு மிகுந்த கவலையுடன் அமர்ந்து கொண்டான். **(தொடரும்)**

---

அருணாச்சலம் சைக்கிள் நாலு சந்தி திரும்பியபோது எதிரே ஒருவர் குடையை கமக்கட்டில் வைத்துச் செல்வதைப் பார்த்தபோதுதான் காளி கோயில் மண்டபத்தில் குடையை மறந்து வைத்து விட்டு வந்தது ஞாபகத்திற்கு வந்தது.

சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வந்த வழியே கோயிலை நோக்கி விரைந்தார். மாலையில் மழை வருவதற்கு அறிகுறியாக வானம் மேகமூட்டமாக இருப்பதைப் பார்த்துவிட்டு சற்று தயங்கித்தான் மருமகளின் குடையை எடுத்துவந்தார். ஆனால் எதிர் பார்த்ததுபோல மழை வரவில்லை!

காளி கோயிலுக்கு வந்தவர், ஏதோ நினைப்பில் குடையை கோவில் மண்டபத்திலேயே விட்டுவிட்டு வந்து விட்டார். அவர் எப்போதும் இப்படித்தான் கரண்ட் பில்லும் டெலிபோன் பில்லும் கட்டுவதற்குக் கிளம்பிச் செல்வார். அங்கே சென்ற பிறகுதான் பணத்தை வீட்டிலேயே வைத்து விட்டு வந்தது ஞாபகத்திற்கு வரும். சிலசமயம் குடும்ப அட்டையை எடுத்துக்கொண்டு கிளினிக் சென்றுவிடுவார்.



# திருட்டு

ஓய்வுபெறும் வரை அவரது பெயர் பள்ளிக்கூடத்தில் "ஞாபக மறதி அருணாச்சல வாத்தியார்' தானே. வெள்ளிக்கிழமை கோவில் மண்டபத்தில் அதிக கூட்டமிருந்தது. அருணாச்சலம் தான் அமர்ந்திருந்த இடத்தில் சென்று பார்த்தார் குடையைக் காணோம்... அவருக்கு திக்கென்றது. அவரது மருமகள் மாதர் சங்கத் தலைவி. கடும் கோபக்காரி குடை தொலைந்து விட்டதாகச் சொன்னால் சாமியாடி விடுவாள். ராட்சஸி மகனோ மனைவி முன்பு பெட்டிப் பாம்பு வீட்டில் "மங்கம்மா" ஆட்சிதான்.

பக்கெட்டில் பணமிருக்கிறது. வேறு குடை வாங்கலாம்... எனக்கு அதே குடைதான் வேணும். அது என் அம்மா வீட்டில் வாங்கிக் கொடுத்தது என்று எதையாவது சொல்லி கர்ஜிப்பாள்.. வீம்பு பிடித்தவள்... அருணாச்சலம் மாலை நேரத்தில் இப்படி கோவில் மண்டபத்தில் தனிமையில் அமர்ந்து தன் இளமைக் காலத்தையும் இறந்து போன மனைவி லட்சுமியுடனான சந்தோஷமான தருணங்களையும் அசைபோட்டு மகிழ்வார்.

அந்த பழைய ஞாபகங்களுடனே கிளம்பிச் சென்றதில் குடை எடுத்து வந்த விஷயம் அவருக்கு மறந்து போயிற்று...

மருமகளை நினைத்து அவருக்கு உள்ளூர உதறல் எடுத்தது... இந்த வயதில் அவளிடம் திட்டு வாங்கத்தான் வேண்டுமா...?

என்ன செய்யலாம்..? யோசனையில் ஆழ்ந்தார் அருணாச்சலம்...

அப்போதுதான் அவரது கண்ணில்பட்டது. இந்தக் குடை... மருமகளின் குடைபோலவே அதுவும் மஞ்சள் குடை.... எடுத்து சென்றுவிடலாமா...? ஒரு இளம் தம்பதியினர் அவருக்கு முதுகு காட்டி பேசிக்கொண்டிருந்தார்கள்... அருணாச்சலம் இதுவரை எவர் பொருளையும் களவாடியதில்லை... மருமகளின் வசைச் சொற்களுக்குப் பயந்து அந்த காரியத்தையும் செய்தே விட்டார்..!

யாராவது தன்னை கவனிக்கிறார்களா என்று சற்று முற்றும் பார்த்தவர் ஓசைபடாமல் அந்த குடையை "லவட்டிக்" கொண்டு வெளியே வந்தார்.

சும்மா சொல்லக் கூடாது... திருடுவதில் ஒரு "த்ரில்லான" சுவாரஷ்யம் இருக்கத்தான் செய்கிறது. வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த சுகந்தி சைக்கிளில் வந்திறங்கிய தாத்தாவைப் பார்த்துவிட்டு ஓடிவந்தாள்... தாத்தா அவளது நெற்றியில் அம்பாள் பிரசாதம் இட்டவர் குடையுடன் உள்ளே சென்றார்.

ஹோலில் அவரது அருமை மருமகள் சிவகாமி இரண்டாவது மகள் சதீசை மிருகத்தனமாக அடித்துக் கொண்டிருந்தாள்.. "செய்வியா"... "செய்வியா..." தெரியாமல் செய்துட்டேம்மா... சதீஸ் ஓவென அழுது கொண்டிருந்தான்...

என்ன தைரியமிருந்தா... கூடப் படிக்கிற பையனோட பேனாவைத் திருடுவே... எல்லாம் உனக்கு அப்பாவும்... தாத்தாவும் கொடுக்கிற செல்லம்... உங்க தாத்தாவுக்கு விஷயம் தெரிந்தால்.. அவரு என்ன நினைப்பாரு...? தன் பேரன் திருட்டுத்தனம் பண்றதை அவரால் ஜீரணிக்க முடியுமா? சிவகாமி மறுபடியும் சதீசை அடித்தாள்... அருணாச்சலம் அதிர்ந்தார். ஏனோ அவருக்கு வலித்தது. நம்ம மருமகள் கோபக்காரிதான் என்றாலும் நேர்மையான மனசுக்காரி...

கோபம் இருக்குமிடத்தில்தானே நல்ல குணமும் இருக்கும் அவளின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் பயந்து என்ன காரியம் செய்துவிட்டேன்...? ஐயோ... இங்கே அடிவாங்கும் பேரனுக்கும்.. எனக்கும் என்ன வித்தியாசம். குற்ற உணர்ச்சி குறுகுறுக்க.. அந்தக் குடையுடன் வெளியே வந்தார். மழை பொழிய ஆரம்பித்திருந்தது.

குடையை விரித்தார். வெளியே செல்ல சைக்கிளைத் தள்ளினார் தாத்தா.. "மழை பெய்யுதே... மறுபடியும்... கிளம்பிட்டீங்க..." பேத்தி சுகந்திதான் கேட்டாள்...

அவளுக்கு புன்னகையை மட்டும் பதிலாகத் தந்துவிட்டு... சைக்கிளில் ஏறி... கோவிலை நோக்கிவிரைந்தார்... அருணாச்சலம்...

**வ.குணபாலசிங்கம்**
**நஸ்லார்**

---

## சிரிப்பதற்கு...













# தங்கச் சங்கிலியைப் பறிப்பதற்காக கழுத்தை வெட்டிப் படுகொலை

**சிலநாட்களாக** பெய்து வந்த அடைமழையினால் வேலைக்கு செல்லமுடியாமல் இருந்தது. அதனால் கையில் காசு இருக்கவில்லை. கடந்த மாதம் 24ஆம் திகதி காலையில் வீட்டில் இருந்து வெளியில் சென்றேன். அப்போது கவ்வாத்து கத்தியும் என் கையில் இருந்தது. காலை 10.30 மணிவரை எவ்வித வேலையும் கிடைக்கவில்லை. ஆகையினால் மீண்டும் வீட்டிற்கே திரும்பினேன்.

கையில் காசு இல்லாமையினால் மிகவும் சிரமமாக இருந்தது. எனவே எப்படி கொஞ்சம் காசு சேர்ப்பது என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். அந்த சந்தர்ப்பத்தில் அதிர்ஷ்ட இலாப டிக்கெட் விற்பவர் ஞாபகத்திற்கு வந்தார். அதாவது அவரின் கழுத்திலே பெரிய தங்கச் சங்கிலி ஒன்று இருந்தது. அதனை பறித்து அடகுவைத்தால் அல்லது விற்றால் சுமார் ஒரு வார காலத்திற்கு சமாளித்துக் கொள்ளலாம் எனத் தோன்றியது. எனவே அதுதொடர்பாக நாதனிடம் கூறினேன். நாதனும் அதற்கு சம்மதம் தெரிவித்தார்.

நாதனின் சம்மதத்தை அடுத்து நான் வீதியில் ஆள் நடமாட்ட இல்லாத ஓர் இடத்தில் மறைந்துகொண்டேன். அத்தோடு அந்த சந்தர்ப்பத்தில் அதிர்ஷ்ட இலாப டிக்கெட் வாங்குவதை போல், அவரும் வீதியோரமாக இருந்தார். அதிர்ஷ்ட இலாப டிக்கெட் விற்பவர் அவ்வழியே வந்தபோது அவரை நாதன் நிறுத்தினான். அந்த சந்தர்ப்பத்தில் மறைந்திருந்த நான் முன்னால் பாய்ந்து அவருடைய கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை பறிக்க முற்பட்டேன்.

இவ்வாறு நான் அவருடைய தங்கச்சங்கிலியை பறிக்க முயன்றபோது அவர் சத்தமிட்டவாறு என்னுடன் முரண்பட்டார். ஆகையால் தோட்டத்தில் உள்ளவர்கள் சத்தத்தைக் கேட்டு வந்துவிட்டனர். நான் சிக்கலில் மாட்டி விடுவேன் என்று எண்ணி என் கையிலிருந்த கத்தியால் அவருடைய கழுத்தை வெட்டினேன். அவர் கீழே விழுந்ததும் நானும் நாதனும் அவ்விடத்திலிருந்து ஓடிச்சென்றோம், என இக்கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான சுரேன் பொலிஸில் சாட்சியம் அளித்துள்ளார்.

கடந்த மாதம் 24ஆம் திகதி காலை 11.30 மணியளவிலேயே அந்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது. நிவித்திகல, தொலஸ்வலவத்தை தோட்டத்தில் இடம்பெற்ற இந்த கொலை சம்பவத்தினால் நிவித்திலக உடகர விட்ட பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாக காமினி என்பவரே கொலை செய்யப்பட்டிருந்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான காமினி ஒரு அதிர்ஷ்ட இலாப டிக்கெட் விற்பனையாளராவார். யாரிடமும் அன்பாக பழகும் சுபாவம்கொண்ட இவருக்கு அப்பகுதியில் எதிரிகள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு யாரும் இருக்கவில்லை. ஆகையினால் காமினியை யார்?, எதற்காக கொன்றார்கள் என்பது தோட்ட மக்களுக்கு புதுமையாக இருந்தது. இவ்வாறான நிலையில் நிவித்திகல பொலிஸ் நிலையத்துக்கு இச்சம்பவம் தொடர்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து நிவித்திகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பணிப்புரைக்கமைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி நிரோஜன் அபேகோன் தலைமையிலான பொலிஸ்குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்தது. அங்கு சென்று பார்த்தபோது கழுத்து வெட்டப்பட்ட நிலையில் காமினி வீதியோரமாக கிடந்துள்ளார்.

பொலிஸ் விசாரணைகளை நடத்தியபோது கவ்வாத்து வெட்டும் கத்தியால்தான் காமினி கழுத்து வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை அறிந்துள்ளனர். எனவே இந்த படுகொலையினை நிவித்திகல தொலஸ்வல தோட்டத்தைச் சேர்ந்த ஒருவரே செய்திருக்க வேண்டும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் உடனடியாகப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்தனர்.

நிவித்திகல தொலஸ்வல தோட்டத்திற்குச் சென்ற பொலிஸார் சம்பவம் தொடர்பாக பொதுமக்களிடம் விசாரித்த அதேவேளை, சிவில் பாதுகாப்பு படையினரிடமும் இச்சம்பவம் பற்றி அறிவித்துள்ளனர். இவ்வாறான நிலையில் சம்பவ தினத்தன்று அப்பகுதியில் சுரேன் என்ற நபர் மிகுந்த பதற்றத்துடன் சென்றதைக் கண்டதாக கிராமவாசியொருவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இந்தத் தகவல் சுரேனை கைது செய்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை. எனவே பொலிஸார் அதனடிப்படையில் விசாரணைகளை முடுக்கிவிட்டனர். காமினி என்பவருக்கு எதிரிகள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு எவரும் இருக்கவில்லை. ஆகையால் காமினியிடம் இருந்த பணம் மற்றும் தங்க சங்கிலியை பறிப்பதற்காகவே யாராவது காமினியைக் கொலைசெய்திருக்க வேண்டும் என்று பொலிஸார் கருதினர்.

இவ்வாறு கருதிய பொலிஸார் கடந்த மாதம் 28 ஆம் திகதி நிவித்திகல, தொலஸ்வல தோட்ட மக்களை மாலை வேளையில் தேயிலைக் கொழுந்து மடுவத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர். அதாவது இவ்வாறு அழைப்புவிடுத்ததும் பெரும்பாலும் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் அந்த இடத்துக்கு வராமல் விடுவார். எனவே அவரை இலகுவாக அடையாளம் கண்டுகொள்ள முடியுமென பொலிஸார் எதிர்பார்த்தனர்.

அனைவரும் கொழுந்து மடுவத்தில் ஒன்றுகூடினர். ஆனால் பொலிஸார் எதிர்பார்த்த விடயம் நடக்கவில்லை. அதாவது அந்த தோட்டத்தைச் சேர்ந்த சகல ஆண்களும் அவ்விடத்துக்கு வந்திருந்தனர். எனவே சந்தேக நபரை கண்டுபிடிப்பதற்கான யுக்தியினை மாற்றியமைக்க வேண்டிய தேவை பொலிஸாருக்கு ஏற்பட்டது.

கொழுந்து மடுவத்தில் ஒன்றுகூடி தோட்ட மக்கள் மத்தியில் பேசிய நிவித்திகல பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி, "காமினியைக் கொலை செய்தவர் இந்தப் பகுதியில்' தான் இருப்பதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. எனவே அதுபற்றி யாராவது தகவல் தெரிந்தால் எங்களிடம் கூறுங்கள்" என்று பேசியுள்ளார்.

பொலிஸார் இவ்வாறு கூறியதை அடுத்து அங்கு வந்தவர்கள் ஒருவருக்கொருவர் கதைத்துக்கொண்டனர். அந்தச் சந்தர்ப்பத்தில் அவ்விடத்திற்கு சற்றுத்தொலைவில் இருந்து கற்பாறையொன்றில் அமர்ந்து கொண்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி அங்கு நடந்தவற்றைக் கூர்ந்து அவதானித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் அக்கூட்டத்திலிருந்த ஒருவர் மீது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே அந்த பொலிஸ் உத்தியோகத்தர் உடனடியாக அதுதொடர்பாக குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியிடம் கூறியுள்ளார். எனவே அந்தச் சந்தேக நபர் மீதான பொலிசாரின் கழுகுப் பார்வை தீவிரமடைந்தது. அதேவேளை இந்த விடயம் பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளாத பொலிஸார் அவற்றைக் கையடக்கத் தொலைபேசி மூலம் ஒளிபதிவு செய்துகொண்டனர்.

அதாவது சிவில் உடையிலிருந்த இரு பொலிஸாரே இவ்வாறு அவ்விடத்திலிருந்து கையடக்க தொலைபேசிமூலம் அங்கு நடந்தவற்றை ஒளிப்பதிவு செய்துகொண்டனர். பின்னர் அங்கிருந்தவர்களிடம் ஏதாவது தகவல்தெரிந்தால் தமக்கு அறிவிக்குமாறு கூறிவிட்டுச் சென்றனர். இவ்வாறு சென்ற பொலிஸார் அன்றிரவு தொலைபேசி மூலம் ஒளிப்பதிவு செய்த காட்சியினை நன்கு அவதானித்துள்ளனர். அதன்போது ஏற்கனவே பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சந்தேகித்த ஒருவருடைய செயற்பாடு அந்த சந்தேகத்தை உறுதிப் படுத்தியுள்ளது. அதாவது அவர் அடிக்கடி மற்றவர்களின் பின்னால் மறைந்து கொண்டு சற்று பதற்றத்துடன் இருப்பதை அந்த ஒளிப்பதிவு காட்சியில் பொலிஸார் அவதானித்துள்ளனர். அதனடிப்படையில் அவரைக் கைது செய்துள்ளனர்.


சுரேன் என்ற சந்தேக நபரையே பொலிஸார் இவ்வாறு கைது செய்தனர். சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணையின் அடிப்படையில் இக்கொலையுடன் தொடர்புடையதாக கூறப்படும் மற்றுமொரு சந்தேகநபரான சுரேனும் கைது செய்யப்பட்டார். இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து கொலைக்காக பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கவ்வாத்து கத்தி மற்றும் இரத்தக்கறை படிந்த சந்தேகநபரின் ஆடை, பாதணிகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பிரதான சந்தேகநபரான சுரேனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்மூலமே கவ்வாத்து கத்தி மற்றும் இரத்தம் தோய்ந்த அவருடைய ஆடை, காலணிகளை மீட்ட பொலிஸார் மற்றைய சந்தேகநபரையும் கைது செய்தனர்.

எனவே அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் பொலிஸார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இவ்வாறு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இரு சந்தேக நபர்களும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

காமினி படுகொலை செய்யப்பட்டு ஒரு வாரத்துக்குள் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். எனவே குற்றச்செயலை புரிந்துவிட்டு மறைந்துவாழ்வது முடியாத காரியம். எனவே என்னதான் குற்றச்செயல்களை புரிந்தாலும் அது என்றோ ஒருநாள் வெளிப்பட்டுவிடும் என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். *





# தீராத சந்தேகம்

"உயிருக்கு
உருவம் உண்டு.
அந்த உயிரையும்
நான் கண்டதுண்டு!"!

மலர் விழி சொல்ல
தோழி நகைத்தாள்.

"என் உயிர்
அவர் தானடி! - நான்
கண்களால் தீண்டும்
உயிர் அவர் தானடி!"

தோழிக்கு
விடயம் வெளித்தது.

"கைகளால்
தீண்டும் இன்பம்
உடலில்"
கண்களால்
தீண்டும் இன்பம்
உயிரில்!"

மலர் விழி
பாடம் போதித்தாள்!

"காற்றுக்கொண்டதை
கற்றுத்தர
கிடைத்தது நான்தானா?"
தோழி வினாக்குறி
போட்டாள்.

"வேண்டாம் என்றால்
போடி"
காதல் கதை கேட்க
ஆவல் இல்லாமல் போகுமா?

"பாவமடி நீ
உனக்கும் பேச்சுத் துணை
வேண்டாமோ
சரி எடுத்து விடு!"
என்றாள் தோழி.

"காதலுக்கு .
தேவை என்ன சொல்லு?"

"காதலுக்கு தேவை
உயிரை வெளிவிடுதல்!
காதலுக்கு தேவை
உயிரை உள்வாங்கல்!

தோழி சொன்ன பதில்
சுவையாக இருந்தது!

"ஒத்துக் கொள்கின்றேன்
அத்தோடு இன்னொன்றையும்
சேர்த்துக் கொள்ளடி
காதலுக்கு
பொறுமையும் தேவை"
என்றாள் மலர் விழி.

"ஓடுமீன் ஓடி உறுமீன்
வருமளவு வாடியிருக்க
காதல் என்ன கொக்கோ?
இடக்காக எழுந்தது கேள்வி
"கொக்குத்தானடி கொக்குத்தான்.

கண்டதும் காதல்
கதைகளில் தான்!
அந்தக் காதல் விரைவாக
வென்றதும் கூட
கதைகளில்தான்!"

மலர்விழி சொன்னதும்
தோழி குறும்பினாள்.

"ஒற்றைக் காலில்
நில்லடி கண்ணு
வெற்றிக் குமரன்
வருகின்ற வரைக்கும்!"

மலர் விழி
அசைந்தாளில்லை!

"கடற்கரை மணலில்
கொக்கு நிற்கும்!
காதலின் வீதியில்
நான் நிற்பேன்!"

"பொறுத்தார் அரசாள்வார்
என்பது தெரியும்
காத்திருந்தார்
காதலில் கரைசேர்வர்
என்பது தெரியாது!"

மறுபடி தோழியின்
இடக்குப் பேச்சு
மடக்கும் வீச்சு!

"காதலின் சுகம்
எதிலே தெரியுமா?
"எதிலே?"
"காதலின் கைப்படுமா
என்ற தவிப்பிலே!"

"ஓஹோ"
"காதலின் சக்தி
எதிலே தெரியுமா?"
"தெரியாதம்மா தெரியாது!"

"எண்ணிக்கொண்டே
இருக்கும் போது
எண்ணியவர் எதிரே
வந்து நிற்கும் வியப்பிலே!"

"அடடே..
மனது தபால் அனுப்பி
தகவல் கொடுக்கிறதோ?"

"நினைவுகளே தந்திகள்
நினைவுகளே தபால்கள்
நினைவுகளே புறாக்கள்
காற்றில் பறந்து சென்று
காதல் தூது சென்று
கை பிடித்து இழுத்து வருகின்றனர்"

"அழைத்துவந்த பின்னர்
களைத்து வந்தவரை
எப்படிக்
கவனிப்பாய்?"
தோழி கண்
சிமிட்டினாள்

"நெஞ்சுக் கட்டுக்குள்
இழுத்தணைத்து
பூட்டிக் கொள்வேன்!
கொஞ்சும் இதழினாள்
கொவ்வைப் பழம்
கொடுப்போன்!
யானைப் பலம் கொண்ட
காளை என் முன்னால்
பூனைபோல் பதுங்கும்!
உள்ளம் துடி துடிக்க
கள்ளம் சிறகடிக்கும்!
இன்ப வெள்ளம் மேல்விழுந்த
தோணி நாமாவோம்!

காதல் துடுப்பாலே
இன்பக் கரை நாம் சேர்வோம்!

கைகள் தாளமிட
கால்கள் கலந்தாட
தோள்கள் சுதி சேர
பாலும் பழமாகி
தேனும் சுவையுமாகி
தேகம் சதிர் ஆடும்!

குதிரையில் பறந்துவந்த
குழலாள் மீசைக்காரன்
இன்பக் குதிரையில்
எனை அழைத்து

போதும் உலா
சொர்க்கம் என்பேன்!

போதும் என்பேன்
மோதும் யானை!
அஞ்சிய பூனை
கொஞ்சிய பின் யானை!

மலர் விழி
சொல்லச் செல்ல
கள்வெறி கொண்டாள்
தோழி!
கள்வெறி கொண்ட
தோழிக்கு
தன் காதலன் நினைவு
இடறியது!

கண்கள்
கிறக்கத்தில் செருகியது!

"என்னடி தோழி
மயக்கமா?
கள் வெறிக்க காமக்
கலக்கமா?"

தோழியைக் கேட்டாள்
மலர் விழி.

"எனக்கொரு சந்தேகம்
என்றும் தீராத சந்தேகம்"

"என்னடி தோழி
சந்தேகம்?"

"உள்ளே போனால்தானே
மது வெறிக்கும்!
உண்டால்தானே
மது மயக்கும்!
ஆனால் - நினைக்கவே
வெறிக்கிறதே
இது என்ன மயக்கம்?"

தோழியின் வினாவுக்கு
சுருக்கமாய் சொன்னாள்
திருக்குறள் ஒன்றை!

"இதன் பெயர்தான்
இன்ப மயக்கம்.
நினைத்ததும் இனிக்கும்
காம மயக்கம்.
உண்ணும் கள்ளும்
ஈடாகாத இன்ப மயக்கம்"

'உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது

அதிகாரம் 121 – குறள் 1201




**சிந்தியா! மனித உரிமை மீறல்கள் மோசமாகக் காணப்படுவதாக பிரித்தானிய நீதிமன்றம் இலங்கை அரசு மீது குற்றம் சுமத்தியுள்ளதே?**

தா.சாரங்கன், கொழும்பு -06.

இது எத்தனையாவது குற்றச்சாட்டு. குற்றம் சாட்டுகின்றவர்கள் அந்தக் குற்றச்சாட்டை குறிப்பிட்ட நாடு திருத்திக் கொள்ளாவிட்டால் அடுத்து என்ன செய்வார்கள் என்பதை செய்து காட்டவேண்டும். அதைவிடுத்து குற்றம் சாட்டுகின்றோம், மனித உரிமை மீறல் தொடர்கின்றது என்று கூறிக் கொண்டிருந்தால் கேட்டுக் கேட்டுப் பழகிப் போய்விடுகின்றது. பிறகு அதையே ஒரு பழக்கமாக எடுத்துக் கொள்ளவேண்டியதுதான். அதுதான் இங்கேயும் போல் தெரிகின்றது.



**சிந்தியா! முல்லைத்தீவில் தமிழ் - சிங்கள கடற்றொழிலாளர்களின் பிரச்சினையின் அடிநாதம் என்ன?**

மா.சுவாதி, கிளிநொச்சி.

தெரியாத மாதிரி கேள்விகேட்டால் அங்கு நடக்கும் அத்துமீறல்களையும், வளச்சுரண்டல்களையும் மூடி மறைத்து விட்டு அங்கு ஒன்றுமே நடக்கவில்லை. பாவம் தென் இலங்கை மீனவர்கள் தொழிலுக்காக வருவதை முல்லைத்தீவு மீனவர்கள் விரும்பவில்லை. அதனால் சண்டை பிடித்துக் கொள்கின்றார்கள் என்று நான் சொல்வேன் என்று நினைத்தீர்களோ?

**சிந்தியா! நடிகர்களின் கிசுகிசுக்களால் அவர்கள் பிரபலமடைவதுண்டா?**

மு.அனுஷன், சுண்டுக்குளி.

கிரகம் புடிச்சதுகள் அப்படியும் பிரபலம் தேடுகின்றார்கள். பல நேரங்களில் கிசுகிசுக்கள் உண்மையானவைதான். சினிமாத் துறையில் அதுவெல்லாம் சாதாரணம் பாருங்கோ.

**சிந்தியா! இலங்கை தமிழர்களுக்காக அடிக்கடி நாடகமாடும் தமிழ் நாட்டு இந்நாள், முன்னாள் முதலமைச்சர்களை என்ன செய்யலாம்?**

எஸ்.லோஜிதா, ஹெக்கிராவ.

விமானச்சீட்டுக்கு பணமில்லாமல் கட்சி நடத்திக் கொண்டிருக்கும் அவர்களுக்கு நாம் சிலர் சேர்ந்து பிச்சை எடுத்தாவது விமானச்சீட்டைப் பெற்று அனுப்பி அய்யாமாரும், அம்மாவும் ஒரே ஒரு தடவை இலங்கைக்கு வாங்கோ. எங்களைப் பாருங்கள் என்று கூப்பிட வேண்டும். எங்கள் மீதான உங்கள் அக்கறை உண்மையானதாக இருந்தால் நீங்கள் நேரடியாக பிரச்சனையை அணுகவேண்டும். அவ்வாறில்லாமல் அங்கே இருந்துகொண்டு, அங்கு உயிர்காக்க வந்த ஈழத்தமிழர்களை சுதந்திரமற்ற கொத்தடிமைகளாக நடத்திக் கொண்டு, இங்கே சிங்களவர்கள் தமிழர்களை கொலை செய்கின்றார்கள் என்று நீலிக் கண்ணீர் வடிப்பதில் அர்த்தமில்லை என்பதை எடுத்துரைக்கவேண்டும்.

**சிந்தியா! பாகிஸ்தான் சிறுமி மலாலாவை கௌரவிக்கும் முகமாக மலாலா தினம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதே?**

எம்.பாறூக், வந்தாறுமூலை.

அண்மையில் மலாலா ஐக்கிய நாடுகள் சபையில் இளையோர் பாராளுமன்ற அங்கத்தவர்களின் மகா நாட்டில் பங்குகொண்டு ஆற்றிய உரை மிகவும் உணர்வுபூர்வமானது. அதாவது பயங்கரவாதிகளின் குறிப்பாக தலிபான்களின் மகன்களுக்கும், மகள்களுக்கும்கூட கல்வி புகட்டப்படவேண்டும். கல்வி கற்கும் உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டும். கல்விதான் உயரிய சொத்து என்று கூறியிருந்தார். எதற்காக மலாலாவின் மூக்கை அறுத்து மலாலாவை கொடுமைப்படுத்தினார்களோ அதற்கு எதிராக துணிச்சலோடு போராடிவரும் மலாலாவின் துணிச்சலை நாம் மனதார பாராட்டவேண்டும்.

**சிந்தியா! சிந்தியா ஒரு கடி ஜோக் கூறுங்களேன்?**

சி.சாந்தன், முள்ளியவளை.

தேர்தல் வருகிறதே!! மேடைகளில் பல கடிகளையும் ஜோக்குகளையும் எதிர்பாருங்கள்.

**சிந்தியா! புத்தகாயா குண்டு வெடிப்பின் நோக்கம் என்ன? சுற்றி வளைக்காமல் பதில் தாருங்கள் சிந்தியா?**

எம்.அனற்மேரி, பள்ளமடு.

பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் இந்தியா பலவீனமான நிலையிலேயே இருக்கின்றது என்பதை பயங்கரவாதம் தனது ஸ்டைலில் உலகுக்கு கூறுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சி அது.

**சிந்தியா! அழகுதான் நடிப்பிற்குள் நுழைவதற்கு முதற்காரணம் எனும் ஹன்சிகா கூறியிருப்பதை ஏற்றுக் கொள்ளலாமா?**

சி.குந்தவை, சாவகச்சேரி.

கனவுத் தொழிற்சாலையின் நடிகைகள் தொடர்பான தற்போதைய அளவீடு எது என்பதை அனுபவத்தோடு ஹன்சிகா கூறியிருப்பதை நாம் எப்படி மறுப்பது.

**சிந்தியா! ஆஷஸ் தொடர் முடிவுகள் எவ்வாறு இருக்குமென நினைக்கின்றீர்?**

பி.பதீதரன், கொள்ளுப்பிட்டி.

கிரிக்கெட்டின் ஜாம்பவான்களாகத் திகழ்ந்த கெய்டன், அடெம் கில் கிறிஸ்ட், ஷேன் வோர்ன், பிரெட்லி ஆகியோரின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமானவர்களைப் பொறுக்கி எடுக்க முடியாத அவுஸ்ரேலியாவின் பரிதாபம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

அதைவிட இங்கிலாந்தின் அணித்தலைவர் அலிஸ்ரர் குக்கின் தலைமைப்பண்பும் கூடவே ஜேம்சன் போன்ற இளம் வீரர்களும் கலக்கலாகவே இருக்கிறது. ஆகவே போட்டியின் முடிவைப்போன்றே தொடரின் முடிவும் அமைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கின்றது.


ஸ்ரீ ராம ஜெயம்

## மலையாள மாந்திரிக சக்தி



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவரெலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

# காதிலை பூ

கந்தசாமி




**வணக்கமுங்கோ. போன வாரம் இலங்கைக்கு வருகை தந்த இந்திய பாதுகாப்பு ஆலோசகரை திரும்பிப் போறதுக்கு முன்னம் பிடிச்சுப்போட வேணுமெண்டு போனுக்கு மேல போன் போட்டு தூதரகத்திட்ட கேட்டனுங்கோ. அவை சரியான ரிப்ளை தரவில்லையுங்கோ.**

நான் விடுவனோ. இவர் திரும்பிப்போற பிளைட்டை தெரிஞ்சுகொண்டு அதிலேயே இந்தியாவுக்கு ஒரு ரிக்கட்டை போட்டு காத்திருந்தேனுங்கோ. நான் நினைச்சதுபோலவே மச்சான் பிளைட்டுக்குள்ள அகப்பட்டாருங்கோ. "என்ன மேனன் சார் எப்பிடி இருந்திச்சது உங்களுடைய சிறிலங்கா டூர்" எண்டு கேட்டனுங்கோ.

இப்பிடி ஒரு குரல் பிளைட்டுக்குள்ள கேட்கும் என்று அவர் நினைச்சும் பாத்திருக்க மாட்டார் போலை. அப்பதான் பிளைட்டுக்குள்ள வாங்கின விஸ்கி பொரைக்கேற என்னைத் திரும்பிப் பார்த்தாருங்கோ.

"ஹலோ மிஸ்டர் கந்தஸ் நீங்கள் இதுக்குள்ள". வட்ட சர்ப்பிரைஸ் எண்டாருங்கோ..

"அது சரி கண்டால் கூட்டாடி காணாட்டில்..." எண்டு சொல்லிப் போட்டு. நீங்கள் வந்த காரியம் எப்பிடி அதைச் சொல்லுங்கோ எண்டனுங்கோ. அவரின்ர முகம் அப்பிடியே சுருங்கிப் போட்டுதுங்கோ.

"எல்லாம் பேட் போய்ஸ் மிஸ்டர் கந்தஸ்..."அவங்கள் நான் நினைச்ச மாதிரி இல்லை. வெறி வெறி ஸ்மாட் தெரியுமோ? யார்கிட்டையும் உண்மையான வார்த்தையை நான் அவதானிக்க வில்லை. கபடமான சிரிப்பும், மனச்சாட்சிக்கு விரோதமான பேச்சும் சீச்சி. வேறி பேட்.. வெறி பேட். ஐ ஏம் நொட் ஹெப்பி தெரியுமோ. எண்டாருங்கோ.

சோறி மேனன் சார். தமிழ் கூட்டமைப்புடன் பேசினீர்களே அதுவும் அப்பிடியா?

மேனன். அதையேன் கேக்கிறீயள்?, எல்லோரும் ஒ ற்றுமையாகத்தானே இருக்கிறியள் எண்டு கேக்கிறன் அதை கிட்டடியில அறிவிப்போம் என்கிறார் சம்மந்தன். பிறகு தெரிவுக்குழுவுக்கு போறதைப் பற்றி என்ன நிலைப்பாடு? எண்டு கேக்கிறன் அதுக்கு தமிழ் மக்கள் வடக்குத் தேர்தலில வாக்குத்தர வேணும். பிறகுதான் யோசிக் கலாம். எண்டு சொல்லுறாருங்கோ.

என்னப்பா கூட வந்திருக்கியளே, நீங்கள் ஏதும் சொல்லப் போறீங்களோ? மற்றப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டேன். அதுக்கு பொது வேட்பாளரா?, தமிழரசுக் கட்சி வேட்பாளரா? எண்டது முடிவானதுக்குப் பிறகுதான் வாய் திறக்கிறதா? எதைத் திறக்கிறது எண்டதை முடிவு பண்ணுவம் எண்டு சுரேஸ் சொன்னார். அவர் அப்பிடிச் சொல்லிப்போட்டு சங்கரியையும், செல்வத் தையும் பார்க்கேக்க அவை கொடுப்புக்குள்ள சிரிச்சிச்சினம்.. அவையின்ர சிரிப்பைப் பார்த்தால் ஏதோ உள் வீட்டுச்சதி ஒண்டு தயாராகுது போலை.

அப்ப அரசாங்கப் பக்கம் நடந்த சந்திப்புக்கள் பற்றி என்ன சொல்லுறியள்?

நான் எதைச் சொல்லுறது. புத்தகாயாவில் வெடிச்ச குண்டைக் கொண்டுவந்து வட கிழக்குக்கு பொலிஸ் காணி அதிகாரம் கொடுக்கிறதோடை லிங்க் பண்ணி நான் போட்ட ஒவ்வொரு போலுக் கும் சிக்ஸர் சிக்ஸரா அடிச்சு என்னை களைச்சுப் போகச் செய்திட்டாங்கள்.

அப்பிஎன்னா இந்தியாவுக்கு வந்த எங்ட அமைச்சரின்ர பயணம் போலை, உங்கட இலங்கை பயணமும் அப்பிடி ஒண்ணும் சொல்லிக் கொள்ளும்படியான வெற்றியானதாக கூற முடியாது அப்பிடித்தானே?

அப்பிடித்தான் எண்டு வச்சுக் கொள்ளுங்கோவன். இப்பிடியே போனால் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் உறவுகள் எப்பிடிப் போகும்?

அதுபற்றித்தான் இந்த விஸ்கியை குடிச்சுக் கொண்டு யோசிச்சுக்கொண்டு இருந்தனான். அதை யும் நீர் குழப்பிப் போட்டீரே.

"அய்யோ பாவம்... சாரி சார்... எனக்கு முன்னமே அப்பாய்மெண்ட் கிடைச்சிருந்தால் எந்தக் குழப்பம் வந்திருக்காது. எல்லாம் தலைவிதி சார். எல்லாம் தலைவிதி யாரைலை மாத்த முடியும்.. சார். எனக்கு எக்னொமிக் கிளாஸ் சீட் தான். நான் சுச்சாவுக்கு பாத் ரூம் போறன் எண்டுதான் இந்தப் பக்கமாக வந்தனான். கண்டால் கத்துவாங்கள் நான் போறன் இனியாச்சும் அதை ஆறுதலா குடியுங்கோ. அங்க நீங்கள் போய் இறங்கினதும் பயணம் பற்றி ஒரு கதையை சொல்ல வேணுமெல்லோ.

தேங்க்ஸ் மிஸ்டர் கந்தஸ் தேங்க்ஸ். ஒரு ரவுண்டை ஏத்திப் போட்டு திங் பண்ணினால்தான் தெளிவாக நாடு போய்ச்சேர முடியும் எண்டு அவர் சொல்லுறாருங்கோ.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# காட்டு ராஜாவை உருவாக்கியவர்



**மேற்குப்** பகுதியில் பணிபுரியும் மிகக் கடினமான குதிரைப்படையில் அத்தனை சின்னஞ்சிறு வாலிபர் களைச் சேர்க்கமாட்டார்கள்.

1891இல் அந்த இளைஞன் இந்தப் படைப்பரிவில் சேரும்போது அவனுக்குப் பதினாறு வயதுதான் என்று அவர்களுக்குத் தெரியாது. இராணுவத்தில் சேரும் ஆர்வத்தில் அவன் தன் வயதைக் கூட்டிக் கூறிவிட்டான்.

ரோந்து பார்த்துக்கொண்டு சென்ற படைகள், தங்களுக்கு இடப் பக்கத்திலிருந்த மலைப் பிரதேசத் திலிருந்து யுத்த நாதம் செய்தபடி ஏராளமான செவ் விந்தியர்கள் குதிரை மீது தங்களை நோக்கி பாய்ந்து வருவதைக் கண்டான், அந்தப் பதினாறு வயதுப் பையன்.

அவனிடம் இருந்த சிறிய கைத் துப்பாக்கியில் ருந்து தீர்ந்து போய் இருந்தது. படையின் சார்ஜண்டி டமிருந்து உத்தரவு பிறந்தது. "சுடுங்கள்!" அந்த இளை ஞனும் அவனது சகாக்களும் வெள்ளமெனப் பாய்ந்து வரும் செவ்விந்தியர்களையும் அவர்களிடமிருந்து மின்னலென வெளிப்படும் தாக்குதல்களையும் கண்டு திகைத்துப் போனார்கள். செவ்விந்தியர்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் அமெரிக்க வீரர்கள் ஒவ்வொருவராகக் கீழே விழுந்து கொண்டிருந்த போதிலும் அந்தச் சின்ன வயது இளைஞன் மட்டும் தொடர்ந்து சுட்டுக்கொண்டிருந்தான். அதுவும் அவனது குறி செவ்விந்தியர்களின் தலைவனாக இருந்த ஓர் இளைஞன் மீதே இருந்தது. இந்தச் செவ்விந்திய வீரன் குதிரையை விரட்டி ஓட்டிய லாவகம், போரிட்ட முறை எல்லாமே அற்புதமாக இருந்தன. அமெரிக்கத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் செவ்விந்தியப் படை மலைப் பிரதேசத்தை நோக்கி பின்வாங்கியது.

[தொடரும்]

# இந்தவாரம் உங்கள் பலன்

(18.07.2013 தொடக்கம் 24.07.2013 வரை)

## மேடம்

வங்கிகளின் மூலமாக எதிர்பார்த்திருந்த கடன் உதவித் தொகைகள் கிடைத்து வீட்டைத் திருத்திக் கட்டுவதற்கு முயற்சிசெய்வீர்கள். வெகுகாலமாக மறைமுகமாக இருந்து வந்துள்ள எதிரிகளின் தொல்லைகள் தீரும். வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இதுநாள் வரையில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். செய் தொழிலில் பங்காளிகளுடன் மிகவும் எச்சரிக்கை யுடன் இருக்கவும். காதல் விசயங்களில் வெற்றி தேடித் தரக்கூடிய காலமாகும். உடம்பில் வயிறு மூலம் சம்பந்தமான உபாதைகள் வந்து நீங்கும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

நண்பர்களிடம் காரணமற்ற மனக்கசப்புகள் ஏற்பட்டு பிரச்சினைகள் உருவாகலாம். உத்தியோகம் செய்பவர்களுக்கு இடையூறுகள் வந்துபோகும். விருந்தினர்களின் வரவால் பொருட் செலவுகள் உண்டாகும். வெகுகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் கை வந்து சேருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உடம்பில் கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். புதிய வீடு, நிலம் வாங்குவது போன்ற விசயங்களைச் சற்றுக் காலதாமதமாக செய்வது உகந்ததாகும். காதலர்கள் கவனமாக இருக்கவேண்டும். உற வினர்கள் மற்றும் நண்பர்களின் திடீர்வரவுகளால் பொருட்செலவுகள் வந்துசேரும். வெளிநாட்டில் இருப்பவர்கள் தாய்நாடு சென்றுவருவீர்கள்.

## இடபம்

வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த கடன் கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களின் சேர்க்கையால் பொருள் இழப்பும், வீண் பிரச்சினைகளும் ஏற்படும். நீண்டதூரப் பயணங்களைத் தள்ளிப்போடவும். பெண்களால் தூரத்தில் நற்செய்திகளைக் கேட்பீர்கள். திருட்டுப் போன பொருட்கள் திரும்ப வீடு வந்துசேரும். உடல்நலத்தில் மூலம் வயிறு சம்பந்தமாகிய தொல்லை கள் வந்துபோகும். மூத்த சகோதரர்களால் குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகளைச் சந்தித்து மனநிம்மதி குறையலாம். விசா சம்பந்தமான பிரச்சினைகள் தீருவதற்கான வாய்ப்புகள் உள் ளது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

உத்தியோகம் பார்ப்பவர்கள் மேலதிகாரி களிடம் முன்கோபத்தை தவிர்த்து மிகவும் எச்சரிக்கையுடன் பணி ஆற்றுதல் நல்லது. கண் மற்றும் காதுகளில் கவனம் தேவை. தொலைதூரப் பயணங்களில் மிகவும் கவனமுடன் சென்றுவரவும். நண்பர்களால் சிற்சில பிரச்சினைகள் வந்துவிலகும். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். தனப்புழக்கம் நன்றாக இருக்கும். காதல் சம்பந்தமான விசயங்களில் சற்று எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும். நீண்டகாலமாக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த பணம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிகளும் மற்றும் நற்பெயர் புகழும் உண்டாகும் காலமாகும். பிள்ளைகளுக்கு இதுவரையில் தடைப்பட்டு வந்த திருமண போன்ற சுப காரியங்கள் நிறைவேறும்.

## மிதுனம்

பிள்ளைகளின் உடல்நிலையில் பாதிப்பு கள் ஏற்பட்டு பொருட்செலவுகள் உண்டு. காதல் சம்பந்தமான பெண்கள் விசயத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். புதிய தொழில் களை ஆரம்பம் செய்வதற்கான முயற்சிகளைச் சிறிது காலம் தள்ளிப்போடுதல் நல்லது. உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்து நீங்கும். கொடுக்கல் வாங்கலில் நாணயம் காப்பாற்ற இயலாத நிலை இருப்பதால் புதிய கடன்வாங்குவதைத் தவிர்க்கவும். யாத்திரையின்போது சம்பந்தம் இல்லாத விசயங்களுக்காக வீண் பிரச்சினைகள் வந்துவிலகும். பொருளாதாரத்தில் இன்னும் சில நெருக்கடிகள் உண்டாகும் பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.

## தனுசு

முன்கோபம் தவிர்த்தல் உகந்ததாகும் உத்தி யோகத் துறையினர்களுக்கு பதவி உயர்வு களுடன் கூடிய பணி இடமாற்றம் ஏற்படக்கூடும். எதிர்பாராத விருந்தினர்கள் வரவால் சில ஆதாயங் களை அடையலாம். குலதெய்வ வழிபாடு செய்து வருவது நல்லது. தாய், தந்தையர்கள் உறவு-களில் வந்துள்ள பிரச்சினைகள் தீரும். வெளிநாடு செல்லுவதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும். தென்திசையில் இருந்து பெண்களால் ஆதாயம் உண்டாகும். சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுத்தொண்டுகளில் ஈடுபட்டு மனநிறைவடைவீர் கள். தீராத பிரச்சினைகளுக்கு பெரிய மனிதர்கள் உதவியால் தீர்வுகள் கிடைக்கும்.

## கடகம்

பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் இதுநாள் வரையில் தடைப்பட்டுவந்த திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்கும். காரணமற்ற சிறிய விசயங் களுக்காக கலைத்துறையினர்களும் அரசியல்வாதி களும் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. வராத கடன் கொடுத்து இருந்த பணம் திரும்பக் கைக்கு வந்துசேரும் காலமாகும். எழுத் துப்பணி செய்வோர்கள், வங்கிப் பணியாளர்கள், காய்கறிகள், இலை கீரை போன்ற உணவுப் பொருட் களை ஏற்றுமதி - இறக்குமதி செய்யும் வியா பாரிகள், தபால் தந்தி துறையைச் சார்ந்தவர்கள், அச்சுத் தொழில் செய்வோர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள்.

## மகரம்

புதிய ஆடை அணிகலன்களை வாங்கு வதற்கு முயற்சிப்பீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய கூட்டுத்தொழில் செய்வதற்கான முயற்சிகளை சற்று தள்ளிப்போடவும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் குறைந்து மனஅமைதி ஏற்படும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகள் இடமாற்றம் ஏற்படலாம். திருமணம் ஆகாதவர்களுக்கு மணமாகும் காலமாகும். ஒரு சிலருக்கு நண்பர்கள் மற்றும் பங்காளிகளால் ஆதாயம் உண்டாகும். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறிப் பொருளாதாரம் சீராக இருக்கும்.

## சிங்கம்

விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தொடரும். வெளிநாடு சென்றுவரு வதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடவும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட் களை கடன் கொடுப்பதை தவிர்த்தல் நல்லதாகும். ஆலய வழிபாடுகளால் மனநிம்மதி அடைவீர்கள். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் பணவரவு உண்டு. தந்தை - மகன் உறவுகள் சுமாராகக் காணப்படும். புதிய கடன்வாங்கிப் பழைய கடனை அடைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ளது. பிரிந்துபோன பழைய உறவுகள் மீண்டும் ஒன்றுசேரும் காலமாகும்.

## கும்பம்

பிள்ளைகளால் எதிர்பாராத தனவரவுகள் உண்டாகுவதோடு அவர்களால் பொருட் செலவும் உண்டாகும். உத்தியோகத் துறையினர் களுக்குப் பணி இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் தேடிவரும் காலமாகும். ரேஸ் லாட்டரி போன்றவற்றின் மூலம் திடீர் தனவரவு உண்டு. வரவேண்டிய சொத்துக்கள் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும். நண்பர்களால் வீண் பொருட்செலவுகளும் மனநிம்மதி குறைவும் ஏற்படலாம். திருமணம் போன்ற சுபகாரிய விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

உடல்நிலையில் கண், காதுகளில் கவன முடன் இருக்கவும். நீண்டகாலமாக வராத கடன் கொடுத்த பணம் திரும்பிக் கைவந்து சேரும். காதல் விசயத்தில் நல்ல தகவல்கள் வந்து சேரும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படா தீர்கள். குலதெய்வ வழிபாடு செய்து வருவதற்கான முயற்சிகள் தடையின்றி நிறைவேறும். புதிய நண் பர்களின் சேர்க்கையால் மனமகிழ்ச்சி உண்டாகும். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய தொழில்கள் ஆரம்பம் செய்யப்போட்ட திட்டங்கள் நிறைவேறும். பிறர் நடத்திக்கொண்டிருக்கும் தொழில் ஸ்தாபனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் நண்பர்களின் ஆதரவுகள்மூலம் நிறைவேறும்.

## மீனம்

வீடுகளில் கவனமுடன் இருந்தால் திருட்டுப் போவதை தடுக்கலாம். புதிய ஆடை, அணிகலன் ஆபரணங்களை வாங்குவீர்கள். நண்பர்கள் மற்றும் உரவுகளின் மூலமாக எதிர்பாராத பொருட்செலவுகள் வரக்கூடும். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக வெளியூர் பிரயாணங்களை மேற்கொள்ள நேரிடும். செய்தொழிலில் இருந்துவந்த பிரச்சினைகளில் மேலும் சற்றுப் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தை - மகன் உறவில் பிரச்சினைகள் வரவாய்ப்பு உள்ளதால் கவனமுடன் இருக்கவும். உடம்பில் முதுகு மற்றும் கால்களில் நோய்கள் வந்துவிலகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது.





## தொலைபேசியால் வந்த வினை

18 வயதுடைய இளம் பெண் ஒருவர் கையடக்க தொலைபேசியினை (Samsung Galaxy S3) ஜீன்ஸ் பொக்கட்டினுள் வைத்தவாறு பணியிடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்துள்ளார். அப்போது திடீரென நெருப்பு புகைவது போன்று நாற்றம் எடுக்க அனைவரும் கவனித்தவாறு ஒருவரை ஒருவர் பார்த்துள்ளனர். வெப்பத்தின் கொடுமை தாங்காமல் குறித்த பெண்ணின் பொக்கெட்டில் வைக்கப்பட்டிருக்க தொலைபேசி உருகி அவரையும் அவரது பொக்கட்டையும் பதம் பார்த்துள்ளது.





நீண்ட காலத்திற்குச் சலவை செய்யாமல் பயன்படுத்தக் கூடிய ஆடையொன்றை அமெரிக்க நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது என்ற சுவையான செய்தி அண்மையில் வெளியாகியிருந்தது. அதை மிஞ்சும் வகையில் இன்னொரு தகவல் இதோ!

டெக்சாஸ் நகரைச் சேர்ந்த 63 வயதான ஆசிரியர் ஒருவர் கடந்த நாற்பது வருடங்களாக ஒரே உடையுடன் பாடசாலைக்கு சென்றிருக்கிறார். அண்மையில் கல்லூரியின் பழைய படங்களை எடுத்துப் பார்த்தபோது நிர்வாகமே வியப்பில் ஆழ்ந்து விட்டதாம்.



## ஒரே உடையுடன்





## சாதனை

ஊசியின் கண் அளவு இடத்தில் பைபிள் வசனத்தை எழுதி சாதனை படைத்துள்ளார் பிரிட்டனை சேர்ந்த கிரகாம் ஷார்ட். பிரிட்டனை சேர்ந்தவர் கிரகாம் ஷார்ட்(வயது 67), இவர் மிகச் சிறிய எழுத்துக்களில் அதாவது ஊசியின் கண் அளவு இடத்தில் பைபிள் வசனத்தை எழுதி சாதனை படைத்துள்ளார். மைக்ரோஸ்கோப் வழியாக மட்டுமே பார்க்கக்கூடிய அந்த எழுத்துகள் அடங்கிய தங்க ஊசி, பிரிட்டனில் நடந்த கண்காட்சியில் 80 இலட்ச ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதனை உருவாக்க இவர் 320 மணி நேரம் கடுமையாக உழைத்துள்ளார்.

"ஊசியின் கண் வழியே, ஒட்டகங்கள் சென்றாலும், இறைவன் இடத்தை பணக்காரர்களால் அடைய முடியாது" என்ற வசனத்தையே அவர் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



தெற்கு யார்க்கூயரில் உள்ள ரோதர்ஹாம் நகரை சேர்ந்தவர் ஸாரா ஹார்ட்ஷார்ன். 16 வயதேயான ஸாரா, அரிய வகை மரபணு பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனால் இவரது தோல் சுருங்கி வயதான நபர் போன்று காட்சிதருகிறார், கிட்டத்தட்ட 60 வயது மூதாட்டி போன்று உள்ளார்.

இவரது தாய் டிரேசி ஜிப்சனுக்கும் இதேபோன்றதொரு பிரச்சினை உள்ளது. இந்நிலையில் ஸாராவின் பிரச்சினை குறித்து அறிந்த அமெரிக்க மருத்துவர் ஒருவர், முகச் சீரமைப்பு அறுவை சிகிச்சையை இலவசமாக செய்துள்ளார்.

இதனையடுத்து ஸாராவின் முகம் நிறைய மாறிவிட்டதாம். இதனால் மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்தில் இருக்கும் ஸாரா, கல்லூரி செல்வதற்கும் தயாராகி விட்டாராம்.



## மரபணு மாற்றம்

"மனிதன் பறவையைக் கண்டான். விமானம் படைத்தான்..." என்று பழம்பெரும் கவிஞர் ஒருவர் எழுதிய திரைப்படப் பாடல் இன்றைய சந்ததியினர் அறிந்திருக்கின்றனரோ இல்லையோ சிந்தனையோட்டம் அவ்வாறே இருக்கின்றது என்பதற்கு இந்தப் படமும் ஒரு எடுத்துக்காட்டு. நம்மூர்களில் வீதியில் ஊர்ந்துசெல்லும் சிற்றூர்திகளில் பயணிகளுக்கு ஏற்படும் அவஸ்தையை புரிந்துகொண்ட குறும்புக்கார இளைஞன் ஒருவனின் பொழுதுபோக்கு இது. பார்க்க சுவாரஷியமாகத்தான் இருக்கின்றது.

## ஆஹா...



## துரதிர்ஷ்டம்



மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற முக்கோணத் தொடரில் இறுதிப் போட்டியில் இறுதி ஓவரில் டோனியின் அபாரமான ஆட்டத்தால் இந்திய அணி கோப்பையைத் தனதாக்கிக் கொண்டது. இறுதிவரை போராடி துரதிர்ஷ்ட வசமாக கோப்பையை இழந்திருக்கிறது இலங்கை அணி.

இலங்கையின் இளம் தலைவர் மத்தியூஸ் பலரையும் விழியுயர்த்தும் வகையில் மிகவும் திறமையாக தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியிருந்தார். களத்தடுப்பு வியூகம், பந்துவீச்சு, அஸ்திரமான லசித் மாலிங்கவைப் பயன்படுத்திய லாவகம் என்பன பலரது பலரையும் வியக்க வைத்தது. எனினும் கோப்பையைத் தூக்கிப்பிடிக்கும் வாய்ப்பு இறுதி ஓவரில் தவறிப்போனது துரதிர்ஷ்டம் என்று அன்றி வேறு என்ன சொல்வது?!

